REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 நவம்பர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 85

## • தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு முன்வைக்காத • பொருளாதார நெருக்கடிக்கு மாற்று வழி காட்டாத



## சர்வாதிகார கதிரை யாருக்கு?

# ஜனாதிபதி தேர்தலை நிராகரிக்க வேண்டும்

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் யார் வெற்றிபெறுவார் என்பது பற்றி ஊடகங்கள் மக்களை குழப்பியடித்து வருகின்றன. யார் வென்றால் என்ன? யார் தோற்றால் என்ன? இந்தப் பதவி அறிமுகம் செய்யப்பட்டு 27 வருடங்களாகின்றன. இந்தக் காலப் பகுதியில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகள் எவை? தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதா? மக்களின் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறைந்துள்ளனவா?

ஜனாதிபதியின் அதிகாரமோ நறைவேற்று அதிகாரம் வரையறையற்ற அதிகாரம். நாட்டின் தலைமைப் பதவியாக அது அறிமுகம் செய்யப்பட்டு 27 வருடங்களில் 20 வருடங்கள் தமிழ்மக்கள் மீது தொடர்ச்சியாக யுத்தம் புரியப்பட்டுள்ளது. 1980 இல் வேலை நிறுத்தம் முறியடிக்கப்பட்டு அதில் ஈடுபட்ட எண்பதினாயிரம் ஊழியர்கள் தொழிலாளர்களின் வேலை பறிக்கப்பட்டது. ஒருபக்கம் இன அழிப்பு நடவடிக்கைகளாலும் மறுபக்கம் ஏகாதிபத்திய பொருளாதார நடவடிக்கைகளாலும் நாட்டின் சாதாரண தொழிலாளர் விவசாயிகளினது இருப்பே பிரச்சினையாகிவிட்டது. பிரதான தொழிற்துறைகள் சீரழிக்கப்பட்டுவிட்டன. பெருந்தோட்டத்துறை மீண்டும் தனியாரிடம் ஒப்படைக்கபட்டதனால் தோட்டத் தொழிலாளர்கள் தொழில் ரீதியான பாதுகாப்பை இழந்துவிட்டனர். சம்பளஉயர்வு மறுப்பு தொடரப்படுகிறது அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கட்டு ப்பாடில்லாமல் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன. பொதுப் போக்குவரத்து என்பது முற்றாக சிதைக் கப்பட்டு சீரழிக்கப்பட்டுவிட்டது. இலவசக் கல்வி மருத்துவம் சுகாதாரம என்பன சீரழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது,

## வாக்குச் சீட்டை செல்லுபடி அற்றதாக்குங்கள்!

யுத்தத்தினாலும், சுனாமியாலும் லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இருக்க உள்நாட்டு பெருவசதி வாய்ப்புக் கொண்ட மேல் தட்டு வர்க்கத்தினர்.சொகுசாக வாழ்க்கை நடத்தி வருகின்றனர். பல்தேசிய கம்பெனிகள் அவற்றின் சந்தைக்கு வாய்ப்பான இடமாக இலங்கையை இறுகப் பற்றிக் கொண்டுள்ளன. உள்நாட்டு வெளிநாட்டு உயர்வர்க்க மேட்டுக்குடிகளில் இருந்து வருவோரால் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள் ஏனைய களியாட்ட மையங்களும் விடுதிகளும் நிரம்பி வழிகின்றன. ஆனால் நாட்டின் ஏகப்பெரும் பான்மையான சாதாரண மக்களின் நிலை அன்றாட வாழ்க்கை என்ன? அதேவேளை இன மத குரோதத்தினால் மக்களின் மனங்கள் நச்சுத்தனமாக மாசடையச் செய்யப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு வாழ்க்கையும் ஐக்கியமும் சிதைக்கப்பட்டுள்ளது.

அதிகார வர்க்கத்தின் அத்துமீறல்களால மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மனித ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே மக்கள் வாழ்கின்றனர்.

பொலிஸ் நிலையங்களும் சிறைக் கூடங்களும் சித்திரவதை முகாம்களாக மாறி வந்துள்ளன. சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்கு பாதுகாப்பே இல்லை. கொலைகள் கொள்ளைகள் பாலியல் வல்லுறவுகள் பண மோசடிகள் திட்டமிட்ட வழிகளில் அதிகரித்துள்ளன.

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

## வடக்கு கிழக்கிற்கு பிராந்திய சபையாம் ரணில் போட்டுள்ள தேர்தல் குண்டு !

"வடக்குக் கிழக்கிற்கு அதிகாரங்கள் கூடிய பிராந்திய சபை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும். இது பற்றி ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேசியுள்ளேன். அவரும் அதனை வரவேற்றுள்ளார். சமஷ்டி பற்றிக் கூறுகிறீர்கள் எந்த அடிப்படையில் அதனைக் கொண்டுவர இருக்கிறீர்கள் என்று என்னிடம் கேட்போருக்கு இதனையே கூறிவைக்க விரும்புகின்றேன். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்கா தேர்தல் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார். மேற்படி கருத்தை கடந்த 25-10-2005 அன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுடன் நடாத்திய பேச்சுவார்த்தைக்குப் பின்பே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அறிவிப்பு ஏற்கனவே அவர் வெளியிட்டுள்ள மக்கள் "நிகழ்ச்சி நிரல்" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லாத ஒன்று என்பதால் இதனை ஒரு தேர்தல் குண்டு என்றே கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இதுவரையான தங்களது வாக்கு வங்கியைக் கணக்கிட்டபின் தனது வெற்றியை உறுதிப்படுத்த மேலும் ஒரு தொகை வாக்குகள் தேவைப்படுவதால் அதனை வடக்கு கிழக்குலும் அதற்கு அப்பாலும் வாழுகின்ற தமிழ் மக்களின் வாக்குகளை வாரி எடுத்துக் கொள்ளவே பிராந்திய சபை என்ற வாய்மொழிவாக்குறுதி வழங்கப்பட்டுள்ளது. எழுத்து மொழி மூலமான வாக்குறுதிகளே கிழித்தெறியப்பட்ட இனப்பிரச்சினை வரலாற்றில் வாய்மொழி மூல வாக்குறுதிகளுக்கு என்ன நடக்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதம் இருக்க முடியாது. ஆனால் ஜனாதிபதிப் பதவிக்கான வெற்றியைப் பெறுவதற்கு ➡

## புறக்கணிக்குமாறு கேட்க தயக்கம் ஏன்?

ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வு முன்வைக்கப்பட வில்லை என தமிழ் ஊடகங்களில் விமர்சன கண்டன கட்டுரைகள் எழுதுகிறார்கள் ஆனால் இவர்களில் ஒரு வராவது பேரின வாத நிலைப்பாடுடைய இவ் ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்கும்படியோ அல்லது நிராகரித்து எதிர்ப்பைத் தெரிவிக்கும் படியோ எவ்வித கருத்தையும் முன் வைக்கவில்லை. இது ஏன்? உள்ளுர் ஒதோ ஒரு பக்க சார்பு இருப்பதே காரணமாகும்.

## மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை ரணில் - மகிந்த பெற்றுக் கொடுப்பார்களா?

மலையக மக்களின் மொத்த வாக்குகள் ஒன்பது லட்சம் என்று கூறப்படுகிறது. இந்த வாக்குகளைப் பெற்றுக் கொள்வதில் ரணில் விக்கிரம சிங்காவும் மகிந்த ராஜபக்ஷவும் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர். அதற்காக இவர்கள் இருவரும் மலையகத் தமிழ் மக்களிடம் நேரடியாகச் சென்று அவர்கள் எதிர் நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளுக்குரியவற்றை உரிமைகளாகத் தருகின்றோம் என்று வாக்குறுதி வழங்கத் தயாராக இல்லை. ஏனெனில் அவ்வாறு அவர்களுக்குரியவற்றை வழங்குவதற்கு இவ் இரு பிரதான வேட்பாளர்களுக்கும் முடியவே முடியாது. அவர்கள் ஊறிக் கொழுத்த முதலாளித்துவ பேரினவாத நிலைப்பாடு எவ்வகையிலும் இடம் கொடுக்க மாட்டாது.

எனவே தான் மலையக மக்களின் தலைமைகள் எனப்பட்ட தொழிற்சங்க அரசியல் தலைமைத்துவங்களை வளைத்துப் பிடித்து வாக்குகளைப் பெற்றுக் கொள்ள இரண்டு வேட்பாளர்களும் முன்நிற்கிறார்கள். பிரசாவுரிமை- வாக்குரிமை தந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் என்ற பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பிரசாரத்தைப் பற்றி மலையக மக்கள் குறிப்பாக இளந் தலைமுறையினர் சிந்திப்பது அவசியம். மலையக மக்கள் இந்நாட்டின் ஏறத்தாள இரு நூறு வருடங்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்த மக்கள் சமூகம். அவர்களது அடிப்படை மனித-ஜனநாயக உரிமை என்ற வகையில் பிரசாவுரிமையும் வாக்குரிமையும் உடையவர்களாகவே வாழ்ந்தவர்கள். அவற்றை 1948ல் பறித்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்.

அதன் பின்பு மலையக மக்கள் தங்களது பறிக்கப்பட்ட பிரசாவுரிமை-வாக்குரிமைக்காக தொடர்ந்து போராட்டங்கள் நடாத்தி வந்தனர். அதன் விளைவாகவே 1986ம்-88ம் ஆண்டுகளில் பிரசாவுரிமை வாக்குரிமை முழுமையாகப் பெற முடிந்தது. அன்று பறித்தவர்களான ஐக்கிய தேசியக் கட்சியினரே மீண்டும் அவற்றை வழங்க சட்டம் நிறைவேற்றினர்.

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வடபுலத்தில் இரண்டு அதிபர்கள் கொலை! பேரினவாதிகள் சாதிவெறியர்கள் குதூகலிப்பு!

கடந்த மாதம் 11ம் 12ம் திகதிகளில் இரண்டு பிரதான கல்லூரிகளின் அதிபர்கள் அடுத்தடுத்து கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந. சிவகடாட்சம். மற்றவர் யாழ்- மத்திய கல்லூரி அதிபர் க. இராசதுரை. முன்னவருக்கு 54 வயது. பின்னவருக்கு 53 வயது. இருவரும் மனைவி பிள்ளைகளைக் கொண்ட குடும்பஸ்தர்கள். அதிபர் சிவகடாட்சம் இரவு அவரது வீட்டில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அதிபர் இராசதுரை கல்வித்துறை சார்ந்த பொது நிகழ்வுக்கு வந்த இடத்தில் வீரசிங்கம் மண்டப வாசலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இரண்டு அதிபர்களும் கல்வி கற்பித்தல், பாடசாலையின் வளர்ச்சி, மாணவர்களின் நலன்கள் கட்டுப்பாடு, ஒழுக்கம் என்பனவற்றில் அதிக அக்கறை கொண்டவர்கள். இதனை கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியினதும் யாழ்- மத்திய கல்லூரியினதும் வளர்ச்சியிலும் முன்னேற்றங்களிலும் காணலாம். இதனை வடபுலத்து கல்விச் சமூகம் ஒரு முகமாக ஏற்றுக்கொள்ளவே செய்யும்.

மேலும் விடயங்களை நோக்குமிடத்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபரிடம் சமூக அக்கறைகள் இருந்து வந்துள்ளன. குறிப்பாக தமிழ்த்தேசியத்தின் மீதான பற்றும் அக்கறையும் இருந்து வந்தது. அதன் வெளிப்பாட்டை தேசிய எழுச்சிப் பேரவை ஊடாக வெளிப்படுத்தி அதற்கான வேலைகளிலும் பங்கெடுத்து வந்தவர். அவ்வாறே யாழ். மத்தியகல்லூரி அதிபர் இராசதுரை சமூக அக்கறை கொண்டவர். அவர் யாழ்ப்பாண சாதியப் படிநிலைச் சமூகச் சூழலில் அடிநிலைச் சாதிய வகுப்பில் இருந்து வந்தவர். தென்மராட்சி மந்துவில் கிராமத்தைச் சேர்ந்தவர். அதன் காரணமாக அவரிடம் தாழ்த்தப்பட்ட சாதிய மக்கள் பற்றிய அக்கறைகள் இருந்து வந்தன. அச்சமூகங்களின் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதில் அதிக நாட்டங்காட்டி தன்னாலானவற்றைச் செய்தும் வந்தவர். அத்துடன் தனது கல்வி முயற்சியால் அதிபர் தர வரிசையில் முதலாம் இடத்தில் இருந்தவர். அதன் காரணமாக யாழ் நகரத்தில் அமைந்த பழம் பெரும் கல்லூரியும் தேசியப்பாடசாலை அந்தஸ்தைப் பெற்றதுமான யாழ்- மத்தியகல்லூரியின் அதிபராக கடமை புரிந்தவர். அத்துடன் முன்பு வடமாகாண அதிபர்கள் சங்கத்தின் தலைமைப் பதவியையும் வகித்தவர். இவ்வாறான தத்தமது கல்வி சமூக அக்கறைகளை தத்தமக்குரிய நிலைகளில் இருந்து செயலாக்கி வந்த இரண்டு கல்வியாளர்களான அவ் இரு அதிபர்களும் துப்பாக்கி வேட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளனர். மனிதநேயமும் கல்வி சமூக அக்கறையும் கொண்ட எவருமே இக் கொலைகளைக் கண்டிக்கவும் வருத்தப்படவும் அனுதாபம் தெரிவிக்கவும் தயங்கமாட்டார்கள். இக் கொலைகளை மட்டுமன்றி எந்தக் கொலைகளையுமே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

இவ்விருகொலைகளைப்பற்றி தமிழ் சிங்கள ஆங்கில ஊடகங்கள் ஒவ்வொன்றும் தத்தமது நிலைப்பாடுகளுக்கு ஏற்ப ஒவ்வொரு கதை கூறுகின்றன. ஏனெனில் எவருமே இவ்விரு கொலைகளுக்கும் உரிமை கோரவில்லை. யாழ் குடநாட்டில் பாடசாலைப் பகிஷ்கரிப்பும் மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளும் இடம் பெற்றன. கொழும்பில் அதிபர்கள் ஆசிரியர்கள் கோட்டை புகையிரத நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். திருகோணமலையிலும் பகிஷ்கரிப்பு எதிர்ப்புக் காட்டப்பட்டது.

அதேவேளை இவ் இரு அதிபர்களும் கொல்லப்பட்டதை இரு தரப்பினர் மிகுந்த அக மகிழ்வோடு உள்ளூர வரவேற்றிருப்பார்கள். ஒரு பிரிவினர், தமிழ்த் தேசியத்தை வெறுத்து அதனை ஒடுக்க நிற்கும் ஆளும் தரப்பினரும் அவர்களுக்கு உறுதுணை நிற்பவர்களும் அதிபர் சிவகடாட்சத்தின் கொலையை உள்ளூர விரும்புவார்கள். அடுத்த பிரிவினர், சாதிய வக்கிரத்தை இன்றும் கைவிடாது அதன் ஊடாகவே அதிபர் இராசதுரையின் நிலைப்பை விரும் பாதவர்கள் அவரது கொலைக்காகக் குதூகலித்திருப்பார்கள்.

எவ்வாறாயினும் கல்வி கற்பித்தல், பாடசாலை வளர்ச்சி, மாணவர்கள் மீதான அக்கறை என்பனவற்றுடன் மட்டுமன்றி தத்தம் நிலைப்பாட்டின் ஊடாக சமூக அக்கறை கொண்டவர்களாகவும் இருந்து வந்த இரண்டு அதிபர்கள் முதல் நாளும் மறு நாளுமாகக் கொல்லப்பட்டமை சோகமானதாகும். அவர்களுக்கு நீட்டப்பட்ட துப்பாக்கிகளுக்கு எவருமே உரிமை கோரவில்லை என்பது மக்கள் தீர்ப்புக் கூறிக் கொள்ள உள்ள ஒரே தகுந்த சாட்சியமாகும்.

சாவகச்சேரி

மா. சற்குணம்

# மலையகத்தின் தன்மானம் எங்கே?

இ.தொ.கா ஒருபோதும் எதிர்க்கட்சியில் இருக்கமாட்டாது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அரசாங்கத் தரப்பிலேயே இருக்கும் என்ற மறைந்த முதிய தொண்டமானின் சத்தியவாக்கை சிரமேற்கொண்டு செயற்படுத்துபவர் தற்போதைய இளைய தொண்டமான். அவருக்கும் சரி இவருக்கும் சரி மலையக சமூகத்தின் தன்மானம் என்பது கால் தூசாகும். இவர்களை எதிர்த்து புயலாக வருகிறேன் எனக் கூவிக்கொண்டு மண் வெட்டியோடு புறப்பட்டவர் சந்திரசேகரன். மக்களைத் திரட்டுவார் மலையைப் புரட்டுவார் என்றால் எதிர்பார்த்த மலையக மக்களின் வாய்களில் மண்ணையே போட்டு தன் வாய்க்குரியவற்றை எல்லாம் ருசியாகப் பெற்றுக் கொண்டார். மலையக மண்ணைக் காப்போம் மலையகம் எங்கள் தாயகம் நாங்கள் ஒரு தேசியம். ஆக்கிரோசமாக மார்தட்டி முழங்கினாலும் தேர்தல் என்று வந்ததும் யூஎன்.பி.யின் காலடியில் சரணம் தான்இப்போது தம்பி ஆறுமுகமும் அண்ணன் சத்திரசேகரமும் யானையின் காலடியில் நிற்கிறார்கள். இவர்களை எதிர்த்து அதன் மூலம் பணம் பதவிக்காக நிற்கும் அடுத்த ஒரு கூட்டம் வெற்றிலைக்கு வாக்காலத்து வாங்கி நிற்கிறார்கள். இவர்கள் எல்லோரும் மலையக மக்களின் தன்மானத்தை விற்றுப் பிழைக்கும் கூட்டத்தினராவர். தேர்தல்கள் வரும்போது அதை இதைக் காட்டி மலையக மக்களை ஏமாற்றுவது இவர்களது வழமை. இதனை இளந்தலை முறை நன்கு உணர வேண்டும்.

# வவுனியா ஆடைத்தொழிற்சாலை

## தொழிலாளருக்கு சம்பள உயர்வு மறுப்பு

வவுனியா சென்றல் ஆடைத்தொழிற்சாலையில் சுமார் 400 தொழிலாளர்கள் தமிழ்ப் பிரிவு மூன்று முறிப்பிலும், சிங்களப் பிரிவு இரட்டை பெரியகுளத்திலும் வவுனியாவில் இயங்கிவரும் இரு தொழிற்சாலைகளிலும் தொழில் புரிகின்றனர். இந்த தொழிலாளர்களுக்கு சுமார் 2 வருடங்களாக எந்த வித சம்பள உயர்வும் வழங்கப்பட்வில்லை. தற்பொழுது அரசாங்கத்தில் வழங்கப்பட வேண்டும் என சட்டமாகக்கப்பட்ட ரூபா 1000/= இன்னும் வழங்கப்படவில்லை. இதற்காக தொழிளாலர்கள் கடந்த 14-10-2005 வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சுமார் 3 மாதங்களுக்கு முன்னரே நிர்வாகத்திடம் சம்பள உயர்வு வழங்குமாறு கேட்டுக் கொண்டபோதும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால் வேலை நிறுத்தத்தை அறிந்த வவுனியா தொழில் ஆனையாளர் ஸ்தலத்திற்கு விரைந்து வந்தார். இரு பகுதியினரையும் சமாதானப் படுத்த நடவடிக்கை எடுததார். தொழில் ஆணையாளர் கூறுகையில் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட 1000/= ரூபா கொடுப்பனவு பற்றி தங்களுக்கு எந்த வித சுற்று நிருபமும் இன்னும் அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை என்றும் ஆதலால் தொழில் தருனரிடம் தங்களால் 1000/= ரூபா சம்பள உயர்வு பற்றி தற்பொழுது கதைக்க முடியாது எனவும் தெரிவித்தார். இருந்த பொழுதிலும் இன்றைய வேலை நிறுத்தத்தை தற்காலிகமாக கைவிடும்படி கேட்ட தொழில் ஆணையாளர் தொழில் தருனரிடம் இது பற்றி கதைத்து எதிர் வரும் 20-11-2005ற்கு முன்னர் சம்பள உயர்வு அதாவது இன்றைய விலைவாசி உயர்வுக்கு ஏற்ற விதத்திலாவது பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். இந்த உறுதி மொழியினை நம்பி ஏற்றுக் கொண்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.

இத்தொழிற்சாலையில் நானூறு வரையான தொழிலாளர்கள் பத்து பன்னிரண்டு வருடங்களாக வேலை செய்து வருகின்ற போதிலும் சம்பள உயர்வு மற்றும் தொழிலாளர்களுக்கு உரிய உரிமைகள் சலுகைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே இருந்து வருகின்றனர். கடந்த செப்டம்பர் மாதத்தில் தனியார்துறை ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை சென்ற ஓகஸ்ட் மாதத்திலிருந்து கொடுக்கும்படி பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதனைக் கொடுக்க மறுக்கும் தொழில் தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் அச்சட்டத்தில் ஏற்பாடு உண்டு. அப்படி இருக்க வவுனியா சென்றால் ஆடைத்தொழிற்சாலையின் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு மறுக்கப்படுவது அநீதியாகும். இவ் அநீதிக்கு எதிராக தொழிலாளர்கள் மேலும் ஐக்கியப்பட்டு நின்று போராடுவதன் மூலமே சம்பள உயர்வையும் ஏனைய உரிமைகளையும் பெற முடியும்.

வவுனியா

சிவன்

# நாலும் நடக்கும் உலகிலே (நற்குணன்)

## பூச்செண்டும் பூச்சுற்றலும்

ரூபவாகினியின் 'ஐ' அலைவரிசையில் வார இறுதிகளில் உலக நிலவரங்கள் பற்றிய ஒரு கருத்துரைப்பு நிகழ்ச்சி நடக்கிறது. பொதுவாகவே விவரமறிந்த முறையில் உலக நிகழ்வுகளைப்பற்றிய ஒரு ஆய்வுக் கண்ணோட்டம் முன் வைக்கப்படும். செப்றெம்பர் பிற்பகுதியில் ஒரு நாள் வழமையாகக் கருத்துரைப்பவருக்குப் பதிலாக ஒரு புலம் பெயந்தவர் போலத் தெரிந்த ஒரு தமி ழர் பங்குபற்றினார்.

நேபாளம் பற்றிப் பேசிய அவருக்கு உலகின் ஒரே இந்து இராச்சியத்தை மாஓவாதிகள் கவிழ்க்க முயல்வதுதான் நேபாளத்தின் பிரசனையாகத் தெரிந்தது. அதுமட்டுமில்லாமல் ஒரு பயங்கரப் படுகொலையைத் தொடர்ந்து மன்னராக்கப்பட்ட மன்னர் க்யானேந்திராவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களெல்லாம் தவாறனவையாகத் தெரிந்தன. மதியூகமிக்க அந்த மாமன்னர் ஒரு நாள் ஆர்ப்பாட்டக்காரர் நடுவே தைரியமாக உலாவப் போனாராம். அப்போது ஆர்ப்பாட்டத்திற்கு வந்தவர்கள் பலர் அவருக்குப் பூச்செண்டு கொடுத்தார்களாம். இவ்வாறு மன்னர் மக்களைத் தன்பக்கம் திருப்பினாராம். இதென்ன பூச்சுற்றல் என்று யோசித்து இணையத்தில் தேடினேன்.

நடந்தது என்னவென்றால், பூரண ராணுவப் பாதுகாப்புடன் மன்னர் தனது ஆதரவாளர்கள் என்று சொல்லக்கூடியவர்களை போதிய முன்னேற்பாடுகளுடன் தெருவில் சந்தித்தார் என்பதுதான் உண்மையாக நடந்தது. இது ஒரு மலிவான அரசியல் விளம்பர வேலை.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மன்னருக்குக் கொடுக்கப் பூச்செண்டுகளைச் சுமந்து சென்றிருப்பார்களா என்று கூட யோசியாமல் சொன்னவருக்கு மற்றவர்களும் தன்போல மடையர்கள் என்ற நினைவா?

## இன்னமும் அதே மொழி ஆதிக்கந்தான்

யாழ்ப்பாணப் பேராசிரியர் ஒருவர் கல்வித்தொடர்பான ஒரு என். ஜி. ஓ சஞ்சிகையில் எழுதிய கட்டுரையொன்றில் தமிழரின் தாய்மொழிக்கல்விக்குத் தடையாக இருந்து வந்தது கொலனியச் சிந்தனை என்று விளக்கியிருந்தார். இன்று தடையாக இருப்பது சிங்கள மேலாதிக்கம் என்று குறிப்பிட்டிருந்தது சிறிது வியப்படையச் செய்தது. ஏனெனில் இன்றும் தமிழ் உயர் நடுத்தர வர்க்கத்தினரிடையிலும் வசதிபடைத்தோரிடையிலும் ஆதிக்கஞ் செலுத்துவது ஆங்கில, அமெரிக்க- ஐரோப்பிய மொழி - பண்பாட்டு மோகமே.

இந்தியாவில், தமிழகத்திலேயே ஆங்கில ஆதிக்கம் தொலைக்காட்சி முதல் பாடசாலைகள் வரை மிகவும் அதிகமாக உள்ளது. இதற்கு யாரைப்பழி சொல்வது?

உண்மையில் சிங்கள, இந்தி எதிர்ப்பு என்ற பேரிலாவது தமிழில் தீவிரமாகச் செயற்படுகிற கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆங்கிலத்தைப் பொறுத்தவரை, அது இன்னமும் எசமானத்துவத்தின் மொழியாகவே உள்ளது. நமக்குள் இன்னமும் அந்த எசமான விசுவாசமும் பயபக்தியும் ஒழியவில்லை. ஆங்கிலம் அதிகாரத்தில் இருந்தால் போதுமானது என்ற எண்ணம் நம் தலைவர்களிடமிருந்து போகும் வரை, நாம் கொலனியச் சிந்தனையிலிருந்து விடுபட முடியாது.

சிங்கள மேலாதிக்கத்துக்கு முகங்கொடுப்பதென்றால், தமிழ்க் கல்வித் துறையினர் தமிழரின் கல்வி பற்றிய தெளிவான ஒரு நிலைப்பாட்டுக்கு வருவது உதவும்.

## இயற்கையின் கொடுமையை மேலும் கொடியதாக்குவது யார்?

வடகிழக்குப் பாகிஸ்தான், கஷ்மீர் பிரதேசத்தில் இறந்தோரின் எண்ணிக்கை நாற்பதாயிரத்தைத் தாண்டிவிட்டது. இறப்புக்களில் மிகப் பெரியபகுதி கட்டிட இடிபாடுகளுள் சிக்கியதன் விளைவானது. மூன்று ஆண்டுகள் முன்பு குஜராத் நிலநடுக்கத்திலும் கட்டிடங்கள் இடிந்ததனாலேயே ஆயிரக் கணக்கானோர் இறந்தனர்.

பெரிய கட்டிடங்கள் பல தரமான கட்டிடப் பொருட்களால் சரியான முறையில் கட்டப்படாததாலேயே நொருங்கி விழுகின்றன. லஞ்சம் வாங்கும் அதிகாரிகளும் கொள்ளைலாபம் அடிக்கும் கட்டிடக் கொம்பனிகளும் ஒப்பந்தக்காரர்களும் இந்த உயிரிழப்புக்களில் பெரும் பகுதிக்குப் பொறுப்பேற்க வேண்டும். இவர்கள் யாருமே தண்டிக்கப்படுவதில்லை. இவர்கள் எதற்கும் நட்ட ஈடு கொடுப்பதுமில்லை. எல்லாச் சுமைகளும் திரும்பவும் உழைக்கும் மக்கள் மீதே சுமத்தப்படுகின்றன. இது அமெரிக்கா முதல் பாகிஸ்தான், இந்தியா, இந்தோனீசியா, இலங்கை வரை நாம் காணுகிற உண்மை. இது தான் முதலாளிய தருமம்.

## முந்திரிக்கொட்டைகள்!

தமிழ்மக்கள் ரணில் விக்கிரமசிங்ஹவையே ஆதரிக்க வேண்டும் என்று பேசி வருகிறார் பா.உ ரவிராஜ். அவருடைய கட்சியின் நிலைப்பாடு அது தானா? அல்லது அதை அவர் தீர்மானிக்க முயலுகிறாரா? இல்லாவிட்டால் அவரவர் விரும்பிய படி செய்யலாம் என்ற கட்சி நிலைப்பாட்டின்படி இப்படி நடக்கிறதா? பேசாமல் யூ என். பியிலேயே போய் அவர் ஒட்டிக் கொண்டால் மகேஸ்வரனுக்கு ஒரு நல்ல சோடியாக இருப்பார். இவர்களுக்கெல்லாம் கட்சிக்கட்டுப்பாடு என்று ஒன்றுங்கிடையாது. பழைய மூதாதையர் வழியில் சிந்திப்பதும் செயல்படுவதும் கூட்டமைப்பின் பா.உ.க்களுக்கு கை வந்த தேயாகும்.

## பேச்சு வானளவு பயணம் கால்நடை!

விஜயடயஸ் இருக்கிறாரே அவர் இன்னொரு கிரகத்திலிருந்து வந்திருக்கிற ட்றொட்ஸ்கிவாதி. அவர் சார்ந்த சர்வதேச அமைப்பில் உள்ள அமெரிக்கக் கட்சி சென்ற அமெரிக்க சனாதிபதி தேர்தலில் போட்டியிட்டதாம். அந்த வேட்பாளர் அதை ஒரு உலக நிகழ்வாகக் கருதி இலங்கையிற் கூடப் பிரசாரக் கூட்டங்களை நடத்தினாராம். இவ்வாறு விஜயடயஸூம் இலங்கையில் நடக்கும் தேர்தல் முழு உலகுக்கும் உரியது என்று நம்மிடம் சொல்லியிருக்கிறார். தன்னுடைய பிரசாரத்தை இந்தச் சின்ன நாட்டுக்குள் முடக்காமல் ஒரு உலக பயணத்தை மேற் கொள்ளலாமே என்று தோன்றுகிறது. உலகப் பயணம் மேற்கொள்ள ஒருவர் சனாதிபதியாக வேண்டிய கட்டாயம் எதுவும் இல்லையே!

சிங்களத்தில் ஒரு பழமொழி உண்டு: "கட்ட அஹஸின், கமன பயின்"

# மகிந்த சிந்தனையில் சமாதானம் வருமாம்
## அமைச்சர் டக்ளஸின் கனவா கற்பனையா?

நாட்டின் சமாதானத்தைக் கொண்டுவரக் கூடியவர் ரணில் விக்கிரமசிங்கா என்ற கட்டுக்கதையைப் பரப்புவதில் தனவந்தத் தமிழர்கள் ஈடுபட்டுவருகிறார்கள். மேலும் ஒருபடி மேலே சென்று சமஷ்டி மூலம் ரணில் தீர்வு கொண்டு வருவார் என்றும் பிரச்சாரம் வேகப்படுத்தப்படுகிறது. இதன் மத்தியில் தான் அமைச்சரும் ஈ. பி. டி. பி யின் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியானால் அமைதியும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்துவார் என்று ஆங்கிலத் தினசரி ஒன்றிற்கு கூறி இருக்கிறார். மகிந்த சும்மா சமாதானத்தை அல்ல நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வருவாராம். அத்துடன் மகிந்தவுடன் தாங்கள் ஒரு "எழுதாத ஒப்பந்தத்தின்" மூலம் தமது கோரிக்கைகளை வைத்தாகவும் அதனை அவர் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் கூறி உள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் வைத்த கோரிக்கைகளில் முக்கியமானதாகக் கூறப்படுவது வடக்கு கிழக்கு மாகாண சபையை மீண்டும் ஜனநாயக ரீதியில் இயங்க வைத்து அதனை தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதாகும். அத்துடன் அதற்கு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் சமஷ்டி நிர்வாக முறையினைத் தோற்றுவிக்க முடியுமாம். இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்து விடுமாம். தமிழ் மக்கள் தம் மீது நம்பிக்கை வைத்து இத்தேர்தலில் மகிந்தாவை வெற்றி பெறவைத்தால் தாங்கள் அவருடன் இணைந்து செயல்பட்டு ஒரு வருடத்திற்குள் இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு கொள்வார்களாம்.

டக்ளஸ் காண்பது கனவா? அல்லது நனைவா? என்றே கேட்கத் தோன்றுகிறது. மாகாணசபையை கடுமையாக எதிர்த்தவர்கள் ஜே.வி.பி யினர். வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடாத்தாது அதனை முடக்கிய பின்பே ஜே.வி.பி குத்துக்கரணம் போட்டு மாகாணசபைகளில் அங்கம் பெற்றது. ஒற்றையாட்சியின் கீழ் கிராம மட்டத்தில் மட்டுமே அதிகாரப் பரவலாக்கம் நடைபெற வேண்டுமே தவிர அதற்கு மேலாக எதுவும் வடக்குகிழக்கில் இடம் பெறக்கூடாது என்பது ஜே.வி.பி யின நிலைப்பாடு. ஜாதிக ஹெல உறுமய வடக்கு கிழக்கு ஒரே மாகாணமாகவும் ஒரே நிர்வாகமாகவும் இருப்பதைப் பிரிக்கமும் மரம் காட்டி நிற்பதுடன் வடக்கு கிழக்கு தமிழரின் பாரம்பரிய பிரதேசம் என்பதையே மறுத்து நிற்கிறது. இவ்விரு பேரினவாத வெறிபிடித்த கட்சிகளின் எழுத்திலான ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டே 'மகிந்த சிந்தனை' முன்வைக்கப்பட்டுள்ளது. அந்த வலிமையான பேரினவாத சிந்தனைக்கு முன்னால் டக்ளஸ் கூறும் எழுதாத ஒப்பந்தம் எத்தகைய இடத்தில் வைக்கப்படும். அடிமைத்தனமாக ஒரு மூலையில் தான் இருக்க முடியும். புலிகளை நிராகரிப்பது எதிர்ப்பது என்பதற்காக பேரினவாத வெறியடித்து நிற்கும் ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய என்பனவற்றோடு கைகோர்த்து 'மகிந்த சிந்தனை' மூலம் சமாதானமும் இணக்கப்பாடும் வந்துவிடும் என்று டக்ளஸ் கூறி வருவது உண்மையாகிவிட முடியாது. தத்தமது இருப்புக்கும் தேவைக்கும் பதவிக்கும் அதிகாரத்திற்கும் தான் இன்று ஜனாதிபதித் தேர்தலில் ரணில் பக்கமும் மகிந்த பக்கமும் அணிபிரிந்து நிற்கும் சக்திள் காணப்படுகின்றன. அதில் ஒன்றே ஈ பி. டி.பி யும் டக்ளசும் ஆவார்கள். இவர்கள் போன்றவர்கள் அனைவரையும் வைத்து கூட்டிக் கழித்துப் பார்த்தே "அரசியல் என்பது சாக்கடைக்குச் சமமானது" என்று யாரோ ஒருவர் கூறினாராம். அந்தப் பாராளுமன்ற சாக்கடை அரசியலே இன்று நாற்றமெடுத்து நிற்கிறது. ஆனால் மக்களுக்கான அரசியலை இந்த வகைக்குள் சேர்த்துவிடக் கூடாது. ஏனெனில் உண்மையான நேர்மையான மக்களுக்குரிய அரசியல் என்பது சமூக வாழ்வின் அடிப்படைத் தேவைகளின் அவசியமான ஒன்றாகும். அன்றாட வாழ்வில் அரசியல் என்பது உள்ளார்ந்த ரீதியில் ஒன்றியிருக்கிறது. அது முதலாளித்துவ அரசியலாகவும் தொழிலாளிவர்க்க அரசியலாகவும் தொழிற்படுகிறது. முன்னையது மேலோங்கும் போது சாக்கடையாகவும் நாற்றம் வீசுகிறது. பின்னையது மேவும் போது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பாதையில் பயணிக்கிறது. அங்கே சாக்கடை அரசியல் என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

# இவர் ஐ. தே. கட்சியின் அமைப்பாளர்

திலங்க சுமதிபால என்பவர் இலங்கையின் லட்சாதிபதிகளில் ஒருவர். இவர் இலங்கை கிறிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக முன்பு கடுமையான போட்டியின் மூலமாக தெரிவு செய்யப்பட்டவர். போட்டியில் தெரிவதானால் எந்தெந்த வழிகளில் செல்வாக்கு செலுத்த வேண்டும் என்பது எழுதி விளங்க வேண்டிய ஒன்றல்ல. ஏனெனில் கிறிக்கட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரானால் பல்லாயிரம் பல லட்சங்கள் எனப் புரளவும் புரட்டவும் பதுக்கவும் கூடிய ஒரு பதவி. இங்கு மட்டுமல்ல இந்தியாவில் கூட இப் பதவிக்குப் பயங்கரப் போட்டி நடைபெறுவது வழமை.

இவ்வாறான பதவியில் திலங்க சுமதிபால இருந்த 1999ம் ஆண்டு காலப் பகுதியில் ஒரு பாதாள உலகக் கோஷ்டி ஒன்றின் தலைவனான தம்பிக்க அமரசிங்கா என்பவரை கடவுச் சீட்டு மோசடி ஊடாக வெளி நாடு செல்வதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவர். பல மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். இப்பொழுது அவ்வழக்கு கொழும்பு மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த பணமுதலை ஏற்கனவே இலங்கையின் சக்திமிக்க தொலைதொடர்பு நிறுவனமான ரெலிகொம் மின் தலைவராகவும் இருந்து வந்தவர்.

இத்தகைய மனிதரைத்தான் ஐக்கிய தேசியக் கட்சி அனுராதபுர மாவட்டத்திற்கான அமைப்பாளராகத் தெரிவு செய்துள்ளது. அமைப்பாளர் பதவி என்பது பாராளுமன்றத் தேர்தலில் மாவட்ட முதன்மை வேட்பாளருக்குரியதாகும். அதன் பின் அத்தகையவர் அமைச்சரும் ஆகலாம். இத்தகைய பணக்காரர்கள் தான் பணத்தாலும் அடியாட்களாலும் பிரதான பாராளுமன்ற அரசியல் கட்சிகளில் அதி முக்கிய பிரமுகர்கள். இவர்களே ஆளும் வர்க்க பிரதிநிதிகள் எனப்படுபவர்கள்.

இத்தகைய பெரும் பாராளுமன்றப் பணக்காரக் கட்சிகள் மக்கள் முன் கை கூப்பி வாக்கு வரம் கேட்கவும் புள்ளடி வாங்கவுமே மக்களிடம் வருவார்கள். ஆனால் வாக்குகள் போடுவதற்கு வரிந்து கட்டிக் கொண்டு பச்சை நீலம் என்றும் அல்லது நீலம் சிகப்பு என்றும் அலையும் சாதாரண மக்கள் ஏமாற்றப்படும் அப்பாவிகளே யாவர். திலங்க சுமதிபாலா போன்றவர்களின் சவாரிக்கான குதிரைகளாகவே வாக்களிக்கும் மக்கள் முதுகுகளைக் கொடுத்து நிற்கும் அவலம் எத்தனை நாட்களுக்குத் தான் நீடிக்கப் போகிறதோ என்றே ஏக்கப் பெருமூச்சு விடவேண்டியுள்ளது.

## அமெரிக்க சிவில் உரிமை முன்னோடி
# றோசா பாக்ஸ் அம்மையார் காலமானார்



அன்று அந்தப் பெண்மணி தனது ஆசனத்தில் இருந்து எழும்ப மறுத்து உறுதியாக இருந்தார். அதன் காரணமாக உரிமை மறுக்கப்பட்ட அமெரிக்க கறுப்பின மக்கள் தமது குடியியல் உரிமைகளுக்காகப் போராட எழுந்தனர். ஆம் அந்தப் பெண்மணிதான் றோசா பாக்ஸ் ஆவார். அமெரிக்க குடியியல் உரிமைகளுக்கான முன்னோடி எனப் போற்றப்படும் றோசா பாக்ஸ் கடந்த 24-10-2005 அன்று தனது 92வது வயதில் காலமானார்.

இந்த கறுப்பினப் பெண்மணி 1955ல் தனது 42வது வயதில் ஒரு போராட்டத்தைப் பொறி என மூட்டினார். ஒரு நாள் அமெரிக்காவின் மொன்ரகோமேரி அல்பாமா பயணிகள் பஸ்ஸில் பாக்ஸ் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடன் நான்கு கறுப்பின அமெரிக்கர்கரும் பிரயாணம் செய்தனர். குறிப்பிட்ட ஒரு இடத்தில் சில வெள்ளையர்கள் ஏறிக் கொண்டனர். அன்றைய பஸ் பிரயாண நடைமுறையின்படி ஆசனத்தில் இருக்கும் கறுப்பினத்தவர்கள் வெள்ளையருக்கு ஆசனங்களைக் கொடுத்துவிட்டு நின்றே பிரயாணம் செய்தல் வேண் டும். அதன் படி பஸ்சில் ஏறிய வெள்ளையர்கள் கறுப்பினப் பிரயாணிகளை எழுந்து நிற்குமாறு அதட்டினார். நான்கு பேர் எழுந்து வெள்ளையர்களுக்கு ஆசனத்தைக் கொடுத்தனர். ஆனால் கறுப்பினப் பெண்மணியான றோசா பாக்ஸ் தனது ஆசனத்திலிருந்து எழும்பி வெள்ளையருக்கு இடம் கொடுக்க மறுத்தார். நான் உங்களைப் போன்று ஒரே விதக் கட்டணத்தைக் கொடுத்தே பயணிக்கின்றேன். நான் ஏன் எனது ஆசனத்தை உங்களுக்குத் தர வேண்டும். என்னால் எழும்ப முடியாது. நான் எவ்வகையிலும் இரண்டாம் தரப் பிரஜை அல்ல என்று உறுதியாகக் கூறினார்.

இப்பிரச்சினையில் பாக்ஸ் கைது செய்யப்பட்டார். அவர் அத்தகைய சட்டத்தை எதிர்த்து நின்றார். வழக்கில் அவருக்கு பத்து அ.டொலர் அபராதமும் நான்கு டொலர் நீதிமன்றச் செலவாகவும் தீர்க்கப்பட்டது. றோசா பாக்ஸ்க்கு நீதிமன்றம் அபராதம் விதித்த நாளில் இருந்து 381 நாட்கள் வரை கறுப்பின குடியிருப்பாளர்கள் பஸ் பிரயாணப் பகிஷ்கரிப்பை நடாத்தினர். குடியியல் உரிமைகளுக்கான இயக்கத்தினர் இவ் இன நிறப் பாகுபாட்டிற்கு எதிரான இயக்கங்களை பரந்து முன்னெடுத்தினர். உயர் நீதிமன்றவரை இப் பிரச்சினை சென்று இறுதியில் இத்தகைய வெள்ளை- கறுப்பின மக்களைப் பிரித்து பாகுபாடு காட்டிய பஸ் பயண முறை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. அதே வேளை பாக்ஸ்சும் அவரது கணவர் ரேமண்ட்டும் வேலை இழந்தனர். அத்துடன் கொலை அச்சுறுத்தல்கள் மிரட்டல்கள் மத்தியில் வாழவேண்டியதாயிற்று. இருந்தும் தமது மக்களுக்கான குடியியல் உரிமைகளுக்குப் போராடும் நிலையைத் தளர்த்தவே இல்லை. அமெரிக்காவின் கறுப்பின நீக்ரோ மக்கள் நிறம் இனம் காரணமாக தீண்டாமை பாராட்டப்பட்டு இரண்டாம் தரப் பிரஜைகளாக நடாத்தப்பட்ட கொடுமையான நிலைமைகளுக்கு எதிராக பல சிவில் உரிமையாளர்கள் கம்யூனிஸ்டுக்கள் இடது சாரிகள் போராடிவந்திருக்கிறார்கள். அவர்களிடையே றோசா பாக்ஸ் அம்மையாரின் போராட்ட நிலைப்பாடு என்றும் நினைவில் இருக்கத் தக்கதாகும்.

**பி.கு: அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கு பஸ் பிரயாணத்தில் பாகுபாடு காட்டப்பட்டது போன்று வடபுலத்திலும் பஸ்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் நின்றும் கீழே இருந்தும் பயணம் செய்த ஒரு நிலை ஐம்பதுகளுக்கு முன்பு இருந்து வந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.**

# வ/கோவில்குளத்தில் மதுபானசாலையா?

பாடசாலைகள் வழிபாட்டுத்தலங்கள் மற்றும் பொது இடங்களுக்கு அருகாமையில் மதுபானச்சாலைகள் திறக்கப்படக் கூடாது என்பது சட்ட விதியாகும். ஆனால் சில பணம் படைத்தோருக்கும் அவர்களுக்குத் துணை நிற்போருக்கும் இதெல்லாம் ஒரு விடயமே அல்ல. வவுனியா நகரின் கோவில்குளம் பகுதியில் பாடசாலை கோவில் ஆகியவற்றுக்கு அண்மித்ததாக மதுபானச்சாலை ஒன்று திறக்கும் வேலைகள் நடைபெறுகின்றது. இதற்கு தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் அறிய முடிகிறது. அதே போன்று தவசிக்குளம் பகுதியில் பாடசாலையை அண்டியே மற்றொரு மதுபானச்சாலையும் இருந்து வருகின்றது. இதற்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சு இருக்கவே செய்கிறது.

கோவில் குளத்தில் அமைய உள்ள மதுபானச்சாலையைத் திறக்க வேண்டாம் எனக் கோரி மது ஒழிப்பு இயக்கம் என்ற பெயரில் சுவரொட்டிகள் நகரில் ஒட்டப்பட்டிருந்தன. சமூக நலன் கொண்டவர்களாலேயே அது ஒட்டப்பட்டுள்ளதாக மக்கள் பேசிக் கொள்கின்றனர். இன்று மதுவால் எத்தனை குடும்பங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன. பாடசாலை மற்றும் உயர் கல்வி மாணவர்கள் தாராளமாக மது வகைகள் பாவிக்கின்றனர். இளைஞர்கள விளையாட்டு விளையாட்டாகவே மதுபானம் பாவிக்கும் பழக்கத்தை கடைப்பிடிக்கின்றனர். இந்நிலையில் ஏற்கனவே இருக்கும் மதுபானச்சாலைகள் போதாதென்று கோவில் குளத்திலும் அதனைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தமிழ் இனத்திற்காகப் போராடப் போவதாகக் கூறி பாராளுமன்ற சென்றவர்கள் தமிழ் இளந் தலைமுறையினரையும் மக்களையும் சீரழித்துக் கொள்ள மதுபானச்சாலைக்கு அனுதிப்பத்திரம் கொடுப்பதேன்? எனவே கோவில்குளம் மதுபானசாலை திறப்பது நிறுத்தப்பட வேண்டும் என்பதே மக்களது வேண்டுகோளாகும்.

# பாதாள உலகமும் சமாதான நீதிபதியும்

இலங்கையின் பிரதான பாராளுமன்றக் கட்சிகளில் பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களது ஆதிக்கம் அதிகமானதாகும். பெரும் பணக்காரர்கள் மோசடி ஊழல் பேர்வழிகள் சூதாட்டக்காரர்கள் எனக் குறுக்குவழிகளில் பெரும் தொகைப் பணம் சம்பாதிப்போர் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளிலும் பிரமுகர்களாக இருந்து வந்துள்ளமை பகிரங்கமானதாகும். இவர்களோடு இப்போதைய சூழலில் வலிமை பெற்ற பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களும் இந்த இரண்டு கட்சிகளில் செல்வாக்கு செலுத்தி வருகின்றார்கள். போதைப் பொருட்கள் கடத்தல் விநியோகம் விற்பனை மட்டுமன்றி உள்ளூர் மட்டத்தில் கசிப்பு உற்பத்தி விற்பனையிலும் இதே குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. அத்துடன் கொலை கொள்ளைகளுக்கும் தலைமை தாங்கி நிற்கின்றன. இவர்களது தொழிலில் பொலிஸ் தலையிட்டால் அல்லது முக்கிய புள்ளிகள் பிடிபட்டால் உடனே அரசாங்க- எதிர்க் கட்சி மட்டங்களின் உயர் அரசியல் பிரமுகர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் நேரடியாக அமுத்தம் கொடுத்து விடுவிக்க முன் நிற்பார்கள். அத்துடன் இவ் அரசியல் பிரமுகர்கள் இப் பாதாள உலகக் குழுக்களின் தலைவர்களுக்குத் தேவையான சகலவற்றையும் செய்தும் கொடுப்பார்கள்.

அண்மையில் குடு லால் என அழைக்கப்படும் லால் பீரிஸ் என்ற பாதாள உலகத் தலைவர் ஒருவர் கொழும்பு மாஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் சமாதான நீதிபதி நியமனம் பெற்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்ட சம்பவம் நடைபெற்றது. இவரது சமாதான நீதிபதிப் பதவிக்கான பரிந்துரையை ஒரு பிரதி அமைச்சர் வழங்கியதுடன் கிராம சேவையாளரின் நற்சாட்சிப் பத்திரமும் பொலிஸ் பொறுப்பதிகாரியின் குற்றமற்றவர் என்ற ஆதாரக் கடிதமும் பெற்றே லால் பீரிஸ் சமாதான நீதிபதியானார். அதேவேளை போதைப் பொருள் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் இவர் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி அதற்கான விசாரணைகளையும் ஏற்கனவே நடாத்தியும் வந்துள்ளனர். அது மட்டுமன்றி போதைப் பொருட்கள் கடத்தல் சம்மந்தமான குற்றச்சாட்டை இந்திய போதைப் பொருள் தடுப்பு பொலீசார் இதே இலங்கைப் பீரிஸின் மீது சுமத்தி அது பற்றி இலங்கைப் பொலிசாருக்கு அறிவித்தும் உள்ளனர். இவ்வாறிருக்கவே குடு லால் என்ற லால் பீரிஸ் ஜே.பி ஆனார்.

மேற்படி விடயங்கள் ஊடகங்கள் வாயிலாக வெளிவரவே விடயம் அம்பலத்திற்கு வந்தது. லால் பீரிசின் சமாதான நீதிபதி நியமனத்தை இடைநிறுத்தி வைத்து ஒரு முன்னாள் நீதிபதி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். நீதி அமைச்சர நாட்டு நிலைமை எங்கே சென்று கொண்டிருக்கிறது. ஜனநாயகம் சுதந்திரம் சட்டம் ஒழுங்கு என்று தர்மபோதனை செய்து கொண்டும் எதனைச் செய்து வருகின்றார்கள். இப்படி எத்தனையோ விடயங்கள் வெளிவராத நிலையில் தொடர்கின்றன. ஆனால் வெளிவந்த ஒரு விடயமே நல்ல உதாரணமாகி உள்ளது. பிந்திக்கிடைத்த ஒரு செய்தியின் படி கொழும்பைச் சேர்ந்த மரைக்கார் ரவ்புடீன் என்பர் கண்டியில் பணம், கிரடிற்காட் கையடக்க தொலை பேசி என்பவற்றைத் திருடியுள்ளார் என்றும் கிரடிற் காட் மூலம் இருபதினாயிரம் ரூபாவிற்கு மதுபானம் கொள்வனவு செய்துள்ளார் என்றும் கூறி அவரை கண்டிப் பொலிசார் நீதிமன்றம் மூலம் விளக்கமறியலில் வைத்துள்ளனர். இவர் ஒரு அகில இலங்கை சமாதான நீதிபதியாவர்.

சமாதான நீதிபதிக்கு பரிந்துரை செய்பவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# ஜனாதிபதித் தேர்தலில் மலையக கட்சிகள்

## யாரை எதற்காக ஆதரிக்கின்றன?

### திரை மறைவில் பணம் பதவிகள்! வெளியே நீண்ட கோரிக்கைகள்!

மலையகத்தமிழ் மக்களில் பத்து ல–ட்சம் பேர் வாக்காளர்களக இருப்ப தாகவும் அவர்களை குறித்த ஜனாதிபதி அபேட்சகருக்கு வாக்களிக்க வைக்கும் சக்தி இ.தொ.கா. இடமே இருக்கிறது என்றும் இ.தொ.கா. தலைவர் ஆறு முகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். அந்த அடிப்படையில் ஜனாதிபதி அபேட்சகர்களான ரணில் விக்கிரமசிங்ஹ, மஹிந்த ராஜபக்ச ஆகியோரிடம் பேரம் பேசி இறுதியில் ரணிலுக்கு ஆதரவளிப்பதென அதாவது குறிப்பிடப்படும் 10 லட்சம் வாக்குகளை அவருக்கு திரட்டிக் கொடுப்பதென இ.தொ.கா. தலைமை தீர்மானித்துள்ளது.

ம.ம.மு. வும் ஐ.தே.கட்சி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்ஹவிற்கே அதனது வாக்குகளை பெற்றுக் கொடுப்பதென தீர்மானித்துள்ளது. சதாசிவம் தலைமையிலான இ.தொ.ஐ. முன்னணி மஹிந்த ராஜபக்சவை ஆதரிப்பதென தீர்மானித்தள்ளது.

இதைவிட ம.ம.மு. விலிருந்து பிரிந்து சென்ற மத்திய மாகாணசபை உறுப்பினர்களான அருள்சாமியும் திகாம்பரமும் மஹிந்தராஜபச்சவை ஆதரிப்பதென தீர்மானித்துள்னர்.

வெற்றிபெறுபவர்களுடன் இணைந்து சலுகைகளை பெற்றுக் கொள்வது என்ற இ.தொ.கா. வின் பழைய தலைமையின் வழியை பின்பற்றுவதையே மேற்படி முடிவுகள் உணர்த்துகின்றன.

மலையகக்கட்சிகள் தனித்து நின்று என்னசெய்ய முடியும். இலங்கையில் ஆட்சியமைக்கக் கூடிய இரண்டு கட்சிகளில் ஒன்றுக்கு ஆதரவளிப்பதன் மூலமே எதையாவது பெற்றுக்கொள்ள முடியும் என்பது மலையக அரசியலில் முடிந்த முடிபாக கொள்ளப்படுகிறது. இது இலகுவான, வசதியான அரசியல் வழிமுறை ஆகும். இருக்கின்ற முதலாளித்துவ பேரினவாத ஆட்சியின் நலன்கெடாமல் அப்படியே அதனுடன் சங்கமமாகும் அடிமைத்தன வழிமுறையே ஆகும்.

பெரிய வாக்கு வங்கியை கொண்டிருப்பதால் இ.தொ.கா. எவருக்கு ஆதரவளித்தாலும் அவரிடம் அதற்கு முதலிடமளிக்கப்படும். அதனை ஏற்றுக் கொண்டு ஏனைய மலையக கட்சிகள் அதே அபேட்சகருக்கு ஆதரவளிப்பதில் பிரச்சினை இருக்காது. இல் லாவிட் டால் இ.தொ.கா. ஆதரவ ிப்பவரை விட்டு ஏனையவரை ஆதரிக்க வேண்டும்.

அதனையே சதாசிவம் தலைமையிலான இ.தொ.ஐ. முன்னணி செய்துள்ளது. இ.தொ.காங்கிரஸ் ரணிலை ஆதரிக்க இ.தொ.ஐ.முன்னணி மஹிந்தவை ஆதரிக்கிறது. அதன் இருப்பை பாதுகாத்துக்கொள்வதற்காக அவரை ஆதரிக்கிறது.

ஒவ்வொரு அமைப்புகளும் 19 அம் சக்கோரிக்கைகளை14 அம்சக் கோரிக்கைளை கொடுத்ததாக கூறினாலும் அவையெல்லாம் மக்களின் கண்களை துடைப்பதற்கான பிரசாரங்களாகும். ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த பிறகு பொதுத்தேர்தல் நடக்கும்போது பாராளுமன்ற ஆசனங்களை உறுதி செய்து கொள்வதும் அமைச்சர் பதவிகளை உறுதி செய்துகொள்வதும் ஏனைய பதவிபட்டங்களைப் பெற்றுக் கொள்வதும் பெருந்தொகைப் பணம் கிடைக்கும் எனபதையும் உறுதிசெய்து கொள்வதுந்தான் உண்மையாகவே ஜனாதிபதி அபேட்சகர்களிடம் மலையக அமைப்புகள் கதைத்து பேரம் பேசிய விடயங்களாகும். மலையகத் தமிழ் மக்களின், தோட்டத்தொழிலாளர்களின் வாக்கு வங்கிகளை வைத்துக் கொண்டு ஒவ்வொரு மலையக கட்சியும் அதன் இருப்பை பாதுகாக்கவும் அதற்குரிய பதவிகளையும் பணத்தையும் பட்டங்கள் சலுகைகளையம் பெற்றுக் கொள்ளவுமே. ஜனாதிபதிதேர்தலில் யாரை ஆதரிப்பதென முடிவெடுத்துள்ளன.

மலையகத்தமிழ் மக்களினதும் தோட்டத்தொழிலாளர்களினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு எவ்வித முடிவுகளையும் அவை எடுக்கவில்லை என்பதே மறைக்கப்படும் உண்மையாகும். அக்கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளர்களிடம் கொடுத்த மகஜர்களை பார்க்கின்ற போது மலையகத்தமிழ் மக்களின் தோட் டத்தொழிலாளர்களின் அடிப்படைப்பி ரச்சினைகள் பற்றி எதுவுமே குறிப்பிடப் படவில்லை என்பதை அறிந்துகொள்ள முடியும். அதேபோன்று ஐ.தே.கட்சி, ஐ.ம.சு.முன்னணி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மலையகத் தமிழ் மக்கள் பற்றி எவ்வித விஷேட வாக்குறுதிகளும் இல்லை. (வாக்குறுதிகளை நம்பத தேவை இல்லை. ஆனால் ஆதரிப்பதற்கு வெற்று அடிப்படை கூட இல்லை)


மலையகத்தின் படித்தவர்களின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட NG.O மகஜரிலும் கூட எதுவுமே உருப்படியாக இல்லை. மலையகப்படித்தவர்களும் இந்நிலைமை பற்றி சுதந்திரமாக சிந்திப்பதாக இல்லை.

எனவே மலையகத்தின் தலைமைகள் எனப்படுபவைகள் வழமைபோல் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் இலங்கையின் பிற்போக்கு, முதலாளித்துவ, பேரினவாத சக்திகளுக்கு அடிமை விசுவாசம் தெரிவித்து போகும் செயற்பாட்டையே முன்னெடுக்க முடிவு செய்துள்ளன.



மலையகத்தமிழ் மக்களின் இருப்பிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்ற மேல்கொத்மலைத் திட்டத்தினை முற்றாக கைவிடவேண்டும் என்ற நிலைப்பாட்டை பிரதான மலையக அமைப்புகள் எடுப்பதாக இல்லை. தனியார் கம்பெனிகளின் நிரிவா கத்தின் கீழ் பெருந்தோட்டங்கள் கொண்டுவரப்பட்டபிறகு தோட்டத் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட கடுமையான வேலை நிபந்தனைகள் அவர்களின் சம்பளம் உயர்த்தப்ப டாமை போன்றவற்றை கண்டு கவலைப்படுவதாகவும் இல்லை. வீடு, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாது கஸ்டப்படுகின்ற மக்கள் பற்றியும் இவர்கள் கவலைப்படு வதாகவும் இல்லை.

பிற்படுத்தப்பட்டிருக்கும் மக்கள் மீது எவ்வாறு தாங்களும் ஆதிக்கம் செலுத்துவது என்றே மலையகத் தலைவர்கள் எனப்படுபவர்களும் சிந்திக்கின்றனர். தேர்தல் காலத்தில் மக்களின் நலனுக்காக மகஜர்களை சமர்ப்பிப்பது என்பதெல்லாம் வெறும் பம்மாத்து நடவடிக்கைகளாகும். அடக்குமுறை யாளர்களிடம் மகஜர்களை சமர்ப்பிப் பதனால் எவ்வித நன்மையையும் பெற் றுக் கொள்ளமுடியாது என்பதை மலையக மக்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். மகஜர்களை சமர்ப்பித்துள்ள இ.தொ.கா– ம.ம.மு– இ.ஐ.தொ.மு, N.G.O போன்றனவெல்லாம் பழைய பாணியிலான அரசியல் நடவடிக்கைகளையே முன்னெடுக்கின்றன. மேறபடி அமைப்புகள் ஒன்றுக்கு மாற்று எனக் கூறிக் கொண்டபோதும் அவை ஒன்றுக்கொன்று மாற்றமின்றி பிற்போக்குத்தனத்திலும் மக்களை ஏமாற்றுவதில் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்பதே உண்மை.



இந்த பாரம்பரிய தொழிற்சங்க பாராளுமன்ற பிற்போக்கு பேரம்பேசும் நடவடிக்கைகளால் மக்களை அடக் கும் அரசு யந்திரம் மேலும் பலப்படு மேயன்றி. பலவீனமடையாது. அதே வேளை மலையக மக்களை அவர்களின் தலைமைகளைக் கொண்டே சுலபமாக ஏமாற்றிவிடலாம் என்ற இறுமாப்பையும் பேரினவாதிகளுக்கு ஏற்படுத்த வாய்ப்பாகும். எனவே இவற்றுக்கு மாறான புதிய அரசியல் சிந்தனையும், பாதையும், நடவடிக்கைகளும் அவசியமாகின்றன. அவை நிச்சயமாக ஜனாதிபதித் தேர்தலில் யாருக்காவது வாக்களிப்பதால் தோற்றுவிக்கப்படமாட்டாது. மாறாக ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரித்து வாக்குச்சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கி வாக்குப்பெட்டிகளில் போடுவதன் மூலம் சிறிதளவாவது மலையக மக்களின் எதிர்ப்பையும் புதிய சிந்தனைக்கான பாதையையும் வெளிப்படுத்துவதாக அமைய முடியும்.

**அழகேசன்**

# மலையக தோட்டப்புற மாணவர் சமூகம்

இன்றைய காலகட்டத்தில் ஒரு பெரும் சமூகமாகக் காணப்படுபவர்கள் மாணவர்கள். அவர்களில் ஒரு பிரிவான தோட்டப்புற மாணவச் சமுதாயம் இன்று பல்வேறு நடைமுறைச்சிக்கல்களை கல்வியில் முகம் கொடுக்கிறது. காலம் காலமாக எமது கல்வியில் பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் பொருளாதார நிலைமை, திட்டமிடப்பட்ட கல்விப் பாரபட்சம் போன்றவவை இன்றும் எம்மத்தியில் தொடாந்தாலும் புதிதாக இவைகளுடன் கூட்டுச் சேர்ந்து விட்ட கலாச்சார சீரழிவுகளையும் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டாயம் உள்ளது.

கலாச்சார சீரழிவு என நாம் கருதும் போது போதைவஸ்துப்பாவனை, நகர மற்றும் சினிமா மோகம், ஆபாசப்படங்களும் அதன் தாக்கங்களும் பற்றி ஆராய வேண்டிய தேவை உள்ளது. போதை வஸ்து பாவிப்பது இன்று மாணவர் மத்தியில் பெருமளவு புழக்கத்தில் உள்ளது. நகர்ப்புற பாடசாலைகளின் மாணவர்களைப் போலவே தோட்டப்புற மாணவர்களும் கஞ்சா போன்ற கடுமையான போதைப் பாவனைகளுக்கும், மதுப் பாவனைகளுக்கும் உள்ளாகியிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். ஒரு நிலையான சமூககட்டுமானப பணிக்கு இது பெரும் பிரதிகூலமாக அமையும் என ஆணித்தரமாக கூற இயலும்.

தொலைக்காட்சியின் பாதிப்பை கூறாவிடில் இந்தத் தலைப்பு ஒரு விடயத்தை தவறவிட்டதாக அமையும். இந்த ஆய்வில் மாணவர் என நாம் உட்படுத்தியது 14வயதிற்கு மேற்பட்டவர்களாகவே அமைகிறது. அவர்களே நாம் மேற்பார்த்த பாதிப்புகளை அதிகம் உள்வாங்கியவர்களாக காணப்படுகின்றனர். அந்நிய மோகம், சினிமா மோகம் என்பன யதார்த்தமற்ற ஒரு சமுதாயம் உருவாக வழிகோலுகிறது. சினிமாவில் வரக்கூடிய சிகை, உடையலங்காரங்கள் என்பனவற்றில் மாணவர் நேரத்தை கடத்துவதில் மூழ்கிவிட்டனர். சமூகத்தின் நடைமுறை வாழ்வு தெரியாத அளவுக்கு மாணவர்கள் மாறியுள்ளனர்.

வக்கிரமான புத்தகங்களும் படங்களும் (அடிதடி, ஆபாசம்) பெருமளவான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இவை உளரீதியாக மாணவர்களை நலிவடையச் செய்ன்றன. முறையான பாலியல் ரீதியான விழிப்புணர்வு அற்ற மாணவர்களாகவே இவர்கள் விளங்குகின்றனர். இதன் வாயிலாக பாலியல் துர்நடத்தைகள் மாணவர் மத்தியில் அதிகரித்து விட்டன. விபச்சாரம் போன்ற சீரழந்த விடயங்களையும் இந்தச் சமூகத்தினர் தம்முள் உள்வாங்கப் பட்டவர்களாகவே உள்ளனர்.

இன்றைய இயந்திரத்தனமான வாழ்க்கை முறையில் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கும் பணி அனைவருக்கும் பொதுவானது.

வெறுமனே பிரச்சினைகளை பேசுவதால் மட்டும் எந்த விதமான நன்மைகளும் கிடைக்காது. மாணவர்கள் முழுப்பகுதியினரையும் குறை கூறுவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. நிறையவே இன்று திறமையான மாணவர்கள் உருவாகி வருகின்றனர். ஆனாலும் ஒரு பகுதி மாணவர்கள் இந்த சீரழிவிற்கு உட்பட்டிருப்பதாலேயே இந்த தலைப்புக்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

மாணவர்களை எவ்வாறு இலகுவில் அண்மித்து செயற்படுவது என அனைவரும் சிந்திப்பதகும். எதன் மூலமாக இவர்களது தெளிவின்மையை போக்கி, சிறந்ததும் நேர்த்தியானதுமான பாதைக்கு இட்டுச் செல்லலாம் என ஆராய்வது வளர்ச்சிக்குத் தேவையாக உள்ளது. இதில் சில வழிமுறைகளையும் சொல்ல முனையலாம். இவர்கள் மத்தியில் பெருமளவில் பாதிப்பை ஏற்படுத்தும் தொலைக்காட்சி மூலமாக தரமான நிகழ்சிகளை தொகுத்து வழங்கலாம். ஆனால் அப்படிச் செய்யப்படுவதில்லை.

சீனா, கியூபா மற்றும் சில நாடுகளில் மாணவர்களின் நலன் காக்கும் அவர்களின் வளர்ச்சிப் பாதையில் முன்னிற்கும் அமைப்புகளை போல விழிப்புணர்வினை ஏற்படுத்தலாம். இன்று எம்மத்தியில் காணப்படும் N.G.O க்கள் போல மாணவர்களை மழுங்கடிக்காத நடைமுறைத்திறன் கொண்ட சமூக விழிப்புணர்வு கொண்ட பண்பாட்டு அமைப்பாக விளங்க வேண்டும். மாணவர் மத்தியில் இலகுவில் சென்றடையக்கூடிய கலை நிகழ்வுகள் மூலமாக கல்வி பற்றிய தெளிவுகளை ஏற்படுத்தலாம். மாணவர்கள் இன்று கல்வியின் நோக்கத்தில் பல முரண்பாடுகளைக் கொண்டவர்களாக உள்ளனர்.

சில திறந்த கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்து கல்வியியலாளர்களோடு மாணவர்களை கதைக்கச் செய்து பல பிரச்சினைகளை தீர்க்க விளையலாம். இதன் மூலம் கல்வியின் மீதான நம்பிக்கையை ஊட்ட வேண்டும். பயனுள்ள கல்வி மூலம் எம்மிடையே காணப்படும் வர்க்க ஏற்றத்தாழ்வு சாதிய முரண்பாடு, அங்கீகாரமின்மை, பாரபட்சம் போன்ற பிரச்சினைகளை தீர்க்க முயலலாம்.

மாணவர்களை சரியான அரசியல் சிந்தனை ஊடான கல்வி மார்க்கத்தில் பயணிக்க வைத்தால் பல நடைமுறைச் சிக்கல்களை வென்றெடுக்க வாய்ப்பாக அமையும். இதன் மூலம் மாணவரின் தீர்க்கமான தீர்க்கதரிசனமான போராட்ட குணம் வலுப்பெறவும் வாய்ப்பாக அமையும். எனவே கல்வித்தூண்களை சரியான அத்திபாரத்தில் நாட்டுவதன் மூலமாக சமத்துவ சிந்தனையும சமூக மேம்பாட்டில் அக்கறையும் கொண்ட ஒரு புதிய தலைமுறையைத் தோற்றுவிக்கலாம். இதனையே மலையகத்தில் முன்னெடுத்தல் வேண்டும். இதற்கு மாணவர்கள் மத்தியில் இருந்து அக்கறை மிக்கவர்கள் முன்னிலைக்கு வரவேண்டும்

**சுந்தரி**

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று12 நவம்பர் 2005 பக்கம்12 விலை 12/– சுழற்சி 85

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,தொலை நகல்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## ஜனாதிபதித் தேர்தல் ஆளும் வர்க்கத் திருவிழா

நவம்பர் மாதம் 17ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவிருக்கிறது. 13 பேர் அப்பதவிக்காக போட்டியிட்டபோதும் ரணில் விக்கிரமசிங்ஹ, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய இரண்டு பேருக்குமிடையிலான போட்டியாகவே அமைந்துள்ளது. இரண்டு பேருக்குமிடையில் அவர்கள் வெளியிடும் கருத்துக்களின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக வேறு பாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. இந்த வேறுபாடுகளை மட்டுமே வைத்துக் கொண்டு ஒரு வேட்பாளரை விட இன்னொருவர் ஏற்றுக்கொள்ளக் கூடியவர் என்றும் மற்றவர் ஏற்றுக்கொள்ள முடியாதவர் என்றும் பொதுவாக மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன.

அதாவது ஏற்கனவே யுத்தநிறுத்த ஒப்பந்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பன ஏற்படுவதற்கு காரணமானவர் என்றும் இனப்பிரச்சிசினைக்கு தீர்வு சமஷ்டி ஆட்சிமுறை என்று கூறுவதாலும் ரணில் விக்கிரமசிங்ஹ ஏற்றுக் கொள்ளக்கூடியவர் என்றும் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறையிலேயே தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறுவதுடன் தீவிர பேரினவாத நிலைப் பாட்டைக் கொண்ட ஜே. வி. பி, ஹெலஉறுமய போன்றவற்றுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்துகொண்டவர் என்பதால் மஹிந்த ராஜபக்ச ஏற்றுக் கொள்ளக்கூடியவரல்ல என்றும் மதிப்பீடுகள் செய்யப்படுகின்றன.

மஹிந்த ராஜபக்ச ஒற்றையாட்சி முறைமைக்குள் தீர்வு என்று கூறுவதனால் தமிழ்த்தரப்பிடம் எந்தவொரு பேச்சுக்கும் இடமில்லை என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளார். பெரிய கட்சிகளான ஐ. தே. கட்சி, சு. க. என்பவற்றுக் கிடையே உடன்பாடு ஏற்படுத்தப்பட்ட பிறகே பேச்சுவார்த்தை தொடங்கப்படும் என்றும் பேச்சுவார்த்தையில் காணப்படும் எந்தவொரு இணக்கமும் மக்கள் தீர்ப்பிற்கு விடப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்ஹ கூறுவதன் மூலம் அவர் ஜனாதிபதியானாலும் சமாதானம் வெகு தொலைவிலேயே இருக்கும் என்பதையே பிரகடனப்படுத்தியுள்ளார்.

ஆக, தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான விடயத்தில் இரண்டு அபேட்சகர்களின் நிலைப்பாட்டினதும் விளைவு ஒன்றே ஆகும். அதாவது தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு எதுவும் காணப்பட மாட்டாது என்பதாகும். அத்துடன் வாக்குறுதிகள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதும் அனுபவரீதியாக மறுதலிக்கமுடியாத மற்றொரு உண்மையாகும் இலங்கையில் நடைபெற்ற எல்லா தேர்தல்களிலும் அரசியல் வாதிகளால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள். யாவும் தேர்தல் முடிந்தபின் காற்றோடு பறந்து விடுவதுண்டு. தேர்தலுக்கான வாக்குறுதி அரசியலின் பலாபலன்களை மக்கள் நன்கு அறிவார்.

விவசாயிகளுக்குரிய உரிமைகள் வசதிகள் பற்றி பேசும்போது இருவரும் ஒரேவிதமான கருத்துக்களையே தெரிவித்துவருகின்றனர். நெல்கொள்வனவில் உத்தரவாத விலையை இரண்டு அல்லது மூன்று ரூபாய்கள் உயர்த்துவதாகவே தெரிவிக்கின்றனர். உரத்திற்கான விலையையும் ஓரிரு ரூபாய்களில் குறைப்பதாக தெரிவித்துவருகின்றனர். மாறாக நாட்டின் அடிப்படை உணவு உற்பத்தி திட்டமிட்டவகையில் தேசிய பொருளாதாரத்தின் அடிப்படையாக முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதில் எவருக்கும் அக்கறை இல்லை. அந்நிய இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது பற்றிய கதையே இல்லை.

நாட்டின் உற்பத்தி சார்ந்த தொழிற்துறைகளிலும் பொது சேவைகளிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுடைய வேலைப்பாதுகாப்பு, சம்பளம் என்பவை பற்றி எவ்வித திட்டமிடல்களும் இல்லை.

நாட்டு மக்களுடைய கல்வி, சுகாதாரம். போக்குவரத்துச்சேவை என்பவற்றை தொடர்ந்து சிறந்த சேவைத் துறைகளாக முன்னெடுப்பதில் எவ்வித தூர நோக்கும் கிடையாது.

இரண்டு பிரதான அபேட்சகர்களும் அடிப்படையில் ஏகாதிபத்திய உலகமயமாதலை ஏற்றுக்கொண்டு இலங்கையை ஏகாதிபத்தியத்தின் வாடிக்கை நாடாக வைத்திருக்க வேண்டும் என்று இணங்கியுள்ளவர்களாவர். ரணில் விக்கிரமசிங்ஹ நேரடியாக அமெரிக்க, மேற்குலக ஏகாதிபத்திய சக்திகளுடன் தொடர்பை கொண்டு உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல்படி நடந்துகொள்வார். மஹிந்த ராஜபக்ச இந்திய பிராந்திய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டு அதனூடாக ஏகாதிபத்திய உலகமயமாதலை முன்னெடுப்பார். இதில் மாற்றம் இருக்கமாட்டாது.

ஜனாதிபதித் தேர்தலில் யார் தெரிவு செய்யப்பட்டாலும் விளைவுகள் ஒன்றாகவே இருக்கப்போகின்றன. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணக்படும் நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்படும். பொருளாதார நிலை மேலும் சிக்கலடையும். ஜனநாயகம் மறுக்கப்படும். மக்களுடைய இயல்பு வாழ்வு பாதிக்கப்படும். ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளுக்கு இணங்கவும் பேரினவாத முதலாளித்துவ சக்திகளுக்கு ஏற்பவும் நாட்டையும் மக்களையும் ஆள்வதற்காக ஆளும் வர்க்கத்திலிருந்து ஒருவரை தேர்ந்தெடுக்கும் திருவிழாவே ஜனாதிபதித்தேர்தல். இவ் ஆளும்வர்க்க திருவிழாவினால் மக்களுக்கு எதுவுமே கிடைக்கப்போவதில்லை.

**-ஆசிரியர் குழு-**

## ரணில்– மகிந்த விஞ்ஞாபனங்களும் தமிழ்த் தேசிய இனத்தின் நிலைப்பாடும்

**வெகுஜனன்**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான இரண்டு பிரதான கட்சிகளினது தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்துள்ளன. ஐக்கியதேசியக் கட்சியினது "மக்கள் நிகழ்ச்சி நிரல்" என்ற பெயரிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினது "மகிந்த சிந்தனை" என்பதாகவும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்படுகின்றன. இவ்விரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்களையும் இந்த நாட்டின் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களினதும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களினதும் அடிப்படை பிரச்சினைகள் நலன்கள் தேவைகள் உரிமைகள் என்று நிலை நின்று நோக்கினால் அவற்றில் உருப்படியான எதுவுமே இல்லை என்பதைக் காணலாம். குறிப்பிட்டுக் கூறுவதானால் வளர்ச்சிக்குத் தகுதியற்ற நரம்புத் தளர்ச்சியுடன் பிறப்பிக்கப்பட்ட இரண்டு குழந்தைகள் போலவே இவ் இரு விஞ்ஞாபனங்களையும் காண முடியும்.

இத்தகைய ஆரோக்கியமற்ற இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்களை முன்வைத்து மக்களை ஏமாற்றும் வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டே ஆளும் வர்க்க அதிகாரக் கதிரையைப் பிடித்துவிடும் பிரச்சாரத்தில் நிற்கிறார்கள் ரணில் விக்கிரமசிங்காவும் மகிந்த ராஜபக்ஷவும். இவர்கள் இருவரும் நிலவுடைமை வழி வந்த பேரினவாத முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலை ஏகாதிபத்திய வழிகாட்டலில் அவர்களது அரவணைப்புடன் நடைமுறைப்படுத்துவதே உள்ளார்ந்த திட்டமாகும். இத்தகைய சூழலில் தொழிலாளர்கள் விவசாயிகள் கீழ்– நடுத்தரவர்க்கத்தினர். புத்திஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்கள் என்போர் வர்க்க அடிப்படையில் அணிதிரண்டு ஜனாதிபதித் தேர்தலை நிராகரித்து எதிர்த்து நிற்பதே நியாயமான சரியான நிலைப்பாடாக இருக்க முடியும். ஆனால் அத்தகைய நிலை ஏற்பட வாய்ப்பு அவ்வகையான வர்க்க ஒற்றுமை வராதவாறு இன மத மொழி பிரதேச அடிப்படையில் ஆளும் வர்க்க கட்சிகள் ஏற்கனவே உழைக்கும் வர்க்க சக்திகளை சிதறடித்து விட்டன. அதனை எதிர்த்து நிற்க வேண்டிய இடதுசாரிகள் எனப்பட்டவர்கள் பாராளுமன்ற பதவிக்காக தமது தொழிலாளி வர்க்க நிலைப்பாடுகளை எல்லாம் கைவிட்டு முதலாளித்துவ பேரினவாதக் கட்சிகளின் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொண்டு வர்க்கத் துரோகம் இழைத்தனர். இந்நிலையால் நாட்டில் இன மத மொழி அடிப்படையில் மக்கள் பிளவுபடுத்தப்பட்டு துருவ நிலைப்படுத்தப்பட்டனர். பேரினவாத ஒடுக்கு முறையால் தேசிய இனங்கள் மத்தியில் தேசியவாத நிலைப்பாடுகள் மேலோங்கின. தமிழ்த் தேசிய இனம் தனது விடுதலைக்கு ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் இறங்கியது.

இத்தகைய சூழலில் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்து நோக்கும் போது முஸ்லீம் தேசிய இனம் மலையகத் தமிழ்த் தேசிய இனம் இரண்டினதும் தலைமைகள் தத்தமது உயர்வர்க்க நிலைப்பாட்டிற்கும் பணம்பதவிகளுக்கும் அமைய இரண்டு பேரினவாத ஆளும் வர்க்க வேட்பாளர்களை ஆதரிக்க முடிவு செய்து விட்டார்கள். இந் நிலையில் தமிழ்த் தேசிய இனம் மிகவும் மோசமான பேரினவாத ஒடுக்கு முறை யுத்தத்தால் ஒடுக்கப்பட்டு வரும் சூழலிலும் அதனை எதிர்த்து ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் விடுதலைப் போராட்ட நிலையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்பது வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகும். தமிழ்த் தேசிய இனத்தின் பிரதிநிதிகள் தாங்களே என கூறிவரும் விடுதலைப் புலிகளும் அதன் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்ட இருபத்திரண்டு உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் எத்தகைய தீர்மானத்திற்கு வரப்போகிறார்கள் என்பது முக்கிய எதிர்பார்ப்பாகும்.

ஏற்கனவே விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் சிங்கள தேசத்தில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி தமக்கு அக்கறை இல்லை என்றும் இரண்டு கட்சிகளும் பேரினவாதக் கட்சிகளே என்றும் சுட்டிக் காட்டியிருந்தார். அத்துடன் தமிழ் மக்கள் எந்த வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தாம் வற்புறுத்தப் போவதில்லை என்றும் கூறி இருந்தார். அதே வேளை தமிழ்க் கூட்டமைப்பினர் தீர்மானமாக எதையும் இதுவரை வெளிப்படுத்தவில்லை. அவர்களில் அநேகம் பேர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்கு விசுவாசமானவர்களும் நெருக்கமானவர்களும் என்ற போதிலும் பகிரங்க தீர்மானம் எடுப்பதில் சிக்கல்கள் அவர்கள் மத்தியில் உண்டு.

ரணில் முன்வைத்துள்ள "மக்கள் நிகழ்ச்சி நிரல்" என்றதேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு திட்டவட்டமான தெளிவான விடயங்கள் முன்வைக்கப்படவில்லை. டோக்கியோ, ஒஸ்லோ பிரகடனங்களில் சமஷ்டி பற்றிக் கூறப்பட்டவற்றை தொட்டுக்காட்டி அதன் அடிப்படையில் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க முடியும் என்றே கூறப்பட்டுள்ளது. அதுவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்தியும் புலிகளுடன் பேசியும் அதன்பின் சர்வசன வாக்கெடுப்பை நடாத்தியும் தீர்வு காணப்படுமாம். இதற்கு சர்வதேச சமூகத்தின் ஏற்கனவே பெறப்பட்ட ஒத்துழைப்பு பெறப்படுமாம். இது நோர்வே ஊடாக அமெரிக்க ஐரோப்பிய வழிகாட்டலையே சுட்டிக்காட்டுகிறது. ரணில் கூறியுள்ள மேற்படி நடைமுறைக்கு வர ஒரு ஜனாதிபதிப் பதவிக்காலம் மட்டுமன்றி அடுத்த பதவிக்காலமும் தேவையானதாகும். அதுவரை தேசிய இனப்பிரச்சினையும் அதன் போராட்டமும் ஒரே இடத்தில் இருக்க மாட்டாது என்பது உணரப்பட வேண்டியதாகும்.

மறுபுறத்தில் மகிந்த ராஜபக்ஷ முன் வைத்துள்ள "மகிந்த சிந்தனை" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசிய இனனப்பிரச்சினை பற்றி சாதகமான விடயங்கள் எதுவும் கூறப்படவில்லை. ஒற்றையாட்சியின் கீழான தீர்வுக்குரிய பேச்சுவார்த்தையை முன்னெடுக்கும் விடயத்தை சர்வசனவாக்கெடுப்புக்கு உட்படுத்தி முன்னெடுப்பதுடன் குறுகிய காலத்திற்குள் தீர்வு காண்பது என்றும் கூறப்பட்டுள்ளது. இதற்கு இந்தியாவின் உதவி பெறப்படுவதுடன் இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் மேற்கொள்வதையும் சுட்டிக் காட்டியுள்ளது.

மேற்கூறப்பட்டவற்றை உள்ளடக்கியுள்ள இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்களில் தேசிய இனப் பிரச்சினை பற்றிய விடயத்தில் தங்களது சாராம்சமான பேரினவாத நிலைப்பாட்டையே தெளிவு படுத்தியுள்ளன. ரணில் மறைமுகமான பேரினவாதத்தையும் மகிந்த வெளிப்படையான பேரினவாதத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றனர். தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்கள் என்பதையோ தேசிய இனம் அதற்குரிய சுயநிர்ணய உரிமை பற்றியோ ஒரு சொல்தானும் கூறப்படவில்லை. அதே வேளை சமாதானத்திற்காகப் பாடுபடப் போவதாகவும் யுத்தத்தை கொண்டுவர மாட்டோம் என்று கூறும் இவர்கள் பிரிவினைக்கு இடமாளிக்கப் போவதில்லை என்றும் கூறிவருகிறார்கள்.

இன்னாரு முக்கிய விடயம் கவனிக்கப்படல் வேண்டும். ரணில் அமெரிக்காவின் வழிகாட்டலிலும் மகிந்த இந்தியாவினது வழிகாட்டலிலும் இருக்கிறார்கள் என்பது பகிரங்கமானதாகக் காணமுடிகிறது. இந்த இரண்டு உலக– பிராந்திய மேலாதிக்க சக்திகளின் விருப்பங்களுக்கு அமையவே இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கான அணுகுமுறை நவம்பர் 17ம் திகதி தெரிவு செய்யப்படும் ரணிலோ அல்லது மகிந்தவோ முன்னெடுப்பார்கள். அது சமாதானம் என்ற பெயரிலான மிகக் குறைந்த விடயங்களைக் கொண்ட தீர்வுத் திணிப்பாகலாம் அல்லது நிர்ப்பந்தமாகலாம். அதனை ஏற்க மறுத்தால் யுத்தமும் ஆகலாம்.

இதுவே இன்றை ஜனாதிபதித் தேர்தலின் முன்னால் உள்ள யதார்த்த நிலையாகும். இவ்விடத்திலே தமிழ்த் தேசிய இனம் சார்பாக என்ன முடிவு எடுக்கப்படப் போகின்றது என்பதை தெற்கில் மட்டுமன்றி சர்வதேச அரங்கும் உன்னிப்பாக அவதானித்து நிற்கிறது. கடந்த காலங்கள் போன்று வெறுமனே குறுகியகாலத் தேவைகளுக்கான தந்திரோபாய முடிவு எடுக்கப்பட்டால் அதன் விளைவுகள் கடந்த கால தவறுகள் போன்றதாகவே அமைய முடியும். எனவே சுயநிர்ணய உரிமைப்போராட்டத்திற்கும் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கும் பலம் சேர்க்கும் வகையிலான முடிவு எடுக்கப்படுவதே தமிழ்த் தேசிய இனத்திற்கு அவசியமானதாகும்.

1931ம் ஆண்டின் முதலாவது சட்ட சபைத் தேர்தலை அன்றைய யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முற்றாகப் பகிஷ்கரிக்கும் தீர்மானத்தை எடுத்து வெற்றிகரமாக நடாத்தி வடபுலத்தின் மக்களது ஒற்றுமையை வெளிப்படுத்தியது. அத்தேர்தலை நிராகரித்த வடபுலத்து வாலிபர் காங்கிரசின் முடிவு புரட்சிகரமானதாக இருந்தது. இன்றும் அவ்விடயம் நினைவு கூரத்தக்க ஒரு முன் மாதிரியான அரசியல் முடிவும் நடவடிக்கையுமாகும். அத் தகைய ஒரு பகிஷ்கரிப்பு நிலையை வடக்கு கிழக்கில் தமிழ்த் தேசிய இனம் முன்னெடுப்பதையிட்டு விடுதலைப் புலிகள் இயக்கமும் தமிழர் கூட்டமைப்பும் முடிவுக்கு வருவது இன்றைய சூழலில் மிகவும் பொருத்தமானதாகும். அதன் மூலம் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பிரதான இரண்டு கட்சிகளுக்கும் அதேவேளை தேசிய இனப்பிரச்சினையில் தலையிட்டு நிற்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஒற்றுமையின் பலத்தையும் உரிமை வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணரச் செய்வதற்கு இது ஒரு ஏற்ற உதாரணமாகவும் இருக்க முடியும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# புதிய சர்வாதிகாரியை தெரிவு செய்ய

## 13 வேட்பாளர்கள் போட்டி

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு 2005நம்பர் 17ம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. இது ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தலாகும். சாராம்சப்படுத்திக் கூறுவதானால் ஒரு புதிய சர்வாதிகாரியைத் தெரிவு செய்வதற்காக ஒரு கோடி முப்பது லட்சம் வாக்காளர்களான இந் நாட்டு மக்கள் வாக்களிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதாகும். இவ்வாறு ஒரு சர்வதிகாரியாகுவதற்கு பதின்மூன்று வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்களைச் சேர்ந்த எவருமே இல்லை. இன மொழி மத அடிப்படையில் பெரும்பான்மை என்று கூறப்படும் சிங்கள தேசிய இனத்திலிருந்தே இப்பதின்மூன்று வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். இதற்குப் பின்னராவது அனைத்து சிங்கள மக்களையும் ஒரே குடையின் கீழ் ஐக்கியப்படுத்துவது என்ற பேரினவாதிகளின் அர்த்தமற்ற கூக்குரல் தேய்ந்து போகுமா? வர்க்க சாதிய மத பிரதேச அடிப்படையில்தான் எல்லாத் தேசிய இன மக்களும் பிளவடைந்து தம்முள் பலவாறான முரண்பாடுகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அத்தகையோரை வெறும் தேசியவாதத்தால் மட்டும் ஒன்றுபடுத்திவிட முடியாது. அதன் வெளிப்பாட்டையே சிங்கள தேசிய இனத்தின் மத்தியிலிருந்து பதின்மூன்று பேர் போட்டியிடுவதன் மூலம் காண முடிகிறது.

இவ்வாறு பதின்மூன்று பேர் போட்டியிட்டாலும் இருவர் மட்டுமே பிரதான போட்டியாளர்களாக நிற்கின்றனர். ஏனையோர் வெவ்வேறு தேவைகள் நோக்கங்களுக்காகப் போட்டியிடுகின்றனர். சிலர் தத்தமது கட்சிகளைப் பிரபலப்படுத்தி அதன் ஊடாகத் தமது இருப்பை நிலை நாட்டப் போட்டியிடுகின்றனர். வேறும் சிலர் பிரதான கட்சிகள் இரண்டினதும் வேட்பாளர்களினால் எதிர்தரப்பு வாக்குகளைப் பிரித்துக் கொள்வதற்காக நிதி வளம் அளிக்கப்பட்டவர்களாகப் போட்டியிடுகின்றனர். இன்னும் சிலர் தமது கொள்ளைகளை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறும் சந்தர்ப்பத்திற்காகப் போட்டியிடுவதாகக் கூறிக் கொள்கின்றனர்.

இவ்வாறு பதின்மூன்று பேர் போட்டியிடுவதால் பல கட்சி ஜனநாயகம் வாய்ந்த ஒரு தேர்தல் முறை என்று காட்டப்படுகிறது. ஆனால் இரண்டு கட்சிகள்தான் பிரதான போட்டியாளர்கள். அந்த இரண்டு கட்சிகள்தான் பிரதான போட்டியாளர்கள். அந்த இரண்டு கட்சிகளும் கூட ஏதோ ஏட்டிக்குப் போட்டியான நேர் எதிர்க் கொள்கைகளைக் கொண்டவை அல்ல. வலது சாரி இடதுசாரிக் கொள்கைகளுடன் போட்டியில் நிற்பவை அல்ல. இரண்டு பிரதான வேட்பாளர்களும் ஏறத்தாள

**சண்முகம்**

ஒரே கொள்கைகளைக் கொண்டவர்கள் தான். அவற்றை தேர்தல் விஞ்ஞாபனமாக வைக்கும் போது அவற்றிற்குக் கொடுக்கும் விளக்கங்கள் வியாக்கியானங்களிலேயே வேறுபடுகின்றன. அத்துடன் ஒருவரது வாக்குறுதிகள் சிலவற்றை மற்றவர் திருடிவிட்டார் என்று பரஸ்பரம் குற்றம் சாட்டுவதில் இருந்து அவர்களது திட்டங்களின் ஒரே தன்மையினைக் காண முடிகின்றது.

இவற்றை நோக்கும் போது அமெரிக்கா பிரித்தானியா போன்ற ஏகாதிபத்திய நாடுகளில் பலகட்சிகள் என்ற தோற்றப்பாட்டுடன் இரண்டு கட்சிகள் மட்டுமே மாறிமாறி ஆட்சி அதிகாரம் செலுத்தி வருவதை நினைவு கொள்ள வேண்டியுள்ளது. ஏன் மிகப் பெரிய ஜனநாயக நாடு எனக் கூறப்படும் இந்தியாவில் மத்திய மாநில அரசாங்கங்களிலும் பல கட்சிகள் பற்றிக் குறிப்பிட்டாலும் பிரதான இரண்டு கட்சிகளே தீர்மானங்களை முடிவெடுக்கும் கட்சிகளாக உள்ளன என்பது நோக்க வேண்டியதாகும்.

1978ல் மறைந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனா பாராளுமன்றத்திற்கு மேலான தனிநபர் சர்வாதிகார ஆட்சிக்கான அரசியலமைப்பைக் கொண்டு வந்தார். அதன் மூலம் இரண்டு பிரதான ஆளும் வர்க்க பேரினவாதக் கட்சிகளில் ஒன்றிலிருந்தே இச் சர்வதிகார ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது உறுதியாக்கப்பட்டது. இதற்கு அப்பாலான தெரிவு என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். இவ்விடத்திலே குறித்துக் கூறப்பட வேண்டியது யாதெனில் இத்தகைய சர்வதிகார ஜனாதிபதி முறை பற்றி ஆரம்பத்தில் எதிர்த்து நின்றவர்கள் எனப்பட்டவர்களும் அவர்களது கட்சிகளும் இன்று அதே ஜனாதிபதித் தேர்தலில் பங்கு கொண்டு நிற்பது தான் வேடிக்கையானதாகும். இவ் ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்க வேண்டும் என்று ஒரு அடையாளத்திற்காக கூறிவிட்டு அதே சகதிக்குள் இறங்கி நிற்கிறார்கள்.

ஆனால் அதனை ஒழிப்பதற்கும் அதற்கு அடிப்படையாக இருந்து வரும் அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்ற வெகுஜன எழுச்சியை முன்னெடுப்பதற்கு மக்களை அரசியல் மயப்படுத்தவும் அறிவூட்டவும் முன்வராத வரை இத்தனிநபர் சர்வாதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கவே செய்யும். பழைய சர்வதிகாரியின் இடத்தில் புதிய சர்வாதிகாரிகள் தேர்தல் வாக்குரிமை மக்கள் தேரிவு போன்றவற்றால் ஆட்சி அதிகாரத்தை மக்கள் மீது திணித்து ஒடுக்கு முறைகளை முன்னெடுத்தே வருவார்கள். இதனை மக்கள் உணர்ந்து செயற்பட முன்வரும் போதே மாற்றங்கள் நிகழ முடியும்.

# முஸ்லீம் தலைமைகள் யார் யாருக்குப் பின்னால்

## சன்மானமா? சமூக அக்கறையா?




கிழக்கிலங்கை முஸலீம் தலைமைகள் சனாதிபதித் தேர்தலில் எடுத்துள்ள நிலைப்பாடுகள் முஸ்லீம் தேசியவாத அரசியலின் குழப்ப நிலையின் இன்னொரு வெளிப்பாடு மட்டுமே. தெற்கின் முஸ்லிம் தலைவர்கள் பொதுப்பட பெரிய முதலாளியக் கட்சிகளில் ஒண்றோடு தம்மைத் தெளிவாக அடையாளப்படுத்திக் கொண்டுள்ளனர். இதற்கான ஒரு காரணம் சிங்கள மக்களின் ஆதரவு இல்லாமல் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட இயலாத விதமாக முஸ்லீம்களின் சனத்தொகை விகிதாசாரம் அமைந்திருந்தமை எனலாம். எனினும், சிங்களப் பெரும்பான்மையினரிடையே சிதறி வாழுகிற ஒரு முஸ்லீம் சமூகத்துக்கும் ஓரளவு செறிவாகத் தமிழ் – முஸ்லீம் பாரம்பரியப் பிரதேசங்களிடையே உள்ள நிலப்பரப்புக்களில் வாழுகிற சமூகத்திற்கும் முன்னாலுள்ள பிரச்சனைகள் வெவ்வேறானவை. இதைச் சரிவர விளங்கிக் கொள்ளாமல் பாராளுமனற ஆசன வலிமையைப் பெருக்கும் நோக்குடன் அஷ்ரப் தலைமையிலான முஸ்லீம் காங்கிரஸ் தலைமை தென்னிலங்கையில் முஸ்லீம்கள் கணிசமான அளவில் வாழுகிற மாவட்டங்களில் போட்டியிட்டதன் தொடர் விளைவுகளில் ஒன்று முஸ்லீம் காங்கிரஸைத் தளமாகக் கொண்டு நாடுதழுவிய ஒரு அரசியற் கட்சியாக நுஆவை நிறுவியது. அதையொட்டி முஸ்லீம் காங்கிரஸை உருவாக்கிய நோக்கம் பற்றிய கேள்விகள் எழுந்தன. முஸ்லீம் காங்கிரஸ் உள்நெருக்கடி முற்றத் தொடங்கிய நிலையில் அஷ்ரப் ஹெலிகொப்ற்றர் விபத்தில் இறந்த பின்பு, முஸ்லீம் காங்கிரஸில் தலைமைத்துவத்துக்கான போட்டி எழுந்தது.

முதலில் பேரியல் அஷ்ரப்புக்கும் ஹக்கீமுக்குமிடையிலான தலைமைப்போட்டியாக வெளிப்பட்ட மோதல், பின்பு பாராளுமன்றப் பதவி, அமைச்சர் பதவி போன்றவற்றின் அடிப்படையிலான சில்லறைச் சண்டைகளும் பிளவுகளுமாகி முற்றிலும் தனிமனிதர்களது அதிகார மோதலாகவே இன்று மிஞ்சியுள்ளது. பேரியல் அஷ்ரப்பை ஸ்ரீ.ல.சு. கட்சியின் பக்கமும் ஹக்கீமை யூஎன்.பி யை நோக்கியும் தள்ளியது. எந்தவிதமான அரசியற் பார்வை வேறுபாடுமல்ல என்பதை கிழக்கு முஸ்லீம் தலைமைகள் கடந்த நான்கு ஆண்டுகளாக நடந்து வந்துள்ள முறையைக் கவனித்துள்ள யாரும் உணரலாம்.

தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டம் தேசிய இனப்பிரச்சனைக்கு ஒரு அமைதியான தீர்வுக்கான பேச்சுவாரத்தைகளை நெருக்குகிற ஒவ்வொரு சூழ்நிலையிலும், முஸ்லீம் தலைமைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கோரிக்கைகளையும் பேச்சுவார்த்தைகட்கு முட்டுக்கட்டை போடும் வித்திலும் கடந்து வந்துள்ளதற்குக் காரணம் முஸ்லீம்களது நலன்களை வற்புறுத்துகிற நோக்கம் என்று கூற இயலாது. முஸ்லீம்–தமிழ் பகைமையை வளர்த்து அதை பாவித்து முஸ்லீம் வாக்காளர்களைத் தமது பக்கம் திருப்புகிற அளவுக்கு மேலாக அவர்களுக்கு வேறுஎது விதமான சமூக அக்கறையும் இல்லை. முஸ்லீம்களுக்கான தனித்தரப்பு என்பதை வற்புறுத்துவதில் உள்ள ஒற்றுமை தவிர முஸ்லீம்களின் சார்பான கோரிக்கைகள் என்ன என்று ஒரு பொது கருத்துக்கு வருவதாக காணப்படவில்லை.

முஸ்லீம் மக்களின் வாக்குப் பெரும்பான்மையைக் காட்டித் தங்களது சொந்த நலன்களைப் பேணுகிற இந்தத் தலைமைகளின் சமூக அக்கறையின்மையைச் சென்ற ஆண்டு இறுதியில் நிகழ்ந்த சுனாமிப் பேரழிவு மக்களுக்குத் தெட்டத் தெளிவாகியுள்ளது. மக்கள் அல்லற்பட்டுகின்ற வேளையில் அவர்கள் நடுவே சென்று தேவைகளை அறியவோ உதவிக்கு வழிதேடவோ மக்களுக்கு வழிகாட்டவோ முன்வராத தலைமைகள் எல்லாம் சுனாமி நிவாரண நிதியை யார் கையாளுவது என்பது பற்றி மோதிக்கொண்டன.

முஸ்லீம்களின் தேசிய இனப்பிரச்சனை தொடர்பாக ஒரு கூட்டுத்தலைமை, பொது உடன்பாடு என்பன பற்றிய பேச்செல்லாம் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடக்கக்கூடிய சூழ்நிலைகளில் மட்டுமே குரல் உயர்த்துவதும் மற்ற வேளைகளில் வேறுவிதமான அரசியல் பேரங்களில் தமது நலத்தைச் செல விடுவதும் திரும்பத்திரும்ப நடக்கிற விடயங்கள். தமிழ – முஸ்லீம் ஒற்றுமைக்கும் தேசிய இன ஒடுக்குதலுக்கு எதிரான ஒன்றுபட்ட நிலைப்பாட்டுக்கும் தடையாகவே இன்றைய முஸ்லீம் பாராளுமன்ற அரசியல் தலைமை உள்ளது. அதைவிட முக்கியமாகத் தேசிய இனப்பிரச்சினையை மேலுங் குழப்புகிற விதமாகக் கிழக்கில் தமிழ்– முஸ்லீம் மோதல்களைத் தூண்டி விடுவதில் இந்திய மேலாதிக்கத்தின் கருவிகளாகவும் முஸ்லீம் தலைவர்கள் சிலர் செயற்பட்டுள்ளனர்.

**ஏ.ஆர்.எம்**

சனாதிபதித் தேர்தலில் யார் யாரை ஆதரிப்பது என்ற விடயத்தில் யார் வென்றால் யாருக்கு என்ன சன்மானங்கிடைக்கும் என்ற கணிப்புக்களை விட வேறெதுவுமே இல்லை.

ரணில் விக்கிரமசிங்ஹவோ மஹிந்த ராஜபக்ஷவோ இது வரை தேசிய இனப்பிரச்சனையின் தீர்வு பற்றி ஒரு தெளிவான நிலைப்பாட்டை முன்வைக்கவில்லை. தமிழ் மக்களின் பிரச்சனைபற்றியோ விடுதலைப்புலிகள் கடைசியாக முன்வைத்த இடைக்கால நிருவாக ஆலோசனை பற்றியோ திட்டவட்டமாக எதையுமே கூறமாட்டாத வேட்பாளர்கள் முஸ்லீம்களின் கோரிக்கைகள் என்னவென்றே சொல்ல இயலாமலுள்ள முஸ்லீம் தலைமைகளிடம் என்ன உறுதிமொழிகளை வழங்கியிருக்க முடியும்?

அண்மையில் மலையகப் பாடசாலை ஆசிரியர் நியமனந் தொடர்பாக மலையகத் தமிழரைப் பகைக்கிற விதமாக நடந்து கொண்ட கிழக்கின் முஸ்லீம் தலைமைகள் முஸ்லீம்களை மற்றத் தேசிய இனங்களிடமிருந்து தனிமைப்படுத்திப் பலவீனப்படுத்துகிற காரியங்களையே தொடர்ந்தும் செய்து வருகின்றன.

முஸ்லீம்கள் தொடர்பாக தமிழ்த் தேசியவாதிகளின் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றி நிறையவே விமர்சிக்க உள்ளது. எனினும் தமிழ்– முஸ்லீம் முரண்பாடுகளைப் பகை முரண்பாடாக வளர்த்துச் சுயலாபம் தேடுகிற தலைமைகள் இரண்டு சமூகங்கட்கும் துரோகம் செய்கின்றன. சனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரை, இரண்டு பிரதான வேட்பாளர்களதும் நிலைப்பாடுகள் என்னவாக இருந்திருந்தாலும், அதை முடிவு செய்வதில் அவர்களை ஆதரித்து அறிக்கை விட்டுள்ள எந்தத் தேசிய சிறுபான்மை இனத் தலைமைக்கும் ஒரு அற்ப பங்கேனும் இருந்திருக்க முடியாது. அதை விட, அந்த நிலைப்பாடுகள் என்னவாக இருந்திருந்தாலும் யார் யாரை ஆதரிப்பது என்ற முடிவைத் தீர்மானித்தவை அரசில் நிலைப்பாடுகளல்ல, மாறாகத் தலைவர்கள் எனப்படுவோரின் பணம் பதவிகள் கொண்ட சுயலாப நோக்கமேயாகும்.

## இந்தியாவின் சாதி வெறி

உலகின் பெரிய ஜனநாயக நாடு இந்தியா என்று அடிக்கடி பெருமையாகப் பீற்றிக் கொள்ளப்படுகிறது. அந்த இந்தியாவில் கடந்த செப்டம்பர் மாத 24ம் திகதி சனிக்கிழமை தாழ்த்தப்பட்ட பெண்கள் ஆறுபேர் நிர்வாணமாக வீதி வலம் வருமாறு உயர் சாதியினர் எனப்படுபவர்களால் பலாத்காரமாகப் பணிக்கப் பட்டனர்.

இருபத்தி ஒன்பது உயர்சாதி ஆண்களால் ஒறிசா மாநிலத்தின் பானபதி கிராமத்தில் தாங்கள் தாக்கப்பட்டும்– பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

ஒரு திருமண வைபத்தின் போது விருந்தினரின் கால்களைக் கழுவுமாறு அந்தப் பெண்கள் பணிக்கப்பட்டனர். அவர்கள் அதை மறுத்துவிட்டனர் என்பதற்காகவே உயர்சாதி துச்சாதனர்கள் தாழ்த்தப்பட்ட பெண்களின் துகிலுரியும் வேலையில் ஈடுபட்டனர். "எனது வீட்டிலிருந்து வெளியே இழுத்தவர்கள் என்னை மோசமாகத்தாக்கி நிர்வாணமாக்கினர்" என ஒரு பாதிக்கப்பட்ட பெண் பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்தார். அங்கும் பொலீசார் வழமைபோல் விசாரணைகளை மேற்கொள்கிறார்களாம். எல்லாம் வழமையான கண்துடைப்பேயாகும். காந்தியாலும் நேருவாலும் வாங்கிக் கொடுத்தாகக் கூறப்படும் சுதந்திர இந்தியா 58 வருட "ஜனநாயக" ஆட்சியில் இருந்து வந்துள்ளது. ஆனால் அங்கு சாதியமும் பெண்கள் மீதான ஒடுக்குமுறையும் ஒழிக்கப்பட்டதா என்பதே எம் முன் எழுந்து நிற்கும் கோள்வியாகும்.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் சனநாயகமும்

## அரசியல் வரலாற்று விசாரணை (06)

பேராசிரியர் சி.சிவசேகரம்

சோஷலிஸ நாடுகளில் சனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் போது பலவாறான நேருக்கடிகட்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஒரு புறம் தமது அரச அதிகாரத்தை இழந்த முதலாளி வர்க்கமும் அதன் நெருங்கிய கூட்டாளிகளான ஏகாதிபத்தியமும் சோஷலிஸ ஆட்சி அமைதியாக நடக்க இடங்கொடுக்கமாட்டா. சோஷலிஸ ஆட்சி ஏற்பட்ட நாடுகளிற் பெரும்பாலானவை ஆட்சி மாற்றத்தின் முன் முழுமையான முதலாளிய வளர்ச்சியடையாதவை. அத்துடன் புரட்சி ஏற்பட்ட சூழ்நிலை பெருமளவும் போர், அயல் ஆக்கிரமிப்பு, பொருளாதாரச் சீரழிவு ஆகியவற்றைப் பின்புலமாகக் கொண்டிருந்தது.

## சோஷலிஸத்தின் விரோதிகளும் சனநாயகத்தின் எதிரிகளும்

எனவே மக்களின் அடிப்டைத் தேவைகளை நிறைவு செய்வதற்கே சோஷலிஸ ஆட்சி பெருஞ் சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது.அரச இயந்திரத்தை சோஷலிஸத்தின் எதிரிகட்கு மாறாகப் பலப்படுத்த வேண்டி நேர்ந்தது. இவ்விடத்தில் எதிரியின் வலிமையை மிகையாகக் கணிப்பிடுவதும் மிகுதியான எச்சரிக்கை உணர்வும் சனநாயகத்தைப் பலவீனப்படுத்த இடமுண்டு. அதே வேளை, மிகவும் நெகிழ்வான போக்கு விரைவாகவே சோஷலிஸ ஆட்சிக்குக் குழிபறிக்கும் முயற்சிகட்கு வசதியாகிவிடும்.

இதை விட முக்கிமாகப் பழைய அரசமைப்பை மாற்றுவதால் பழைய சிந்தனைகள் தாமாக மறைந்து விடமாட்டா. ஒருவர் சோஷலிஸத்தை ஏற்பவராக இருப்பதால் மட்டுமே அவர் முழுமையான சோஷலிஸவாதி ஆகிவிட முடியாது. மாற்றத்தின் பின்பும் ஒவ்வொருவரது சிந்தனையிலும் பழைய சமூதாயத்தின் கருத்தியல் வேரோடிக் கிடக்கும். அதை இடையறாத போராட்டத்தின் மூலமே வெல்ல முடியும். துடைப்பம் படாத இடத்தில் தூசு தானாக மறையாது என்பது மட்டுமன்றி, பிற்போக்கான பழைய சிந்தனையின் தூசு நீண்டகாலத்திற்குத் தொடர்ந்தும் படிந்து கொண்டே இருக்கும் என்பதால் துடைப்பதைத் திரும்பத் திரும்பப் பாவிக்கிற தேவையும் தொடரும். கம்யூனிஸ்ற் கட்சிக்குள்ளேயே பழைய சுரண்டற் சமூதாயச் சிந்தனை ஊடுருவித் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளுகிற அபாயம் பற்றி மிகத் தெளிவாக விளக்கி எச்சரித்தவர் மாஓ சேதுங் எனலாம்.

சோஷலிஸத்தைக் காப்பாற்றுவதற்கு சனநாயகம் வலுப்படுத்தப்பட வேண்டும். ஒரு கம்யூனிஸ்ற் கட்சியிடம் கேள்விகளை எழுப்பும் உரிமை மக்களுக்கு இல்லாவிட்டால், கேள்விகட்கு உரிய பதிலளிக்கும் ஆற்றல் கட்சியிடம் இல்லாவிட்டால் கட்சி மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போகிறது. போர்ச்சூழல், அந்நியமிரட்டல், பொரளாதார நெருக்கடிகள் நெருக்குவாரங்கள் போன்றவை கட்சிக்குள்ளே ஒரு அதிகார வர்க்கத்தை உருவாக்கும் ஆபத்தை உண்டாகுகின்றன. எனினும் இப்பிரச்சனைகளைக் கையாள வெகுசனப் பாதையைத் தொடருகிற ஒரு தலைமை சனநாயகத்தையும் சோஷலிஷத்தையும் வலுப்படுத்தும். அவ்வாறு செய்யத்தவறும் போது மக்களின் அதிகாரம் பலவீனமடைந்து ஒரு அதிகார வர்க்கம் உருவாக்கிக் கட்சி இயந்திரத்தையும் அரசையும் தன் கைக்குள் வைத்துக் கொள்ள வாய்ப்புண்டு. இதன் விளைவுகளை நாம் எவ்வளவு கடுமையாக விமர்சித்தாலும் சோஷலிஸ ஆட்சியில் அடிப்படையான உற்பத்தி உறவுகளும் உற்பத்திச் சாதனங்களின் உடைமையும் முதலாளியச் சமுதாயங்களிலிருப்பதை விட வித்தியாசமானவையும் மக்கள் நலனுக்கு உகந்தவையும் என்பதை எவரும் ஏற்றாக வேண்டும்.

சோவியத் யூனியனின் அனுபவங்களினின்று பாடங்களைக் கற்றதாலேயே மாஓவால் சீனாவில் முதலாளியச் சிந்தனை கம்யூனிற் கட்சிக்குள்ளேயே உருவாகி வளரும் என்பதை அறிய முடிந்தது. அவரது சனநாயகச் சிந்னை காரணமாகவே சனநாயகமான கருத்து மோதல் மூலமும் மக்களை ஒரு போராட்டச் சக்தியாக வலுப்படுத்திப் பழைய சிந்தனையை முறியடிக்க இயலும் என்று அவரால் விளக்க முடிந்தது. பின் தங்கிய பொருளாதார வளர்ச்சியுள்ள ஒரு நாட்டில் சமூக ஏற்றத்தாழ்வுகள் பல வேறு வடிவங்களிற் செயற்படும். அவற்றைக் களையச் சனநாயகமும் மக்கள் போராட்டமும் தேவை. அவற்றைக் களையாமல் எந்தவிதமான சனநாயகமும் நிலைக்காது. சீனக் கலாசாரப் புரட்சிக்கான ஒரு முக்கிய நியாயப்பாடு இதுவே.

சோவியத் யூனியனில் சர்வாதிகாரம் பற்றிப் பேசப்படுகிறது. சோவியத் யூனியனில் லெனின் தலைமைக்கு கீழும் சர்வாதிகாரமே இருந்ததாகக் கூறுகிறவர்கள் அக் காலங்களில் உழைக்கும் மக்களின் வாழ்க்கை எப்படி இருந்தது என்பது பற்றிக் கவனிப்பதில்லை. சோவியத் அரசு சில விடயங்களில் மிகவும் கடுமையாகவே நடந்து கொண்டது. அது ஏன் என்ற கேள்வியை இவர்கள் தவிர்த்து விடுகிறார்கள். புரட்சி மூலம் ரஷ்ய முடியாட்சி கவிழ்ந்த போது முதலாளிய நாடுகள் எல்லாம் இணைந்து புதிய சோஷலிஸ அரசை எதிர்த்துப் போரில் இறங்கின. உலகத் தொழிலாளி வர்க்கம் சோவியத் யூனியனை ஆதரித்து நின்றது. ஆக்கிரமிப்பு மூலம் செய்ய இயலாததை உள்நாட்டு யுத்தத்தைக் கொண்டு செய்ய முற்பட்டனர். பலவாறன பொருளாதாரத் தடைகட்கும் நெருக்குவாரங்கட்கும் முகங்கொடுத்த அதே வேளை ஏகாபத்திய நாடுகளிடமிருந்து சோவியத் யூனியனின் ஆயுத வலிமைமையையும் மேம்படுத்தும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் பின் நிலவிய சில ஆண்டுக்கால அமைதியைக் குலைக்கும் விதமாக ஜேர்மன் ஃபாஸிஸ ஆட்சி இரண்டாம் உலகப்போரினுள் சோவியத் யூனியனை இழுத்து விட்டது. இரண்டாம் உலகப்போரில் அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடு சோவியத் யூனியன் என்பதையும் ஜேர்மன் படைகளை சோவியத் படைகள் முறியடித்ததாலேயே ஜேர்மனியைப் போரில் தோற்கடிக்கும் சூழ்நிலை உருவானது என்பதை சோவியத் யூனியனின் இன்றைய விமர்சகர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

இப்படியான ஒரு பின்னணியில் பல தவறுகள் நிகழ்ந்துள்ளன. எனவே தான் சோவியத் அனுபவத்தினின்று நேர்முறையான பாடங்களைக் கற்க வேண்டியுள்ளது போல எதிர்மறையான பாடங்களையுங் கற்க வேண்டியுள்ளது. எவ்வாறாயினும் புரட்சிக்கு முன்பும் பின்பும் சோவியத் யூனியனின் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் சமூக உரிமைகளையும் ஒப்பிடாமல் சோவியத் யூனியனை விமர்சிப்பது நியாயமற்றது. ஸ்ற்றாலினுக்குப் பின்பு சோவியத் யூனியன் முதலாளியப் பாதையில் தன் பயணத்தை மெல்ல மெல்லத் தொடங்கியது. இது கொர்பச்சொவ் ஆட்சியில் துரிதமடைந்து முடிவில் சோவியத் யூனியனின் உடைவுக்கும் சோஷலிஸத்தின் வீழ்ச்சிக்கும் காரணமானது.

முதலாளிய ஆட்சிமுறை சோவியத் யூனியனின் எந்தக் குடியரசிலும் முறையான சனநாயக ஆட்சிக்கு வழி செய்யவில்லை. மாறாக மோசமான பொருளாதாரச் சரிவையும் சனநாயக மறுப்பையுமே ஒவ்வொரு முன்னைய சோவியத் குடியரசிலும் காணுகிறோம். சீனாவில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள், உழைக்கும் மக்களுடைய உரிமைகளைப் பறிக்கிற போக்கிலேயே நாட்டை கொண்டுசெல்கின்றன. அரசுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாடுகள் வளருவதையும் நாம் காணலாம். சோஷலிஸ ஆட்சி நலிவடைந்து உற்பத்தி மேலும் வலுவடையம் போது புதிய பணம் படைத்த வர்க்கத்தினர் கூடுதலான உரிமைகளை அனுபவிக்கிறார்கள். அதே வேளை பெரும்பாலான மக்கள் சோஷலிஸத்தின் கீழ் அனுபவித்து வந்த உரிமைகளை இழந்து வருகிறார்கள். எனவே முரண்பாடு நிச்சயமாக சோஷலிஸத்துக்கும் சனநாயகத்தும் இடையிலானதாக இருக்க முடியாது.

சோஷலிஸம் அடிப்படையான சனநாயக உரிமைகள் பலவற்றையும் உயர்த்திப் பிடிக்கிறது. சனநாயக உரிமைகள் என்று முதலாளியம் கொண்டாடுகிற சில உரிமைகளை அது மறுக்கிறது. இது இரண்டு வித்தியாசமான உலகப் பார்வைகளிடையிலான அடிப்படையான வேறுபாடாகும்.

சோஷலிஸ ஆட்சிகளின் கீழ் மக்கள் பூரணமான சனநாயக உரிமைகளை அனுபவிக்க இயலாமல் இருந்து வந்துள்ளது உண்மை. அதற்கான முக்கிய காரணம் வலிய முதலாளிய நாடுகளின் குறுக்கீடும் ஆக்கிரமிப்பும் என்பேன். சோஷலிஸ அரசுகள் மக்கள் அதிகாரத்தை வலுப்படுத்துவதன் மூலமே முதலாளிய வல்லரசுகளது நெருக்குவாரங்கட்கு முகங்கொடுக்க முடியும்.

**சோஷலிஸத்தைக் காப்பாற்றுவதற்கு சனநாயகம் வலுப்படுத்தப்பட வேண்டும். ஒரு கம்யூனிஸ்ற் கட்சியிடம் கேள்விகளை எழுப்பும் உரிமை மக்களுக்கு இல்லாவிட் டால். கேள்விகட்கு உரிய பதிலளிக்கும் ஆற்றல் கட்சியிடம் இல்லாவிட்டால் கட்சி மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போகிறது.**

சனநாயகம் பற்றிய ஒப்பீடுகள் வரலாற்று அடிப்படையிலும் சமகால உலகச் சூழலினதும் குறிப்பான பிரதேச அரசியல் நிலவரங்களதும் அடிப்படையிலுமே சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

எந்தவொரு விடுதலைப் போராட்டமும் சமூகப்புரட்சியும் மனித சமத்துவத்தையும் வெகுசன அரசியலையும் உழைக்கும் மக்களின் சமூக அரசியல் உரிமைகளையும் வற்புறுத்தி எந்த விதமான மேலாதிக்கத்தையும் எதிர்ப்பதில் பின்நிற்காது வழிநடத்தப்படும் என்றால் அது சனநாயமான சமூகத்திற்கான வலியதொரு அத்திவாரத்தை இடும். இது சமகால வரலாறு கூறும் ஒரு முக்கியமான பாடம்.

மனிதரை மனிதர் சுரண்டுவதை நியாயப்படுத்துகிற எந்தச் சமூக அரசியல் முறையும் முதலாளியத்தை வலுப்படுத்துவதோடு நில்லாமல் ஒவ்வொரு நாட்டிலும் முழு உலகிலும் சனநாயத்திற்குக் குழிபறிக்கும். இது சமகால வரலாறு கூறும் இன்னொரு பாடம்.

சனநாயகத்தைப் பற்றிய தெரிவை மனித சமத்துவம் பற்றிய தெரிவிலிருந்து பிரித்தெடுக்க இயலாது என்பதை ஏற்போமானால் சனநாயகம் பற்றிய கேள்விகட்கு விடைகாண்பது எளிது.

# நாடு முழுவதும் கொலைக் கலாச்சாரம்

காலை விடிந்ததும் ஊடகங்களில் பிரதான நாளாந்த செய்தியாகக் காணக்கிடைப்பது கொலைகள் பற்றியதாகும். தொலைக் காட்சிகளில் அன்றாட கால நிலை பற்றி அறிவிப்பது போன்று இக் கொலைகள் பற்றிய செய்திகள் நாள் தவறாது வாசிக்கப்படுகின்றது. நாட்டின் எந்தவொரு இடத்திலும் ஏதாவது ஒரு கொலைச் சம்பவம் ஒவ்வொரு நாளும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

முன்பு வடக்கு கிழக்கில் யுத்த சூழலின் கீழ் இக்கொலைகள் சர்வ சாதாரணமாகவே இடம் பெற்று வந்தது. ஆனால் 2002 பெப்பவரி மாதத்திலிருந்து அரசாங்க- புலிகள் இயக்க புரிந்துணர்வு யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததன் ஊடாக கொலைகள் ஓய்ந்து விடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. முற்றாக இல்லாவிடினும் ஆகக் குறைந்தளவுக்காவது இல்லாது போகும் என்றே மக்கள் நம்பினர். அதெல்லாம் வெறும் கனவாகவே போய் விட்டது. நிழல் யுத்தம் என்று கூறப்படுவதன் கீழ் வடக்கு கிழக்கில் பெருமளவிற்கு "இனம் தெரியாதோரால்" நடத்தப்படும் கொலைகளில் மனிதர்கள் வீழ்த்தப்படுகின்றனர். சுட்டும் வெட்டியும் குண்டு வீசியும் கொல்லப்படுகிறார்கள். இத்தகைய கொலைகளினால் வடக்கு கிழக்கில் பீதியுடனும் அச்சங்களுடனுமே அன்றாட வாழ்வை மக்கள் கழிக்க வேண்டியுள்ளது.

கிழக்கில் புலிகள் இயக்கத்திலிருந்து கருணா குழுவினர் பிரிந்து சென்றதிலிருந்து இருபுறத்திலிருந்தும் பழிக்குப் பழி என்ற ரீதியில் கொலைகள் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. இச் சூழலை பேரினவாத அரச படைகள் தமக்கு வசதியாகப் பயன்படுத்தி இக் கொலைகள் தொடரவைத்தும் வருகின்றன. ஆங்காங்கே புலிகள் இயக்கத்தினர் மீது தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன.

இக்கொலைகளில் ராணுவமும் அதன் புலனாய்வுப் பிரிவினரும் துணைப்படையினரும் சம்மந்தப்படுவதாக புலிகள் இயக்கம் குற்றம் சாட்டி வருகின்றது. துணைப்படையினர் எனச் சுட்டப்படுவது முன்னைய தமிழ் ஆயுத இயக்கங்களைச் சேர்த்தவர்களையேயாகும். இத்தகைய இயக்கங்களைச் சேர்ந்தவர்களும் அல்லது அவற்றின் முன்னாள் உறுப்பினர்களும் கொல்லப்படுகின்றனர். இக் கொலைகளைப் புலிகள் செய்து வருவதாக அவ் இயக்கத்தினர் குற்றம் சாட்டுகின்றனர். ஏற்கனவே கிழக்கில் இடம்பெற்று வந்த இத்தகைய நாளாந்தக் கொலைகள் இப்போது வடக்கில் வேகம் காட்ட ஆரம்பித்துள்ளது. இவ்வாறான கொலைக் கலாச்சாரச் சூழலை மக்கள் விரக்தியுடனும் வேதனைகளுடனும் வெறுக்கின்றனர். தம்முள் பேசி தமது கருத்துக்களை அமுக்கிக் கொள்கின்றனர். வெளியே அவை வந்தால் வீண் சோலியும் பிரச்சினையும் வந்து விடுமோ என அஞ்சி தாம் உண்டு தம்பாடு உண்டு என இருந்து விடும் நிலையிலேயே மக்கள் இருந்தும் வருகின்றனர். அதே வேளை ஊடகங்கள் எனப்படுபவையும் கூட சுய தணிக்





கைகளுடன் அல்லது தத்தமது சார்பு நிலைக்கேற்றவாறு இக்கொலைகள் பற்றி ஒன்றை நியாயப்படுத்தியும் மற்றதை கண்டித்தும் கருத்துரைக்கும் போக்கையே காண முடிகிறது. இன்னும் சிலர் யுத்த சூழலில் விடுதலைப் போராட்ட முன்னெடுப்பில் இத்தகைய கொலைகள் தவிர்க்க முடியாதவை என்றும் கூறிக் கொள்கின்றனர். ஆனால் இறந்து போபவர்கள் யார்? அவர்களை நம்பிய குடும்பங்களின் கதி என்ன? இதன் மூலம் மக்கள் எத்தகைய மனநிலைக்கு ஆளாகுவார்கள் என்பன பற்றி ஆழ்ந்து சிந்திப்பது அவசியமாகின்றது. இது ஒரு தரப்பிற்கு மட்டும் உரிய ஒன்றல்ல. சம்மந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் கவனத்திற்கு எடுக்க வேண்டியதாகும.

தொடர்ச்சி 8ம் பக்கம்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# ஜனாதிபதி தேர்தலில் இடதுசாரிக் கோமாளிகள்

ஜனாதிபதித் தேர்தலில் ஐ.ம.சு.முன்னணியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்சாவை ஆதரிப்பதென வாசுதேவ நாணயக்கார எடுத்திருக்கும் முடிவு 'இடதுசாரிகளுக்கு' எதிரான வாதங்களுக்கு மேலும் வலுச் சேர்த்துள்ளது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, இனசமத்துவம் என்பன பற்றியெல்லாம் சிங்கள மக்கள் மத்தியிலிருந்து பிரசாரம் செய்து வந்த வாசுதேவ நாணயக்காரவா மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கிறார் என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர். 1972 ஆண்டு அரசமைப்பை ஏற்படுத்திய கொல்வின் ஆர்.டி.சில்வா, சுதந்திரக் கட்சியிடம் சரணடைந்த என்.எம்.பெரேரா, பீட்டர்கெனமன் போன்ற இடதுசாரி தலைவர்கள் வரிசையில் வாசுதேவா வையும் வைக்கின்ற நிலைமைக்கு பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

அவர் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்தமை அவரின் தூய்மையான தனிப்பட்ட நிலைப்பாடல்ல. அதே போன்று தற்போது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிராக மீண்டும் நாட்டில் யுத்தத்தை ஏற்படுத்துவதற்கான அணுகு முறைகளை கொண்டுள்ள மஹிந்த ராஜபக்சாவை ஆதரிப்பது என்பதும் வாசுவின் தனிப்பட்ட தூய்மை கெட்ட நிலைப்பாடல்ல. எல்லாம் கொள்கையில் ஏற்படுகின்ற மாற்றங்களே. மாக்சியத்தை உச்சரிக்கும் ஆனால் மாக்சிஸ லெனினிசத்தை நடைமுறையில் கடைப்பிடிக்காத ட்ரொட்சிய வாதிகள் இவ்வாறுதான் நடந்து கொள்வர் என்பதற்கு இன்னொரு உதாரணமே வாசுதேவ. ஆனால் மாக்சியம், லெனினியம், இடதுசாரியம் என்பன இப்படிக் கேவலமான சந்தர்ப்பவாதமாக மாறக்கூடியவை அல்ல.

மாக்சியம் என்ற பேரில் இயங்கும் ட்ரொஸ்கைடுகள் (சமசமாஜக் கட்சி) திரிபுவாதிகள் (ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி) பாராளு மன்றத்தை மட்டும் குறிவைத்துக் கொண்டு இடதுசாரியம் கதைப்பவர்கள், தொழிற்சங்கவாதத்தை மட்டும் உயத்திப் பிடிக்கும் இடதுசாரிகள், **N.G.O** களில் இருந்து கொண்டு இடதுசாரியம் பற்றி கதைப்பவர்கள் போன்ற பம்மாத்து செய்யும் இடதுசாரிகள் இருப்பதையும் தவிர புரட்சிகர கழுவ வேண்டியனவாக இருக்கின்றன. ட்ரொட்கியை மூலருவாகக் கொண்டு இயங்கின்ற ட்ரொஸ்கைடுகளின் நடவடிக்கைகளை நன்கு அவதானித்தால் அவர்களின் குழம்பிய அரசியலை விளங்கிக் கொள்ளமுடியும்.

இதைவிட மாக்சியம் லெனினிசம் பற்றிக்கதைக்கும் அதே வேளை பாராளுமன்ற அரசியலை மட்டுமே கொண்டிருக்கும் கம்யூனிஸ் ட்டுகளின் நிலைப்பாட்டை திரிபுவாதம் என்கிறோம். ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி இத்தகையதே ஆகும். அவர்கள் எப்போதுமே ஐ.தே.கட்சி எதிர்ப்பு என்பதை கூறிக்கொண்டு சுதந்திரக் கட்சியின் அரசாங்கத்தில் பதவி வகித்து வருவதை பழக்க மாக்கிக் கொண்டவர்கள்.

மகிந்தவிற்காக ஜே.வி.பி முழுமூச்சாக செயற்பட்டுவருகிறது. அதேபோன்று தாங்களும் செயற்படுவதாக வாசுதேவ சமசமாஜக்கட்சி ட்ரொஸ்கைடுகள் திரிபுவாத கம்யூனிஸ்ட் கட்சியினர் என்போர் தங்களை இடதுசாரிகள் என்று கூறிக்கொண்டு மஹிந்தவிற்கு ஆதரவளித்து வருகின்றனர். இவர்கள் சிங்கள பேரினவாத மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டே ஏனைய இனங்கள் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை கொண்டவர்களாகவே இருக்கின்றனர். அத்துடன் அவர்கள் 'இடதுசாரி' என்ற பம்மாத்தும் காட்டுகின்றனர்.

இதைத்தவிர இடதுசாரிகள் என்று தனித்தனியாக மூவர் போட்டியிடுகின்றனர் புதிய இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோஷலிஷக்கட்சி, சோஷலிஸ சமத்துவக் கட்சி ஆகியகட்சிகளிலிருந்து ஒவ்வொருவர் போட்டியிடுகின்றனர். இந்தக் கட்சிகளில் ஒன்று இந்திய மேலாதிக்க வழிகாட்டலாலும் இன்னொன்று ஐ.தே.கட்சியின் அனுசரனையுடனும் மற்றையது அதனது சர்வதேச காரியாலயத்தின் கட்டளைக்கு இணங்கவும் போட்டியிடுவதாக நம்பகமான தகவல்கள் கிடைத்துள்ளன.

இக்கட்சிகள் எதுவுமே வெல்லப் போவதில்லை. ஆனால் இரண்டு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களையும் எதிர்த்து மக்கள் அபிப்பிராயத்தை திரட்ட வேண்டுமென்று யோசித்



டியூ. குணசேகரா வாசுதேவா சிறிதுங்கா விக்கிரமபாகு

மாக்சிஸ்ட்டு லெனினிஸ்டுக்கள் இருப்பதையும் சிலர் அறிவதில்லை. அறிந்திருக்கும் சிலரும் அவர்களின் முதலாளி வர்க்க நிலைப்பாடு காரணமாக இடதுசாரிகளை பொத்தாம் பொதுவாக திட்டித் தீர்ப்பவர்களாக இருப்பதால் வாசுதேவ மஹிந்தவை ஆதரிப்பது போன்ற விடயங்களை புரட்சிகர மாக்சிய லெனினிய சக்திகளிலிருந்து பிரித்துப் பார்ப்பதில்லை. அவர்களுக்கு அதற்கான தேவையும் இல்லை.

இடதுசாரிகள் என்ற அடையாளத்துடன் இயங்குகின்ற ட்ரொஸ்கைடுகள் ஒன்று அதிதிவிரமாக பேசுவார்கள். இல்லாவிட்டால் சந்தர்ப்பவாத சகதிக்குள் வீழ்ந்து விடுவார்கள். இவர்கள் செய்யும் பாவம் பழியெல்லாவற்றையும் புரட்சிகர சக்திகளே திருத்தால் இவர்கள் இடதுசாரிகள் என்றரீதியில் பொது அபேட்சகர் ஒருவரை போட்டியிடச் செய்திருக்கலாம். இவர்கள் தனித்தனியாக ஒருவர் இடதுசாரி வேட்பாளர் என்றும் இன்னொடுவர் சோஷலிஸ வேட்பாளர் என்றும் மற்றையவர் சுதந்திரமான தொழிலாளர் வர்க்க வேட்பாளர் என்றும் போட்டியிடுவது என்பது ஏதோ வகையில் இரண்டு பிரதான வேட்பாளர்களில் ஒருவருக்கு உதவுவதாகவே அமைந்துள்ளது.

இதனால்பிரதான பிரச்சினையாக இருக்கின்ற தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பதை வற்புறுத்தியும் உலகமயமாதலை எதிர்த்தும் ஒரு பொது இடதுசாரி வேட்பாளரை காண முடியவில்லை. இதன் மூலம் பேரினவாதம் பலமடையவும் உலகமயமாதல் விரிவடையவும் வழியேற்பட்டுள்ளது.

அத்துடன் முழுக்கமுழுக்க பாராளுமன்றப் பாதையை ஏற்றுக்கொண்டுள்ள இடதுசாரிகள் எனப்படுபவர்களுக்கு தேர்தலில் போட்டியிடுவது "மேனியாவாகி விட்டது" தேர்தல் வந்தால் அதிகமாக பணம் விரையமாவது தெரிந்ததே. ஆனால் சில இடதுசாரி கட்சிகளுக்கு வங்கிக் கணக்குகள் நிறைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அப் பணம் பல வழிகளிலும் கிடைத்து வருவதாக அறிய முடிகிறது.

எனவே எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் "இடதுசாரிகள்" என்ற கோமாளிகளின் பிரசாரங்களில் கவனம் செலுத்தாது இரண்டு பிரதான கட்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை மக்கள் காட்ட வேண்டும். அது ஜனாதிபதி தேர்தலை நிராகரிப்பதாகவே இருக்க முடியும். செம்பறவை

# மேல் கொத்மலைத்திட்டம் பற்றி எடுத்துரைக்காத மலையகக் கட்சிகள்

மலையகத்தமிழ் மக்களுக்கு முக்கியமான ஒரு பிரச்சினையாக இருப்பது மேல்கொத்மலைத்திட்டம். அதைப்பற்றி ஜனாதிபதி வேட்பாளர்கள் எதையும் பேசுவதாக இல்லை. ஏனெனில் ரணிலை ஆதரிக்கும் மலையகக் கட்சிகளோ மஹிந்தவை ஆதரிப்போரோ மேல்கொத்மலைத்திட்டத்தை கைவிடவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கவில்லை. மேற்படி கோரிக்கையை முன்வைத்து மேல்கொத்மலைத்திட்டத்தை நிறுத்த முடியாது என்றாலும் மக்களின் எதிர்ப்பை தாங்கள் ஆதரிக்கும் அபேட்சகர்களிடம் முன்வைக்கும் துணிவோ நேர்மை திறனோ அற்றவர்களாகவே மலையகத் தலைவர்கள் இருக்கிறார்கள் என்பதையே இதனால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

நுரைச்சோலை அனல் மின் திட்டத்தை கைவிடுவதாக மஹிந்த குறிப்பிட்டுள்ளார். அத்திட்டத்தினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு குழுவை நியமிக்கப் போவதாக ரணில் அறிவித்துள்ளார். இங்கு அவர்களை ஆதரிக்கும் முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ சமூகத் தலைவர்கள் மக்களின் எதிர்ப்பை ஜனாதிபதி வேட்பாளர்களிடம் துணிவுடன் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிராக இரண்டு கட்டப்போராட்டங்கள் நடைபெற்றன. செப்டெம்பர் மாதம் முழுவதுமே அத்திட்டத்திற்கு எதிரான மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் நிறைவு நிகழ்வாக தலாக்கொலலையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பேரினவாத குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். அந்தளவுக்கு அவ் இயக்கம் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இதற்குப்பிறகும் மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான நிலைப்பாட்டை மலையகக் கட்சிகள் முன் எடுப்பதாக இல்லை. காரணம் அந்தளவிற்கான மக்கள் விரோத நிலைப்பாட்டையே அரசியலாக கொண்டிருக்கின்றன என்பதேயாகும். இவர்களுக்கெல்லாம் மலையகத்தில் உரிமைக்காக குரல் எழுப்பும் சொந்த மக்கள் தாக்கப்படும் போது கூட உணர்வு உணர்ச்சிக்கிளம்பாது. ஆனால் மேர்வின் சில்வா ஏதோ பேசிவிட்டால் மட்டும் இவர்களின் உணர்ச்சிகள் கொப்பளித்து காடுகொள்ளாத அளவுக்கு வெள்ளமாகப் பாயும். தாங்கள் ஐக்கியப்பட்டு தலைநகரையே கலக்கிவிட்டதாகத் தம்பட்டம் அடிப்பர். பேரினவாத எசமானர்கள் முன் பணிந்து குனிந்து நிற்கும் இவர்களால் எப்படி மலையக மக்களின் உரிமைகளைப் பெற முடியும்.

## நாடு முழுவதும்

7ம் பக்க தொடர்ச்சி

ஏனெனில் வடக்கு கிழக்கில் கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேல் மக்கள் பல வழிகளாலும் உயிர்ப்பலிகளுக்கும் உடைமை இழப்புகளுக்கும் இடப்பெயர்வுகளுக்கும் உள்ளாகி வந்துள்ளனர். இனவாத வன்முறைகள், பேரினவாத ஒடுக்குமுறை, புயல் வெள்ளம் வரட்சி அண்மைய சுனாமி போன்ற இயற்கை அழிவுகள், இலங்கை ராணுவம் திணித்த யுத்தம், தமிழ் இயக்கங்களது விடுதலையின் பெயரிலான போராட்டங்கள், இந்தியப் படைகளின் சமாதானப் படை யுத்தம் இயக்கங்களிடையான சகோதரப் படுகொலைகள் என வரிசைப்படுத்திப் பார்க்க முடியும். அவ்வாறு நோக்கும் போது கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளில் மேற் கூறியவற்றின் ஊடாக ஏறத்தாள ஒன்றரை லட்சம் வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பதைக் காண முடியும். இதன் பாரதூர எதிர் விளைவுகள் ஒவ்வொன்றும் இன்றுவரை ஒட்டு மொத்த மக்கள் சமூகத்தின் மீது பலவிதத் தாக்கங்களை விளைவித்துக் கொண்டே இருக்கின்றன. இவற்றின் தொடர்ச்சியாகவே இன்றும் கொலைக் கலாச்சாரம் தனது கோரத்தனங்களை வெளிக்காட்டி நிற்கின்றது. இதன் அடிப்படை பேரினவாத ஒடுக்குமுறையும் அதனால் கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூர யுத்தமும் ஆகும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான கொலைக் கலாச்சாரம் வடக்கு கிழக்கிற்கு மட்டும் உரியதொன்றல்ல என்பதை நாட்டின் ஏனைய பிரதேசங்களில் நாளாந்தம் நடைபெறும் கொலைகள் எடுத்துக் காட்டுகின்றன. பாதாள உலகத்தவர் என்ற பட்டை நாமத்துடன் செயல்படும் நபர்களாலேயே அக் கொலைகள் பெருமளவிற்கு செய்யப்படுகின்றன. இப் பாதாள உலக நபர்கள் பெருபாலானவர்கள் ஆயுதப் படைகளில் இருந்து தப்பி ஓடி வந்தவர்களாகக் காணப்படுவதாகவே பொலீஸ் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதே பொலீஸ் புள்ளி விபரப்படி படைகளை விட்டோடியவர்களின் எண்ணிக்கை ஐம்பதினாயிரம் பேர் என்பதாகும். இவர்கள் முறையான ஆயுதப் பயிற்சி பெற்றதுடன் ஆயுதங்களுடனும் தப்பியோடி தலைமறைவாக வாழ்ந்து வருபவர்களுமாவர். இத்தகையோருக்கு பாதாள உலகக் குழுக்களின் தலைவர்கள் உரிய புகலிடமளித்து தமது தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இப்பாதாள உலகக் குழுக்கள் போதைப் பொருட்கள் கடத்தல் விநியோக விற்பனையைப் பிரதான தொழிலாகக் கொண்டியங்குகின்றன. அத் தொழிலுக்கு பங்கமோ நஷ்டமோ ஏற்படின் கொலைகள் தாராளமாக நிகழ்த்தப்படுகின்றன. குழுக்களுக்கிடையிலும் தொழிலுக்கு சவாலாக அச்சுறுத்தலாக இருப்போரையும் மிகச் சாதாரணமாகவே நவீன வகை ஆயுதங்கள் கொண்டு கொலை செய்து விடும் நிலை காணப்படுகிறது. இதற்கும் அப்பால் கொள்ளைகளின் போதும் பிணக்குகள் காரணமாகப் பழிவாங்குவதற்கும் ஒப்பந்த அடிப்படையில் இப்பாதாள உலகத்தவரால் கொலைகள் நடாத்தப்படுகின்றது. கடந்த வருடம் கொழும்பில் ஒரு மேல் நீதிமன்ற நீதிபதியும் அவரது மெய்பாதுகாப்பாளரும் பாதாள உலகத்தவரால் கொல்லப்பட்டமை தெற்கின் கொலைக் கலாச்சார வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இத்தகைய பாதாள உலகத்தவரின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் சில பாராளுமன்ற உறுப்பினர் முதல் சில உயர்மட்ட அமைச்சர்கள் வரை அரசியல் பிரமுகப் பின்னணி இருப்பதைப் பொலீஸ் உயர் மட்டமே அவ்வப்போது சுட்டிக் காட்டி வந்துள்ளது. அதே வேளை சில பொலீஸ் உயர் அதிகாரிகளும் இவர்களுக்கு உடந்தையாக இருப்பதாகவும் அறியப்படுகிறது.

இவ்விடயத்தை முழுமையாக நோக்கின் மேற்கூறிய கொலைக் கலாச்சாரம் வடக்குகிழக்கிலே வளர்வதற்கு பேரினவாத ஒடுக்குமுறையும் அதன் யுத்தமும் காரணமாயிற்று. அதே கொலைக் கலாச்சாரம் தெற்கிலே வளர்வதற்கு தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதல் சூழல் வழிவகுத்துக் கொடுத்தது. "முன்னாடிச் செய்ததெல்லாம் பின்னாடியே தெரிய வரும்" என்ற முதுமொழி இங்கு நினைவுக்குரியதாகும். நமது நாட்டின் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகள் அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகளோடு இணைந்து நின்று தத்தமது உயர் வர்க்க மேட்டுக்குடி சொத்து சுகபோக வாழ்க்கைக்குரிய பொருளாதார அரசியல் திட்டங்களைச் செயலாக்கியதன் விளைவாகவே இன்றைய கொலைக் கலாச்சாரம் நாடு முழுவதிலும் மேலோங்கி சமூக அபாயமாக வளர்ந்து நிற்கின்றது. இதனால் பாதிக்கப்படுவது மக்களாகவே உள்ளனர். குறிப்பாக வளர்ந்து வரும் புதிய தலைமுறையினர் பல முனைப் பாதிப்புகளையும் பெற்று வருகின்றனர் என்பது அனைவரினதும் கவனத்திற்குரியதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பெண்கள் மீதான ஒடுக்குதல்கள்

## உலகளவிலான சில குறிப்புகள்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் 11 வயது சிறுமி சகீபாவின் தோற்றம்

பெண்கள் மீதான ஒடுக்குமுறைகள் பற்றியும் பெண்களின் விடுதலை பற்றியும் மாக்சிச லெனினிசவாதிகள் எடுத்துரைத்து பெண்களின் அமைப்பு ரீதியான அணிதிரள் நிலையை வற்புறுத்தி வருகிறார்கள். ஆனால் பழமைவாதிகளும் முதலாளிய ஏகாதிபத்தியவாதிகளும் தத்தம் நிலை நின்று உண்மையான பெண் விடுதலைச் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் மறுத்து நிராகரித்து அல்லது திசை திருப்பி வருகின்றனர். பெண்கள் சுதந்திரமாகவும் சுபீட்சமாகவும் இருப்பதாகவும் கூறுகிறவர்களும் இருக்கின்றனர். இங்கே தொகுத்துக் கூறப்பட்டுள்ள குறிப்புகள் உலக ரீதியாகப் பெண்கள் எவ்வாறான நிலையில் வாழ்ந்து வருகின்றனர் என்பதை அறிந்து கொள்ள உதவக் கூடியதாகும். நமது நாட்டின் பெண்களின் நிலையினையும் இக் குறிப்புகளின் ஊடாகப் புரிந்து கொள்ள இயலும். அத்துடன் நமது நாட்டில் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டு பழமைவாதச் சிந்தனைகள் போன்றவற்றால் சிறைபடுத்தப்பட்டு அடிமைத்தனமாக வாழ்ந்து வரும் பெண்களிடையே விழிப்புற முன்நிற்கும் பெண்களுக்கு இக்குறிப்புக்கள் மேலும் நம்பிக்கையையும் செயல்படவேண்டியதன் அவசியத்தையும் உணர்வுகொள்ள உதவும் எனலாம். மாக்சிசத்தை அடிப்படையாகக் கொண்ட சோஷலிச சக்திகளும்



பாகிஸ்தானில் 5 பேர் கொண்ட கும்பலால் பாலியல் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்ட முத்தரார் மாயி என்ற பெண்ணின் சோகமாக உள்ள படம்

சோஷலிச அமைப்புகள் கொண்ட நாடுகளிலேயே பெண்கள் சமத்துவத்தை நோக்கி வீறு நடைபோட்டு வந்தனர் என்பது இவ்வேளை நினைவு கொள்ளத்தக்கதாகும். ஆனால் கொலனிய முதலாளிய ஏகாதிபத்தியங்களால் சுரண்டி ஒடுக்கப்பட்டு வரும் நாடுகளில் பெண்களின் நிலை மிக மோசமானதாக இருந்து வருவதையே ஐ. நா. சபை மூலமான அறிக்கைகளும் தீர்மானங்களும் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

இதன் அடிப்படையில் கடந்த முப்பது வருடங்களுக்கு முன் ஐ.நாவின் ஆதரவில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராயும் முதலாவது சர்வதேச மாநாடு மெச்சிக்கோ நகரில் இடம்பெற்றது.

பத்துவருடங்களுக்கு முன் பெண்களின் நான்காவது உலக மாநாடு சீனாவின் தலைநகரான பீஜிங்கில் இடம் பெற்றது. இந்த மாநாடுகளில் முடிவாக்கப்பட்ட தீர்மானங்கள், உடன்பாடுகள் திட்டங்கள் என்பனவற்றில் ஏகப்பெரும்பாலானவை இன்றும் வெறும் கடதாசி எழுத்துக்களாக மட்டுமே இருந்து வருகின்றன. ஐ.நா தலைமை அலுவலகத்தில் 2005 பெப்ரவரியில் இடம் பெற்ற மாநாட்டில் 6000 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 135 நாடுகளில் பெண்களின் நிலை தொடர்பான அறிக்கை பற்றியே மாநாட்டுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மாநாட்டில் 12 விடயங்கள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டன. இதில் வறுமை, சுற்றாடல், பொருளாதாரம், கல்வி, மனித உரிமை, அதிகாரம், தீர்மானம் எடுக்கும் தகுதி, பெண் குழந்தைகள் ஆகியன அடங்கும்.

ஐ.நா செயலாளர் நாயகம் கொபி அனான் தனது அறிக்கயில் பல நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், பாரபட்சம், பெண்களுக்கு எதிரான வன்செயல் என்பவற்றைக் குறைப்பதற்கு ஏதுவாக சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பெண்கள் சூழல் வளர்ச்சி அமைப்பு எனப்படும் WEDO- வெடோ- 207 பக்க அறிக்கையில், அரசாங்க அறிக்கைகளில் பெண்கள் பற்றிக் குறிப்பிட்டவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட விபரங்களே குறிப்பிட்டப்பட்ருந்தன. வெபிடோ 150 நாடுகளில் பெண்களின் நிலை தொடர்பான தகவல்களை முன்வைத்தது. “ உலகின் பெண்கள் இனிமேலும் அரசாங்கங்களின் வெற்று வார்த்தைகளை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் வேண்டுவது செயலையே ” என்ற வலுவான செய்தியை அவ்வறிக்கை தந்தது. பத்துவருடங்களுக்குள் பெண்கள் இருந்த நிலையை விட இன்றைய நிலை நாடுகளின் மோசமானது எனவும் அவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஒரு பிரதிநிதி தனது உரையில் பெண்களும் குழந்தைகளும் எல்லைகள் ஊடாக கடத்தப்படுவது கொத்தடிமை, பலவந்த திருமணம், பலவந்த விபச்சாரம் என்பன உலகளாவிய அளவில் பாரிய விடயங்களாகி விட்டன எனவும், அரசுகள் இந்த குற்றச் செயல்களைத் தடுக்க உருப்படியான நடவடிக்கைகளைச் செய்யவில்லையெனவும் குற்றம் சுமத்தினார்.

கிழக்கு ஐரோப்பாவிலிருந்தும் முன்னாள் சோவியத் யூனியனிலிருந்தும் வருடந்தோறும் 1,75,000 பெண்கள் பாலியல் வர்த்தக குற்றச் செயல்களுக்காக மேற்கு ஐரோப்பாவுக்கு கடத்தப்படுவதாகவும் அந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் “கெட்ட 12 நாடுகளைக் குறிப்பிட்டு பர்றேன், குவைத், மைகுறோனேசியா, நாயுறு, பாலாவூ சென் கிற்ஸ், சவுதி அரே பியா, சொலமன் தீவு, ரொங்கா ருவாலு, ஐக்கிய எமிறேற்ஸ, கினி பிசோ ஆகிய நாடுகளின் நாடாளுமன்றத்தில் பெண் பிரதி நிதிகள் எவருமே இல்லையெனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இஸ்ரவேல் பெண்கள் அமைப்பொன்று வேறு ஒரு மாற்று அறிக்கையில் பெண்கள் அவர்களின் வேலைத்தளங்களில் இன்று பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர். ஆண்களின் மணித்தியால வேதனத்தின் அரைவாசியையே பெண்கள் பெறுகின்றனர், பெண்கள் சுயதொழிலில், ஈடுபடுவதற்கு வங்கிக்கடன் வசதி வழங்குவதற்கு பின் நிற்கின்றன. கல்வி அறிவின்மை என்பதில் ஆண்களை விட பெண்கள் இருமடங்காகவுள்ளனர். உலகமயம் வர்த்தக தாராளமயம், தனியார்மயம் நாட்டைவிட்டு வெளியேற்றம் எனப் பெண்களை மேலும் மோசமான நிலைக்குத் தள்ளுகிறது என்பது சுட்டிக்காட்டப்பட்டது. தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்பவற்றால் மூன்றாம் உலக நாடுகளில் ஆண்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற போதும் பெண்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது நடைமுறை உண்மைகளாகி வருகின்றன.

பெண்களின் உரிமைகள் தொடர்பான போராடும் உரிமையை ஐ. நா. இழந்துவிட்டதாக சில பிரதிநிதிகள் குற்றம் சுமத்தி வாதிட்டனர். 2001ம் ஆண்டு (பொஸ்னியாவில்) வயது குறைந்த பெண்பிள்ளைகள் பாலியலுக்காக வர்த்த ரீதியில் கடத்தப்பட்டனர். ஆயிரக்கணக்கான ஐ.நா ஆண் ஊழியர்களின் வருகையால் இந்தக் கடத்தல் உருவாக்கப்பட்டது மட்டுமன்றி ஐ. நா ஊழியர்களின் திரைமறைவு நடவடிக்கைகளாலும் நிலைமை மோசமானது. பெண் ஊழியர் ஒருவர் இதையிட்டு எதிர்ப்பு காட்டிய போது அவர் வேலையிலிருந்து தூக்கி எறியப்பட்டார். அப்பெண் நீதிக்காகப் போராடி சாட்சியங்களை முன்வைத்து மீண்டும் வேலையைப் பெற்றுக் கொண்டார்.

70கோடி அமெரிக் டொலர் செலவில் யுத்தத்தினால் சின்னாபின்னமாக்கப்பட்ட பொஸ்னியாவைக் கட்டியெழுப்பும் திட்டத்தில் சம்மந்தப்பட்ட ஐ.நா நிபுணர் ஒருவர் ஏகப்பட்ட பாலியல் வல்லுறவு, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பவற்றில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டார். ஜனநாயக கொங்கோ குடியரசில் வேலை செய்த ஐம்பது ஐ. நா ஊழியர்கள் மீது பாலியல் துஷ்பிரயோகம்– பெரும்பாலனவை சிறுவர் துஷ்பிரயோகம் சம்மந்தமாக 150 குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டனர். சொற்ப உணர்வுக்காக சிறுவர்கள் பாலியல் உறவுக்காக பரிமாறப்பட்டனர். “பாலியல் உறவுக்காக உணவு” என்ற பதம் பயன்படுத்தப்பட்டது.

ஐ.நா ஊழியர்கள் வேலை செய்யும் நாடுகளில் சட்டத்தினின்று விதிவிலக்குடையவர்கள் என்பதால் அவர்கள் நினைத்தமாதிரி ஆடுகின்றனர். சகலதையும் அனுபவிக்கின்றனர். குறிப்பாக பெண்கள் சிறுவர்களை நுகர்வுப் பொருட்கள் போன்று பயன்படுத்தி வருகின்றனர்.

ஐ.நா வின் “சமாதானப்படையினர்” உலகம் பூராகவும் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை அறிக்கைகள் அடிக்கடி தெரிவிக்கின்றன.

கொங்கோவில் சமாதானப் படையின் தலைவரான வில்லியம் சுவிங், ஏபீசி செய்தி அலை வரிசையுடனான பேட்டியின் போது ஒரு சிலரே குறிப்பிட்ட கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவதாகவும் அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இது துஷ்பிரயோகங்களை மூடி மறைக்க முன்வைக்கப்படும் ஒருவகை கண்துடைப்புக் கூற்றாகும்.

எச்ஐவி, எயிட்ஸ் தொடர்பாக ஆசியாவுக்கும் பசுபிக் பிராந்தியத்திற்குமான விசேட செலாளர் நாயகம் நாபிஸ் சாதீக் ஐ. நா அமைப்பை குறை கூறினார்.

செயலாளர் நாயகத்தின் விசேட ஆலோசகர் நாக்கேல் மாயஞ்சா பேசுகையில் “உலகம் பூராகவும் இராணுவத்திற்கான செலவு 90,000

தொடர்ச்சி 11ம் பக்கம்

### கசப்பான உண்மைகள்

- உலகில் எழுத வாசிக்கத் தெரியாதவர்களின் எண்ணிக்கை 87 கோடி 50 இலட்சமாகும். இதில் மூன்றில் இரண்டு பகுதியினர் பெண்களாவர்.
- உலகில் பெண்கள் இரண்டு வீதமான நிலத்தை மட்டுமே உரிமை கொண்டுள்ளனர். ஆனால் உலகின் உணவு உற்பத்தியில் அரைப்பங்கை பெண்களே உற்பத்தி செய்கின்றனர்.
- தாயின் இறப்பைத் தொடர்ந்து வருடந்தோறும் பத்து இலட்சம் குழந்தைகள் தாயில்லாப் பிள்ளைகளாகின்றனர்.
- கர்ப்பமாயிருக்கும் போதோ அல்லது பிள்ளைப்பேற்றின்போதோ நிமிடமொன்றிற்கு ஒரு தாய் இறக்கிறாள். அதாவது தினமொன்றிற்கு 1400 அல்லது 529000 பெண்கள் வருடமொன்றிற்கு இறக்கிறார்கள். இவ்வாறான மரணத்தைச் சந்திக்கும் பெண்களில் 99 வீதமானவர்கள் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- தென் ஆபிரிக்காவின் சகல பெண்களும் தினந்தோறும் மொத்தமாக நடந்து சென்று தமது குடும்பங்களுக்குத் தேவையான தண்ணீரைக் கொண்டு வரும் போது நடக்கும் தூரம் எவ்வளவு தெரியுமா? சந்திரமண்டலத்திற்குச் சென்று திரும்பும் தூரத்தின் பதினாறு மடங்காகும்.
- இந்தியாவில் பெண்கள் தண்ணீரைக் எடுத்துக் கொண்டு வருவதற்கான தேசிய செலவு 150 மில்லியன். பெண்கள் ஒருவருடம் முழுவதும் வேலை செய்வதற்குச் சமமானது.
- வருடந்தோறும் சர்வதேச எல்லைகளினூடாக ஏழு இலட்சம் பேர் கடத்தப் படுகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் பெண்களாவர்.

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## ஜனநாயகமே நீ எங்குற்றனை?

ஸ்ரீலங்கா சோஷலிச ஜனநாயக்க குடியரசின் ஐந்தாவது அதிமேதகு ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நவம்பர் 17ம் திகதி நடைபெற இருக்கின்றது.

இம்முறை தேர்தல் பல புரியாத புதிர்களுடன் சூடு பிடித்துள்ளது. இனவாதக் கட்சிகள் ஆளுக்காள் நிபந்தனைகளை அடுக்கி ஒப்பந்தம் எழுதி பௌத்த சிங்கள பேரினவாத முழக்கங்களுடன் மகிந்தருக்கு முடி சூட்ட கங்கணம் கட்டி பாரத மாதாவே சரணம் என்று ஒரு அணியாக நிற்கின்றன.

மறுபக்கம் மகிந்தரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஏதும் வாய்ப்பாக இருக்கும் என்று காத்திருக்காது அது வெளிவரும் முன்பாகவே யானைகளின் பக்கத்திலிருந்து வந்த “கோடிகளைக்” கணக்கில் வைத்து எதிர்காலப் பதவிக்களுக்கும் ‘பேரம் பேசிக்’ கொண்ட சில சிறுபான்மைக் கட்சிகள் ரணிலாருக்கு முட்டுக் கொடுக்க முடிவு எடுத்துள்ளன. அதில் ஆறுமுகன்மார், சேகரன்மார், ஹக்கீம்மார் அடக்கம்.

இந்த நிலையில் ஊரெங்கும் பொலித்தீன் தோரணங்கள். போஸ்ரர் அலங்காரங்கள், கட்அவுட், காவடிகள் நகரின் சில இடங்களில் அகற்றப்பட்டாலும் பல இடங்களில் பளபளக்கின்றன. இன்னொருபக்கம் தேர்தல் ஆணையாளர், தேர்தல் நடைமுறைகள், தேர்தல் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் என்று செய்தியாளர் மகாநாடுகளை நடத்தி அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றார். அடுத்த பக்கம் மனித உரிமைஅமைப்புகள், சூழல் பாதுகாப்பு அமைப்புகள் தலைமேல் கைவைத்து முழுசுகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக ‘அவசரகாலச் சட்டம்’ அப்பப்ப கைசேர்ந்து உயர்த்தி அமுலில் இருக்கிறது. இதற்குள் நடக்கும் நாடகங்களை பொதுமக்கள் பார்த்துச் சகிக்க வேண்டி உள்ளது.

அண்மையில் மேல் கொத்மலை நீர் மின் திட்டத்துக்கு எதிரான போராட்டங்கள் உணர்வு பெற்ற நிலையில் அவற்றை ஒடுக்குவதற்கான திட்டங்களும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

மேல்கொத்மலைத் திட்டத்துக்கு எதிரான பொதுமக்கள் ஒன்று கூடலை நடத்தும் முகமாக அதற்குரிய கவன ஈர்ப்பு போஸ்ரர்களை பத்தனை நகரில் ஒட்டிக் கொண்டிருந்தவர்களை பொலிஸ் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்து நீதிமன்றத்தில் பிரசன்னப்படுத்தி பிணையில் விடுதலை செய்தது. கைதுக்கு காரணம் ஒட்டப்பட்ட போஸ்ரர்களில் அச்சகத்தினதும் அச்சிட்டவர்களினதும் பெயர்கள் இல்லை எனப் பொலீஸ் தரப்பில் கூறப்பட்டது. ஆனால் இரண்டு வேட்பாளர் சார்பில் எல்லாமாவட்டங்களிலும் போஸ்ரர்களில் பெயரும் இல்லை. ஊரும் இல்லை. இதற்கு பொலீஸ் யாரைக் கைதுசெய்தது. எந்த நீதிமன்றத்தில் ஆஜார்படுத்தியது? இதுவும் ஜனநாயகம் தான்.

இங்கே தான் ஜனநாயகம் ஒழித்த இடம்பற்றி தேட வேண்டி உள்ளது. ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களின் போஸ்ரர்கள் தினமும் புதிய புதிய உத்திகளுடன் படங்களுடன் வர்ணங்களுடன் இருபக்கமும் ஒட்டப்படுகையில் அவசரகாலச் சட்டமும் தேர்தல் சட்ட ஒழுங்கு விதிகளும் கைகட்டி நிற்கின்றன.ஆனால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்த முனைகையில் சட்டத்தின் கரங்கள் நீண்டு ‘அமுலாக்கலை’ நடத்துகின்றன. இன்னும் ஒன்றைக் கூறவேண்டும். இதே மேல் கொத்மலை எதிர்ப்புப் போராட்ட மக்கள் பேரணியைக் குழப்புவதற்கென்று ஒரு கூட்டம் வெளிப் படையாகவே தோன்றி வன்முறையில் ஈடுபடும் அளவிற்கு இந்த நாட்டில் ஜனநாயகம் காணாமற் போயுள்ளது.

எமது நாட்டின் அண்மைக்கால புள்ளி விபரங்களின்படி எமது மக்களின் தேசத்தின் எழுத்தறிவு விதம் 92% ஆக உள்ளது. அந்த அளவுக்கு மக்கள் சிந்திக்கும், பகுத்தாயும் ஆற்றல் உள்ளவர்கள் என்று ஊகிப்பதில் தவறில்லை.

இன்றைய சூழலில் நடக்கவிருக்கும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களும் இந்த சிந்திக்கும் ஆற்றலுக்கு சவால்விடுவனவாகவே அமைந்து வருகின்றன. ஏனைய பதினொரு வேட்பாளர்களையும் தவிர்த்து பிரதான வேட்பாளர் இருவரது பிரசாரங்களை வாக்குறுதிகளை அவதானித்தால் அந்த உண்மை புரியும். 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அள்ளிக் கொட்டிய வாக்குறுதிகளையே இன்றும் புதிதாக சொல்லும் தோரணையில் ஒப்புவிக்கின்றனர்.

இடத்துக்கு இடம், ஊருக்கு ஊர், மேடைக்கு மேடை, மொழிக்கு மொழி முரண்பாடான பாசாங்கான வார்த்தைப் பிரயோகங்கள், வாக்குறுதிகள் அள்ளி வீசப்படுகின்றன. அவற்றை வடித்து எடுத்து மக்களுக்குத் தரும் ஊடகங்களே ஒரு படி மேலே போய் சாயம் பூசி, அலங்காரம் பண்ணி, வியாக்கியானம் சேர்த்து வெளிவிடுகின்றன.

மொத்தத்தில் மக்களை மந்தைக் கடாக்களாகவும் கம்பு பிடிக்கத் தெரிந்தவன் எல்லாம் கெட்டிக்காரர் ஆகவும் ஆகிவிட்ட அரசியல் சூழ் நிலையில் ‘ஜனநாயகம்’ என்ற பெயருக்குள் நாங்கள் வாழ்கிறோம் என்பதுதான் துன்பகரமான உண்மை.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்






# அமெரிக்க "சொர்க்க புரியில்" வறுமை தீராத வியாதி

பேர்னாட் டெபாஸ்மனன்

அன்று அமெரிக்க ஜனாதிபதியான லிங்டன் ஜோன்சன் வறுமைக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்து நாற்பது வருடங்களின் பின் உலகின் மிகச் செல்வந்த நாடான அமெரிக்காவில் மூன்று கோடி எழுபது இலட்சம் மக்கள் வறியவர்களென உத்தியோக பூர்வமாக வகைப்படுத்தப் பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை யானது வருடந்தோறும் அதிகரித்த வண்ணமாயுள்ளது.

சென்ற வருடம் ஒருகோடி பத்து இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் சென்று விட்டனர். இந்தத் தொகையானது டல்லஸ் அல்லது பிராக் நகரங்களின் மொத்த சனத்தொகைக்குச் சமமாகும்.

2000ம் ஆண்டிலிருந்து வருடந் தோறும் வறியவர்களின் எண்ணிக்கை யானது கிட்டத்தட்ட ஐம்பத்தைந்து (55) இலட்சத்தால் அதிகரித்துள்ளது. ஜனாதிபதி லின்டன் ஜோன்சன் வறுமைக்கு எதிரான யுத்தத்தை அன்று பிரகடனம் செய்தார்.

அப்போது அவர் கூறியதாவது. "துரதிஸ்ட்டமாக பல அமெரிக்கர்கள் நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளனர். சிலர் வறுமை காரணமாகவும் சிலர் அவர்களுடைய நிறம் காரணமாகவும் இவர்களிற் பலர் இண்டு காரணங்களாலும் இவ்வாறான நம்பிக்கையீன நிலைக்கு உள்ளாகி உள்ளனர். அமெரிக்க நிர்வாகம் அமெரிக்காவில் வறுமைக்கு எதிராக நிபந்தனையற்ற யுத்தத்தைப் பிரகடனம் செய்கிறது." என்று கூறினார்.

சென்றவருடம் அமெரிக்க சனத்தொகையில் 12.7 வீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கிறார்கள் என உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

வருடந்தோறும் அமெரிக்க புள்ளி விபரத் திணைக்ககளம் அமெரிக்காவில் நிலவும் வறுமை தொடர்பாக புள்ளி விபரங்களை வெளியிட்டு வருகிறது. இந்த விபரங்கள் சுமார் எழுபது (70) பக்கங்களில் இருக்கும். இவை



ஆய்வாளர்களுக்குத் தேவையானதாக இருந்த போதிலும் அவை பொது விவாதங்களை என்றுமே ஏற்படுத்தியதில்லை. 2005ம் ஆண்டின் அறிக்கையும் அவ்வாறே அமைந்துள்ளது.

இந்த அறிக்கையானது லூசியானா, மிசுசிப்பி ஆகிய இடங்களில் 1100 பேருக்கு அதிகமானோரை பலி கொண்டு பெரும் நாசத்தை விளைவித்த கத்ரீனா சூறாவளியின்போது வெளியானது. நீயூ ஒலின்சில் நிலவிய நிலைமையை தொலைக்கட்சிகள் ஒளிபரப்பிய போது பல திடுக்கிடும் தகவல்கள்

வெளிவந்தன. ஆனால் பக்கம் பக்கமாக புள்ளி விபரத் திணைக்களம் வெளியிட்ட தகவல்களில் இவை காணப்படவில்லை என்ற உண்மை அதன் ஊடாக அம்பலத்திற்கும் வந்தது.

நீயூ ஓர்லின்ஸ் காட்சிகள் உலகை ஆச்சரியத்தில் மூழ்கடித்தது. வெட்கித் தலைகுனிந்த அமெரிக்கர்கள் சோமாலியா, அங்கோலா, சூடான், பங்களாதேஷ் போன்ற நாடுகளுடன் தங்கள் நாட்டை ஒப்பிட நேர்ந்ததை ஒரு அவமானமாகக் கருதினர்.

வறிய கறுப்பின மக்கள் உதவி கோரி பிச்சை கேட்ட காட்சிகள் காட்டப்பட்டன. ஏனோதானோ என்ற தோரணையில் நேரம் கடந்து வந்து சேர்ந்த மீட்புப் பணியாளர்கள் வெள்ளையர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நீயூ ஓர்லின்சின் ஏகப்பெரும்பான்மை யானவர்கள் கறுப்பின மக்கள். வெள்ளத்தின் போது கிட்டத்தட்ட சகல வெள்ளையர்களும் சொந்தக் கார்களிலும் பணமுடையவர்கள் வாடகைக்கு அமர்த்திய

தொடர்ச்சி 11ம் பக்கம்

# வட அயர்லாந்தில் ஐ.ஆர்.ஏ ஆயுதங்களை ஏன் கையளித்தது?

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைப் பயங்கரவாதப் பிரச்சனை என்று யாரும் குறிப்பிடுவதை விரும்பாத சில அரசியல் அவதானிகள் நேபாளம் பற்றியும் வட அயர்லாந்து பற்றியும் பேசும் போது பயங்கரவாதப் பிரச்சனை பற்றிப் பேசக் கூசுவதில்லை. ஏனெனில் எங்கள் எல்லாருக்கும் செய்திகள் வடிகட்டப்பட்டு நிறமூட்டப்பட்டே கிடைக்கின்றன. நாம் எவ்வாறான முடிவுக்கு வர வேண்டுமென நினைக்கிறார்களோ அதற்கமையவே செய்திகளையும் தெரிவுசெய்து ஓரங்களைக் கத்தரித்து நமக்குத் தருகிறார்கள்.

அன்று அயர்லாந்தின் விடுதலைப் போராட்டம் முழுமையான விடுதலைக்கு இட்டுச் செல்ல முடியாத விதமாக ஏற்பட்ட ஒரு சமரசத்தின் விளைவாக பிரித்தானிய முடியாட்சிக்கு மத அடிப்படையில் விசுவாசமான ஒரு பிராந்தியப் பெரும்பான்மையைக் கொண்ட வட அயர்லாந்து நிலப்பரப்பொன்று பிரித்தானியாவின் பகுதியாயிருக்க மிகுதி 1922ல் ஐரிஷ் குடியரசானது. அப்போது ஐரிஷ் விடுதலைப் படை கலைக்கப் பட்டதாக அறிவிக்கப்பட்டது.


ஐரிஷ் மக்கள் மீது இந்தத் தீர்வை ஐரிஷ் விடுதலை இயக்கத்தலைமை திணித்ததன் விளைவாகப் போராளிகளிடையே பிளவுகள் ஏற்பட்டன. விடுதலைப்போராட்டம் நீண்டகாலமாக முடங்கிக் கிடந்தது. எனினும், எந்த ஒடுக்குமுறையால் ஐரிஷ் விடுதலைப் போராட்டம் எழுந்ததோ அதே விதமான ஒடுக்குமுறை வட அயர்லாந்தில் தொடர்ந்தது.

அயர்லாந்தின் பிரிவினை மூலம் வடக்கில் சிறுபான்மையாக்கப்பட்ட கத்தோலிக்க மக்கள் சமூகத்தின் கீழ் நிலையில், எல்லா வகையிலும் சமூக முன்னேற்றம் மறுக்கப்பட்டவர்களாக வைக்கப்பட்டிருந்தனர். வட அயர்லாந்தில் சொத்துடைமையின் அடிப்படையில் பணக்காரர்கட்கு மேலதிக வாக்குக்களை வழங்கிய பிரித்தானிய ஆட்சி கத்தோலிக்க மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்கும் வஞ்சகம் செய்தது. இது போக, வட அயர்லாந்தின் பொலிஸ் படை (றோயல் அல்ஸ்றறர் கொன்ஸ்ற்ற பியுலரி) கத்தோலிக்க மக்களை மிகவும் கொடுமையாக நடத்தியது. இவற்றின் விளைவாக வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்கள் மத்தியிலிருந்து 1960களின் நடுப்பகுதியில் ஒரு குடிமக்கள் உரிமை இயக்கம் உருவானது. அம் மக்களின் அமைதியான போராட்டங்கட்கெதிராக பிரித்தானிய 'விசுவாசிகள்' எனப்படுகிற புரட்ஸ்தாந்து தீவிரவாதிகளும் மேலாதிக்கவாதிகளும் வன்முறையைக் கட்டவிழ்த்தனர். இதைச் சமாளிப்பதற்காகவும் கத்தோலிக்க மக்களை வன்முறைத் தாக்குதல்களிலிருந்து காக்கவும் என்று அனுப்பப்பட்ட பிரித்தானிய ராணுவத்தினர் வெகு விரைவிலேயே கத்தோலிக்க விரோத ஒடுக்கு முறையாளர்கட்குச் சார்பாக நடந்து ஒடுக்குமுறையில் பங்காளிகளாயினர்.

இதன் விளைவாகவே (தற்போதைக்கான) ஐரிஷ் விடுதலை இயக்கம் (ஐ.ஆர்.ஏ) என்ற பேரில் செயலற்றிருந்த ஒரு அமைப்பு வடக்கில் வளர்ச்சி பெற்றது. ஒடுக்குமுறைக்குட்பட்ட கத்தோலிக்க இளைஞர்கள் ஐ.ஆர்.ஏயிலும் பிற சிறிய ஆயுதப் போராட்ட அமைப்புகளிலும் இணைந்தனர். அயர்லாந்திலும் அமெரிக்காவுக்குப் புலம்பெயர்ந்த ஐரிஷ் கத்தோலிக்கரிடையிலும் ஐ.ஆர். ஏக்கு ஆதரவு பெருகியது.

வன்முறை வட அயர்லாந்துக்கு மட்டுப்பட்டு இருந்தளவும் பிரச்சனையைத் தீர்ப்பது பற்றி பிரித்தானிய ஆட்சியாளர்கள் அசட்டையாகவே இருந்தனர். இங்கிலாந்தில் அடுத்தடுத்து நடந்த ஐ.ஆர்.ஏ குண்டுவைப்புக்களின் பின்னரே பிரித்தானிய அரசாங்கம் "பயங்கரவாதிகளுடன் பேசமாட்டோம்" என்ற நிலைப்பாட்டைத் தளர்த்தி 1980களில் இரகசியப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது.

பிரித்தானிய அரசாங்கத்திற்கும் "விசுவாசிகள்" எனப்படும் புரட்டஸ்தாந்து அரசியல் தலைமைகட்கும் இருந்த நெருக்கம் முற்றிலும் வர்க்க அடிப்படையிலானது. பிரித்தானிய முதலாளிவர்க்க நலன்கள் அவர்களை ஒன்றிணைத்தன. கட்சி வேறுபாடில்லா



ஷின் ஃபெயின் கட்சியின் தலைவர் யேரி அடம்ஸ்

மல் இரு பகுதியினரது நோக்கமும் ஐ.ஆர்.ஏயை நிராயுதபாணியாக்குவது மட்டுமே. எனவே அமைதிப் பேச்சுவார்த்தைகள் முன்னர் மறைமுகமாகவும் பின்னர் அதிகார பூர்வமாகவும் மேற்கொள்ளப்பட்ட போது ஐ.ஆர்.ஏயின் ஆயுதக்களைவுக்கே அதிக முக்கியம் வழங்கப்பட்டது. நேரடியாக ஐ.ஆர்.ஏயுடன் பேச பிரித்தானிய அரசாங்கத்துக்கு இயலாததால் ஐ. ஆர். ஏக்கு நெருக்கமானதும் ஐ.ஆர்.ஏயுடன் அரசியற் கொள்கையில் உடன்பாடானதுமான ஷின் ஃபெயின் என்ற அரசியற் கட்சி மூலம் பேச்சுவார்த்தைகள் நடந்தன.

1998 ஆண்டு பெரிய வெள்ளிக்கிழமையன்று காணப்பட்ட உடன்பாட்டின் மூலம் வட அயர்லாந்தின் கத்தோலிக்க மக்களின் சனநாயக உரிமைகளைப் பேணவும் அவர்கள் உரிமையுடன் பங்குபற்றக்கூடிய விதமாக வட அயர்லாந்தின் ஸ்றோமொண்ட் பாராளுமன்றம் மீளக் கட்டப்படவும் பிரித்தானியப் படைகள் வெளியேறவும் ஐ. ஆர். ஏ ஆயுதங்களைக் கைவிடவும் உடன்பாடு காணப்பட்டது. அதன் பின் அந்த உடன்படிக்கை வடஅயர்லாந்தின் சர்வசன வாக்கெடுப்பில் மக்களால் ஏற்கப்பட்டது. அதற்குக் கடும் எதிர்ப்பளித்த தீவிர புரட்டஸ்தாந்து மத வெறியரான இயன்பெய்ஸ்லியின் ஜனநாயக யூனியனிஸ்ற் கட்சிக்கு (டி.யூ பி)ஒரு வலிய ஆதரவுத்தளம் தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது. ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களைக் களைய வேண்டும் என்பதை வற்புறுத்திச் சமாதான உடன்படிக்கைக்குக் குழிபறிக்கிற வேலைகள் பல தளங்களில் மேற்கொள்ளப்பட்டன. வட அயர்லாந்து பாராளுமன்றத் தேர்தலில் ஷின் ஃபெயின் கத்தோலிக்க மக்களின் பெரும் ஆதரவைப்பெற்றது.

சமாதான உடன்படிக்கைக்கு முன்பும் புரட்டஸ்தாந்து ஆயுதக் குழுக்களின் அராஜகம் இருந்தது. அதைப் பிரித்தானிய ஆட்சியாளர்களோ பயங்கரவாத எதிர்ப்பாளர்களோ பொருட்படுத்தியதில்லை. சமாதான உடன்படிக்கையின் பின்பு பெரும்பாலான வன்செயல்கள் இந்தக் கும்பல்களாலேயே நடத்தப்பட்டன.

ஐ.ஆர்.ஏ ஆயுதக்களவை மேற்கொள்ளத் தடையாக இருந்த முக்கிய விடயங்கள் இரண்டு. ஒன்று றோயல் அல்ஸ்றர் கொன்ஸ்ற்றபியூலரி என்ற ஊழல் மிகுந்த கத்தோலிக்க விரோத பொலிஸ் நிறுவனத்தை மாற்றியமைப்பது. இது சில காலம் முன்ற நடைபெற்று இந்த அமைப்பின் இடத்தில் புதிய வட அயர்லாந்து பொலிஸ் நிறுவப்பட்டுள்ளது. மற்றது பிரித்தானியப் படைகளை மீளப் பெறுவது. இது ஏற்கப்பட்ட பின்னரே ஐ.ஆர்.ஏ. பூரண ஆயுதக்களைவுக்கு உடன்பட்டது.

இந்த ஆயுதக்களைவைச் சரணாகதி என்று சிலர் வருணிக்கிறார்கள். அமெரிக்காவின் அழுத்தம் செப் 11 2001க்குப் பிறகு கூடியதால், அமெரிக்காவிலிருந்து ஐ. ஆர். ஏக்கு ஐரிஷ் கத்தோலிக்கர்கள் நிதி திரட்டுவதில் சிரமம் ஏற்பட்டது என்பதும் ஷின் ஃபெயனின் தலைவர்களை அமெரிக்க அதிகார நிறுவனம் வரவேற்க மறுத்ததும் உண்மை. எனினும் ஐ.ஆர்.ஏ, ஷின் ஃபெயின் மூலமான 1998 பெரிய வெள்ளி உடனபடிக்கையில் தீர்வின் ஒரு பகுதியாக ஆயுதக்களைவை ஏற்றுக்கொண்டது என்பது யாரும் மறக்கக் கூடாத உண்மை.

இந்த ஆயுதக்கையளிப்பின் பின்பும் கத்தோலிக்க மக்களுக்கு நீதி வழங்கப்படாதெனின் இன்னொரு ஆயுதப்போராட்டம் தொடங்கும் என்பதை யாரும் மறக்கலாகாது. அனைத்தினும் முக்கியமான பாடம் ஏதெனில், ஐ. ஆர். ஏ ஆயுதமேந்திப் போராடியிராவிடின் கத்தோலிக்கர்கள் தொடர்ந்தும் இம்சையையும் அவமதிப்பையும் தாங்கிக் கொண்டு இன்னொரு நூற்றாண்டுக்காலம் இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ வேண்டியிருந்திருக்கும் என்பது தான். கத்தோலிக்க மக்களுடைய அடிப்படை உரிமைகட்கான ஐ. ஆர். ஏயின் போராட்டத்திற்கு உலகின் உண்மையான தேசிய விடுதலை இயக்கங்கள் யாவும் ஆதரவளித்தன. நேர்மையான மாக்ஸியவாதிகள் ஆதரவளித்தனர். நியாயம் விரும்புகிற எவருமே ஐ.ஆர்.ஏயை வெறும் பயங்கரவாதிகளாகக் காண்பிப்பதை ஏற்கவில்லை.

அனைத்தினும் முக்கியமாக ஐ.ஆர்.ஏ தனது ஆயுதப்போராட்டம் தேவையானதும் நியாயமானதும் என்ற நிலைப்பாட்டில் இன்னமும் தெளிவாகவும் உறுதியாகவும் உள்ளது.

இன்னொரு ஆயுதப்போராட்டம் நடக்குமா என்பது பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினதும் வடஅயர்லாந்தின் பிற்போக்குவாதிகளதும் நடத்தையிலேயே தங்கியுள்ளது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# குறுகிய அகநிலைப் பார்வையுடன் எழுதப்பட்ட நூல் என்.கே. ரகுநாதனின்

## "ஒரு பனஞ் சோலைக் கிராமத்தின் எழுச்சி"

**ஒரு பனஞ் சோலைக் கிராமத்தின் எழுச்சி, என். கே. ரகுநாதன், குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை 6000 026, ப. 20ะ, இந்திய ரூ. 75.00**

இந்த நூலின் தலைப்பு எதிர்பார்க்கத் தூண்டுகிற விடயமான ஒரு கிராமத்தின் எழுச்சியை இந்த நூலில் எதிர பார்ப்பவர்கள் ஏமாறலாம். இது அக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிறுவன் எப்படிக் கல்வி பெற்றுச் சமூக மேம்பாடடைந்தான் என்பதையே மையமாகக் கொண்ட கதை. தாழ்த்தப்பட்ட ஒரு சமூகத்தினரையே கொண்ட அக்கிராமத்தில் கல்வி வாய்ப்பு நீண்டகாலமாக மறுக்கப்பட்டிருந்தது. அந்த மறுப்பை இயல்பானதாக ஏற்க அம்மக்கள் பழக்கப்பட்டுவிட்டனர். எனினும் இலங்கையில் ஏற்பட்ட சமூக- பொருளாதார மாற்றங்கள் அக்கிராமத்திலிருந்து படித்தவர்கள் உருவாவதற்கு உதவின. நூலாசிரியர் சாதி வெறியர்களின் சீண்டல்களைக் குறிப்பிடும் அளவுக்குப் பாரிய ஒடுக்குமுறைகளைக் குறிப்பிடவில்லை. பல இடங்களில், சாதியமும் சாதி ஒடுக்குமுறையும் காலத்துடன் தாமாகவே வலுவிழந்து விடுகின்றன என்ற எண்ணமே ஏற்படுகிறது. கிறிஸ்துவ, கத்தோலிக்கத் திருச்சபையினரது செயற்பாடுகள் சைவ வெள்ளாளச் சாதிமான்களது ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கு உதவியுள்ளன என்பதுடன் வெள்ளாளர் நடுவிலிருந்தும் தோன்றிய சில முற்போக்காளர்களது பங்களிப்பும் ஏலவே சமூக உயர்வு கண்ட சில தாழ்த்தப்பட்ட சமூகத்தினரது வழிகாட்டலும் உதவின என்பதும் நூலின் மூலம் தெளிவுபடுகிற அளவுக்கு இந்த எழுச்சியை இயலுமாக்க எத்தகைய போராட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பது எங்குமே பதிவாகவில்லை.

சாதியமும் தீண்டாமையும் இன்னமும் ஒழியவில்லை. இன்னமும் எல்லாக் கோயில்களும் எல்லாருக்கும் திறந்து விடப்படவில்லை. இன்னமும் தாழ்த்தப்பட்டோர் தண்ணீர் அள்ள முடியாத கிணறுகள் உள்ளன. இன்னமும் பாரபட்சம் தொடர்கிறது. நிச்சயமாக எத்தனையோ வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன. ஆயினும் இன்னும் வெல்லப்பட வேண்டியன நிறைய உள்ளன. எந்த வெற்றியும் போராடாமல் கிடைத்ததில்லை. நூலாசிரியர், முன்னுரையில் "அடக்குமுறைக்கெதிரான எழுச்சிகளோடு மட்டும் நின்று விடாமல் தமது பிள்ளைகள் கல்வித்துறையிலும் முன்னேற்றம் பெறச் செய்து அகலக் கால் பதித்தார்கள்" என்று தனது கிராமம் பற்றிக் கூறுகிறார்.

அடக்கு முறைகளை எதிர்த்து வெல்லாமல் எப்படி அடுத்த படியை எட்டுவது? எதிர்த்து நின்ற மற்றவர்




கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியை அலட்சியம் செய்தார்களா? எல்லா இடத்திலும் அடக்குமுறை ஒரே அளவிலும் விதத்திலும் இல்லை. இதை நூலாசிரியர் கணிப்பிலெடுத்ததாகத் தெரியவில்லை. கதையின் நாயகன் நூலாசிரியரே என்பதை நூலாசிய ரால் மறைக்க இயலவில்லை. அது ஒரு குறைபாடல்ல. கதையின் நாயகனைப் படர்க்கையில் வைத்து எழுதுகிற நூலாசிரியர் அந்த நாயகனது உணர்வுகள் தவிர்ந்த பிற மாந்தரின் சிந்தனைகளையோ உணர்வுகளையோ தொடத் தவறுவது கிராமத்தை மட்டுமல்லாமல் தன் குடும்பத்தினரது வாழ்க்கையைச் சித்தரிப்பதிலும் குறைந்தளவு கவனத்தைக் காட்டுவதையே குறித்து நிற்கிறது.

முன்னுரையில் நூலாசிரியர் குறிப்பிடும் பலவாறான போராட்டங்கள் நூலில் எந்த வித விவரணமுமின்றிப் போகிற போக்கில் சொல்லப்படுகிற பதிவுகள் போல அமைவதும் ஏமாற்றமளிக்கிறது. பதிப்புரையை எழுதிய கணேசலிங்கன் நூலாசிரியர் தன் குடும்பவாழ்க்கை பற்றிக் கூறாததை ஒரு குறை என்கிறார். நூலாசிரியர் தன் அரசியல் வாழ்க்கை பற்றிக் கூறியவை கூட அரைகுறையாக உள்ளன. பல விடயங்கள் வேண்டுமென்றே தவிர்க்கப்பட்டது போல் தெரிகிறது.

ஒரு சில தவறான தகவல்கள் பற்றியும் குறிப்பிட வேண்டும். ஸி. சுந்தரலிங்கம் என்கிற சாதி வெறியர் இரண்டாம் எலிசபெத் மகாராணிக்குக் கணிதம் கற்பித்தார் என்ற புனைவை நூலாசிரியரும் அப்படியே ஏற்றுக்கொண்டுள்ளார். புலம் பெயர்ந்த நாடுகளில் குருக்கள்மார் கோயில் கட்டிப் பணம் குவிப்பதாக எழுதியுள்ளார். கோயில்களில் ஏகப் பெரும்பாலானவை வணிக நோக்குடைய பிராமணரல்லாதாரால் முழு வியாபாரமாகவே நடத்தப்படுகின்றன. பிராமணர்கட்கு நல்ல வருமானம் இருக்கக் காரணம் ஓடி ஓடி உழைக்கிற தமிழ் மக்களின் மூடநம்பிக்கையோடு இணைந்த பழமைவாதமே.

நூலின் பின்னிணைப்பு மிகவும் பலவீனமானது. நூலாசிரியர் பனையையும் தனது சமூகத்தையும் பற்றிய விளக்கங்களைத் தர வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தனக்கு உருவாக்கி அதை அரைகுறையாக நிறைவேற்றியிருக்கிறார்.

இந்த நூல் தேவையான ஒரு பதிவு எனினும் அது முழுமையாக வழங்கப்படாமை அதன் பெரிய குறைபாடு.

**சிவா**

## கடலின் அக்கரை போனோரே

கடலில் அக்கரை போனோரே
காற்றில் எழுந்து போனோரே
போய்வரும்நாள் ஒன்று என்று வரும்- நீவிர்
மீண்டிடும் நாள் ஒன்று என்று வரும்.
(கடலில் அக்கரை.....)

சமத்துவத்தின் நினைப்பிலே
அகதி வாழ்வின் விருப்பிலே
போனோரே தொலை போனோரே
சமத்துவந்தான் கிடைத்ததோ
இனப்பகைதான் அழிந்ததோ
போனோரே தொலை போனோரே
ஊரை மறந்து போனோரே
உறவைப் பிரிந்து போனோரே
ஊரும் உறவும் அயலில் ஒன்றியபின்- நீவிர்
ஊர்வரும் நாள் ஒன்று என்றுவரும்
(கடலின் அக்கரை....)

அயலாரின் தயவிலே
தனிநாட்டுக் கனவிலே
போனோரே தொலை போனோரே
சுயசார்பு மறைந்ததே
சுதந்திரமும் மறந்ததே
போனோரே தொலை போனோரே
பழம்பெருமைகள் சொல்வோரே
பண்பாட்டின் கதை சொல்வோரே
பேதம் உம்மிடை என்று சென்றொழியும்- நீதி
போதம் உம்மிடம் என்று வந்தடையும்
(கடலின் அக்கரை.....)

அறியாமை இருளிலே
அயலாரின் தயவிலே
வாழ்வோரே தொலை வாழ்வோரே
பண்பாட்டின் பெயரிலே
பழைய குப்பை கிளறியே
வாழ்வோரே தொலை வாழ்வோரே
வாய்ப்பை நாடிப் போனோரே
வசதி தேடிப் போனோரே
வாழ்வின் வசதி நூறு வந்திடினும்- நீவிர்
வாழும் வாழ்க்கை மேன்மை கண்டிடுமோ
(கடலின் அக்கரை...)

போராட்டக் கதையிலே
போனவற்றின் நினைவிலே
வாழ்வோரே தொலை வாழ்வோரே
மரபாளர் புனைவிலே
வரலாற்றின் திரிபிலே
வாழ்வோரே தொலை வாழ்வோரே
தமிழர் ஒற்றுமை என்போரே
தமக்குள் சண்டைகள் செய்வோரே
சாதிசமய பேதமென்றொழியும்- மூடச்
சாத்திரங்களும் என்று விட்டழியும்
(கடலின் அக்கரை....)

**ஸ்வப்னா**

## அமெரிக்க.....

10ம் பக்க தொடர்ச்சி

வாகனங்களிலும் ஓடித்தப்பினர். ஆனால் வாகன வசதியற்ற ஒரு லட்சம் கறுப்பின மக்கள் வெள்ளம் புகுந்த நகரத்திலேயே மாட்டிக் கொண்டனர்.

வறுமையில் வாடும் கறுப்பின மக்கள் 24.7 வீதமாகும். இது வெள்ளையர்கள் உட்பட ஏனைய இனத்தவர்களிடையே நிலவும் வறுமையின் இரட்டிப்பான வீதமாகும். அமெரிக்காவில் தற்போது பொருளாதார ரீதியான புறக்கணிப்பை கறுப்பின மக்களே அதிகம் எதிர்நோக்குகின்றனர். நகரின் ஒரு புறத்தில் வறிய கறுப்பின மக்களும் மறுபுறத்தில் வசதிபடைத்த வெள்ளையரும் என்ற மிகத் தெளிவாக அடையாளம் காணக் கூடிய ஏற்றத்தாழ்வு நிலை அங்கு காணப்படுகிறது.

அமெரிக்காவின் பல்வேறு நகரங்களில் இந்தப் பொருளாதாரப் புறக்கணிப்பு காணப்படுகிறது. நியூயோர்க், பிலோடெல்பியா, டெற்றொயிற், அற்லான்ரா, பால்ரிமோர், சென்லியூஸ், ஓக்லான்ட், மியாமி ஏன் அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் இந்தப்புறக்கணிப்பு அப்பட்டமாகக் காணக்கூடியதாயுள்ளது. வெள்ளை மாளிகையிலிருந்து வாகனத்தில் பத்து நிமிடப் பிரயாணம் செய்தால் அனாகோசியாவை அடையலாம். இது நகரின் மிகமோசமான வறுமை நிலவும் ஒரு இடமாகக் காணப்படுகிறது. அமெரிக்காவில் வறிய கறுப்பின மக்களின் எண்ணிக்கையின் மூன்று மடங்கு வறிய வெள்ளையர்கள் முழு அமெரிக்காவிலும் உள்ளனர். கறுப்பின மக்களிலும் பார்க்க வேகமாக வெள்ளையர்கள் வறுமைக்கோட்டிற்கு தள்ளப்படுகின்றனர்.

அரசாங்கம் காலாவதியான 1963ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட வ றுமை மட்ட அளவு கோலையே இன்றும் பயன்படுத்துகிறது. பல்லாயிரக்கணக்கான உழைக்கும் வறுமையாளர்களின் உணவு உடை உட்பட வீட்டு வாடகை தற்போது பெரிய செலவாகின்றது. வேலை செய்யும் பல ஆயிரக் கணக்கானோர் கார்களிலும், நீண்ட தூர புகையிரதங்கள் பஸ்களிலும் சிறிய கொட்டில்கள் போன்றவற்றிலும் உறங்குகின்றனர். வளர்ச்சியடைந்த கைத்தொழில் நாடுகளில் நிலவும் வறுமையை விட அமெரிக்காவின் வறுமை மிக மோசமானது. "ஒவ்வொரு ஆகஸ்ட்டிலும் அமெரிக்கர்களாகிய நாங்கள் எங்களுக்கே பொய் சொல்லுவோம்" என டியூக் பல்கலைக் கழகத்தில் வறுமை பற்றி ஆய்வு நடாத்தும் பேரா சிரியர் டேவிட் பிராடி கூறுகிறார்.

வறுமைக்கெதிரான யுத்தத்தில் அரசு வெற்றி பெறுவதாகக் காட்டுவதற்காகவே வறுமைக்கோட்டின் கீழ் இருப்பவர்களின் எண்ணிக்கையை குறைத்து வெளியிடுகின்றனர்.

சகலதையும் கணக்கில் எடுத்தால் 18 வீதமானவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளனர். அதாவது 4 கோடி 80 இலட்சம் பேர் வறிய வர்களாக உள்ளனர். அமெரிக்கா வில் நிலவும் வறுமையானது வேறு எந்த வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பார்க்க மோசமானது. உலகில் உள்ள 41 கோடி 60 இலட்சம் பேரின் வருமானத்தின் அளவு உல கின் மிகப் பெரிய 500 பணக்காரர் களின் வருமானத்திற்குச் சமமாகும். வெளி நாடுகளில் இருந்து வேலை வாய்ப்பு பசியுள்ளவர்களை இழுப்பதற்கு அமெரிக்காவில் வருடந் தோறும் 50, 000 பேருக்கு நிரந்தர வதிவிடத்திற்காக நடத்தப்படும் "கிறீ ன்கார்ட்" லொத்தர் முறையுள்ளது. இது போன்று உலகில் வேறு எங்கும் இல்லை.

ஒக்ரொபர் 1ம் திகதியிலிருந்து மணித்தியாலம் ஒன்றிக்கு ஆகக்குறைந்த ஊதியம் 15 சதங்களால் அதிகரிக்கப்பட்டு 6. 35 டொலர்களாகவுள்ளது. இந்த ஊதியம் ஒருவரை வறுமையின் எல்லைக் கோட்டிற்கு மேலே கொண்டு செல்லாது. சுகாதாரக் காப்புறுதி அல்லது விடுமுறை இல்லாமலும் ஆரம்பக் கல்வியை மட்டும் பெற்ற இலட்சக்கணக்கானவர்க்கே இந்த மாதிரியான குறைந்த ஊதிய வேலையே கிடைக்கும்.

ஒரு காலத்தில் கனரக கைத்தொழிலில் பயிற்சிபெறாதவர்கள் நல்ல ஊதியம் பெற்றனர். அது இப்போது அற்றுப் போய்விட்டது. 2001ம் ஆண்டிலிருந்து 27 இலட்சம் உற்பத்தித் தொழிலில் வேலைவாய்ப்பு இழக்கப்பட்டது.

ஒரு ஜனாதிபதி வறுமைக்கு எதிரான யுத்தத்தைப் பிரகடனம் செய்தார். மற்றொரு ஜனாதிபதியான றொனால்ட் றேகன் 1988ல் ஓர் உண்மையைக் கூறினார்:- "சமஷ்டி அரசு வறுமைக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்தது- ஆனால் வறுமையே வெற்றிகண்டது."

**தகவல்: றொயிட்ரர் செய்தி ஸ்தாபனம் ஒக்டோபர் 5ம் திகதியிடப்பட்டு வாஷிங்டனில் இருந்து வெளியிடப்பட்டது**

## பெண்கள் மீதான.....

9ம் பக்க தொடர்ச்சி

கோடி டொடலராகும்" அதே சமயம் 300 கோடி டொலர் மட்டுமே பெண்கள் முன்னேற்றத்திற்கு செலவிடப்படுகிறதெனக்" கூறினார்.

மேற் கூறியவை உலகளவில் பெண்கள் மீதான ஒடுக்கு முறைகள் பற்றிய பொதுவான குறிப்புகளாகும். ஆனால் ஒவ்வொரு நாடுகளிலும் சனத்தொகையில் அரைப்பங்கினைக் கொண்ட பெண்களின் அன்றாட் வாழ்கை நிலை, வேலைப்பளு, வேதனப்பாரபட்சம், பாலியல் சித்திரவதைகள், வன்புணர்ச்சி, இகழ்ச்சி, இரண்டாந்தர நோக்கு, சமத்துவமின்மை, ஆதிக்கத்தாக்கம் போன்றவைகளுடனேயே கழிந்து செல்கின்றன. இவற்றுக்கு மாநாடுகளும் அறிக்கைகளும் எவ்வகையிலும் பரிகாரமாகப் போவதில்லை. இவை முதலாளியத்தின் திசைதிருப்பலுக்கும் ஏமாற்றுகளுக்குமே பயன்படத்தக்கவையாகும். பெண்விடுதலைக்கான ஒரே வழி சமூக மாற்றத்திற்கான புரட்சிகரப் போராட்டங்களும் புதிய சமத்துவ சமூக அமைப்புகளின் உருவாக்கமுமேயாகும்.

**தொகுப்பு: கரன்**

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
புதிய பூமி Puthiya Poomi
சுற்று12 நவம்பர் 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 85

## வருந்துகிறோம்

அண்மையில் பாகிஸ்தான்-இந்திய காஷ்மீர் பிராந்தியத்தில் இடம் பெற்ற நில நடுக்கத்தால் எழுபதினாயிரம் மக்கள் மடிந்துள்ளனர். பல லட்சம் மக்கள் ஏதிலிகளாகி விட்டனர். அவ்வாறே அமெரிக்க, கரிபியன், கியூபா கரையோரப் பிரதேசங்களில் புயல் வெள்ளத்தால் பல ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரது இழப்புக்கும் துயரத்திற்கும் புதிய பூமி தனது ஆழ்ந்த துக்கத்தையும் கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றது. (ஆர்-குழு)

## சுனாமி அழிவுகளுக்கு புனரமைப்பு இல்லை
## மக்களை ஏமாற்றும் நிறுவனங்கள்

எதிர்வரும் டிசம்பர் 26ம் திகதி சுனாமிப் பேரழிவு இடம் பெற்று ஒரு வருடம் பூர்த்தியாக உள்ளது. அந்தப் பேரலை காவு கொண்ட நாற்பதினாயிரம் வரையான மக்களை இழந்துள்ள குடும்பத்தினர் இன்னும் அவ் அதிர்வில் இருந்து மீளவில்லை. உடல் உள பாதிப்புகளில் இருந்து மீளாது சுயவாழ்விழந்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் வீடுகள் இருப்பிடங்கள் தொழில் ஆதாரங்கள் சொத்துக்கள் யாவும் இழந்து இன்றும் பல லட்சம் மக்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர்.

பேரழிவு இடம் பெற்ற போதும் அதனைத் தொடர்ந்த ஒரிரு மாதங்களிலும் காட்டப்பட்ட செய்யப்பட்ட உதவிகள் ஒத்துழைப்புகள் யாவும் விரைவிலே ஒய்ந்துபோயின. அரசாங்கம் அரசு சார்பற்ற நிறுவனங்கள் கூறியவைகளும் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் படிப்படியாகக் காற்றில் பறந்து போய்விட்டன. அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கி வந்த நிவாரணங்கள் இடத்துக்கு இடம் வேறுபட்ட நிலைகளில் தொடர்கின்றபோதிலும் திருப்தியானவையாக இல்லை. குறிப்பாக வீடுகள் இழந்த மக்களுக்கு அவற்றை மீளக் கட்டிக் கொடுப்பதில் பல்வேறு இழுபறிகள் பாரபட்சங்கள் புறக்கணிப்புகள் இருந்து வருகின்றன.

வெளி நாடுகளில் இருந்து வாக்குறுதியளிக்கப்பட்ட சுனாமி நிதி உரியவாறு முழுமையாக வந்து கொள்ளவில்லை. பணக்கார நாடுகளின் வழமையான ஏமாற்றுத்தனம் நடைமுறையாக உள்ளது. பொதுக்கட்டமைப்பின் முடக்கம் இச் சுனாமி நிதி வழங்கப்படாமைக்கு நல்ல சாட்டாக அமைந்துள்ளது.

அவற்றுக்கும் மேலாகக் கிடைத்த நிதி கூட ஊழல் மோசடிகளுக்கும் வீண் விரயங்களுக்கும் உள்ளாகின அரசின் அதிகாரிகள் தொடக்கம் அரசசார்பற்ற நிறுவன உயர் அதிகாரிகள் வரை சுனாமிநிதியைத் தமதாக்கிக் கொண்டனர். ஆங்காங்கே ஏதாவது நடப்பது போன்றவற்றைச் செய்வதன் மூலமே பணம் பண்ண முடியும் என்பதால் சில புனரமைப்புகள் புனர்வாழ்வு செயற்பாடுகள் என இடம் பெறவே செய்கின்றன. அவை மக்களது தேவைகளை நிறைவு செய்வதாக இல்லை. ஆனால் கிழக்கிலும் வடக்கிலும் ஏன் தெற்கிலும் பாதிக்கப்பட்ட சாதாரண மக்கள் இன்றும் அவல வாழ்வே வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு கை கொடுத்து மீட்டு இயல்புவாழ்க்கைக்குள் கொண்டுவர திட்டமிட்ட செயற்பாடுகள் அவசியம். யார் செய்வது? யாரிடம் மக்கள் எதிர்பார்ப்பது? பாதிக்கப்பட்ட சாதாரண உழைக்கும் மக்கள் துன்பக் கேணியில் வாழ்வது தான் நியதியா? நியதிகள் நிரந்தரமானவை அல்ல. இனி ஒரு விதி செய்வது என மக்கள் சிந்தித்து விழிப்புற்று எழுந்தால் எதனையும் மாற்றி அமைக்கமுடியும்.



மறைந்த மாக்சிச லெனினிச வாதியும் புதிய-ஜனநாயக கட்சியின் அரசியல் குழு உறுப்பினருமான தோழர் சி.நவரட்ணம் (நவம்) அவர்களின் முதலாம் வருட நினைவுக் கூட்டம் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர் இ.தம்பையா தலைமை தாங்கி உரை யாற்றுவதையும் தோழர் சோ.தேவராஜா நினைவுரை நிகழ்த்துவதையும் தோழர் சி.கா.செந்திவேல் இன்றைய சூழலில் சமாதானமும் ஜனநாயகமும் என்னும் தலைப்பில் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துவதையும் கூட்டத்தில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

## சனாதிபதி தேர்தல் பற்றி
## புதிய-ஜனநாயக கட்சியின்
## மத்திய குழுத் தீர்மானம்

நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றத்திற்கோ மக்களின் வாழ்க்கைத் தர சுபீட்சத்திற்கோ தேசிய இனங்களின் அடிப்படை இருப்பிற்கான உரிமைகளுக்கோ ஜனாதிபதி ஆட்சி முறை எவ்வித பலாபலன்களையும் நன்மைகளையும் வழங்கவில்லை. அதேவேளை அனைத்து உழைக்கும் மக்களினதும் தேசிய இனங்களினதும் உரிமைகளையும் கோரிக்கைகளையும் மறுத்து அடக்குமுறைகளை பல வடிவங்களில் முன்னெடுத்து வருவதே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையாகும். அத்தகைய முறைமைக்கும் அதற்குக் காரணமான அரசியலமைப்புக்கும் எதிர்ப்புத் தெரிவித்து மாற்றங்களைக் கோரி நிற்கும் ஒரு பொது வேட்பாளர் தமிழ் முஸ்லீம் மலையகத் தேசிய இனங்களினதும் தெற்கின் இடதுசாரி ஜனநாயக சக்திகளினதும் சார்பாக நிறுத்தப்படுவதையே எமது கட்சி விரும்பியது. அதற்கான சூழல் இல்லாத நிலையிலேயே இரண்டு பேரினவாத முதலாளித்துவ கட்சிகளில் இருந்தும் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை எமது புதிய- ஜனநாயக கட்சி முற்றாக நிராகரிக்கின்றது. அத்துடன் மக்களின் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் வாக்குச் சீட்டுகளைச் செல்லுபடி அற்றதாக்க வேண்டும் எனவும் எமது கட்சி சகல மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றது. இவ்வாறு செப்ரெம்பர் 27ம், 28ஆம் திகதிகளில் நடைபெற்ற புதிய- ஜனநாயக கட்சியின் மத்திய குழு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பற்றி ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறியுள்ளது.

மேலும் அத்தீர்மானம் கூறுவதாவது, இந் நாட்டிற்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை 1978ம் ஆண்டு மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவாலும் ஐக்கிய தேசியக்கட்சி யினாலும் கொண்டு வரப்பட்டதாகும். அவர்கள் பதினேழு வருடகால இருண்ட ஆட்சியை அந்த முறைமையின் கீழ் நடாத்தினார்கள். அதற்கு பின 1994ம் ஆண்டிலிருந்து தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அதனோடு இணைந்தவர்களும் அதே ஜனாதிபதி ஆட்சியை முன்னெடுத்தார்கள். மொத்தம் 27 வருடகால ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் இந்த நாடு முன்னேற்றப் பாதையிலோ மக்களுக்கு சுபீட்சம் தரும் வகையிலோ செல்லவில்லை. அதற்குப்பதிலாக பொருளாதார அரசியல் சமூக கல்வி சுகாதார பண்பாட்டுப் பிரச்சினைகளையும் நெருக்கடிகளையும் சீரழிவுகளையும் நாட்டு மக்கள் சுமைகளாகவும் துயரங்களாகவும் கொடுமைகளாகவும் அனுபவித்து வந்துள்ளனர். அதே வேளை அந்நிய ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளின் மூலதன ஊடுருவல்களுக்கும் அரசியல் ராணுவத் தலையீடுகளுக்கும் இவ் ஜனாதிபதி ஆட்சி முறை வழியமைத்து வரவேற்று வந்துள்ளது.

குறிப்பாக இவ் ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் தான் கால் நூற்றாண்டுகால பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் வடக்கு கிழக்கின் மீதும் தமிழ்த் தேசிய இனத்தின் மீதும் திணிக்கப்பட்டு முன்னெடுக்கப் பட்டது. அதன் தாக்கம் முஸ்லீம், மலையகத் தமிழ் தேசிய இனங்களுக்கும் கடும் பாதிப்புக்களைக் கொண்டு வந்தது. வடக்கு கிழக்கின் எல்லைப்புற சிங்கள மக்களையும் இப்பேரினவாத ஒடுக்குமுறை யுத்தம் விட்டுவைக்கவில்லை. எனவே தான் இந்த நாட்டின் அனைத்து தொழிலாளர்கள் விவசாயிகள் அறிவுஜீவிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் எவ்வகையிலும் பயனளிக்காத அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்காத நன்மைகளைக் கொண்டுவராத நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் கீழ் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் ஜனாதிபதித் தேர்தலை எமது கட்சி முற்றாக நிராகரிக்கின்றது. அதற்கான வாக்குச்சீட்டுகளை செல்லுபடியற்றதாக்கி மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும் எனவும் கோருகின்றது.

**இ.தம்பையா**
**தேசிய அமைப்பாளர்**

**சி. கா.செந்திவேல்**
**பொதுச் செயலாளர்**

### வடக்கு கிழக்கிற்கு......
1ம் பக்க தொடர்ச்சி

இந்த வாக்குறுதி ஒரு பிரதான துரும்புச் சீட்டாக முன்வைக்கப்பட்டுள்ளது என்றே காணுதல் வேண்டும். அது மட்டுமன்றி ஜனாதிபதி சந்திரிக்காவுடன் இரண்டு மணி நேரப் பேச்சுவார்த்தை நடாத்தியதை அடுத்தே ரணில் இப்பிராந்திய சபை பற்றிய கருத்தை வெளியிட்டுள்ளார். இதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உருவாகியுள்ள உள் முரண்பாடுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதன் மூலம் கணிசமான வாக்குகளை தனதாக்கும் தந்திரோபாயத்தையும் ரணில் கையாள நிற்கிறார். மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி- ஹெல உறுமயவுடன் சேர்ந்து நின்று ஒற்றையாட்சி பற்றி உரத்துக் கூறி சிங்கள மக்களின் வாக்குகளைப் வெளிப்படையான பேரினவாதத்தின் மூலம் பெற்றுக் கொள்ள நிற்கிறார். அதே வேளை ரணில் விக்கிரமசிங்கா உள்ளார்ந்த பேரினவாத நிலைப்பாட்டுடன் நின்று சமஷ்டி சமாதானம் பற்றிக் கூறி மலையக மக்கள் முஸ்லீம்களின் வாக்குகளைப் பெற நிற்கின்றார். இந்நிலையில் மேலும் ஒரு படி சென்றுள்ளதாகக் காட்டி வடக்குகிழக்கு தமிழ் மக்களின் வாக்குகளுக்கு வலை வீசவே பிராந்திய சபை பற்றிக் கூறியுள்ளார். இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இணக்கப்பாடு உள்ளதாகவும் அதற்குச் சாட்சியமாக சந்திரிகா அம்மையாருடனான சந்திப்பையும் பயன்படுத்துகிறார்.

ரணில் விக்கிரமசிங்காவின் இவ் அறிவிப்பை தமிழ் மக்கள் நம்பவேண்டுமா? சர்வாதிகாரக் கதிரைக்கு வருவதற்கான ஆகக் கூடிய முயற்சியில் இதுவும் ஒன்றே தவிர அவர் சமாதானத் தேவதையும் அல்ல நியாயமான தீர்வைக் கொண்டு வருபவரும் அல்ல. ஆதலால் அவர் போட்டுள்ள பிராந்திய சபை என்ற இரண்டு தேர்தல் வெற்றிக்கான வெறும் புகைக் குண்டேயாகும். இதனை ஒரு பொருட்டாக எடுக்காது தமிழ் மக்கள் இத்தேர்தலை புறக்கணித்து நிராகரிப்பதே சரியான தெரிவாக இருக்க முடியும்.

### ஜனாதிபதி தேர்தலை...
1ம் பக்க தொடர்ச்சி

நாட்டின் சுதந்திரம் இறைமை சுயாதிபத்தியம் என்பன அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிடியிலும் இந்திய மேலாதிக்கத்தின் பிடியிலும் மாட்டிக்கொண்டுள்ளன.

அதேவேளை சமாதான நடவடிக்கைகள் என்ற பேரில் பல ஏமாற்று நாடகங்கள் இழுத்தடிக்கப்பட்டு வந்துள்ளன. இதில் இரு பிரதான கட்சிகளும் இதுவரை உருப்படியாக எதையும் செய்யவில்லை. யுத்தத்தை முன்னெடுப்பதில் தொடர்ந்து முன்னின்று வந்துள்ளன.

இந்நிலையில் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களின் விஞ்ஞாபனங்கள் எவ்வித விமோசனத்தையும் தந்து விடப்போவதில்லை.

நிலைமைகள்இவ்வாறிருக்கும் போது பல பிரச்சினைகளுக்கு காரணமான இந்த ஜனாதிபதி முறைமை எதற்கு? யாருக்காக அந்தப் பதவி? நிச்சயமாக இந்நாட்டின் ஆகக் கூடிய எண்ணிக்கையான மக்களுக்காக அல்ல என்பதே உண்மையாகும்.

எனவே இவ்வாறான ஜனாதிபதித் தேர்தலை நிராகரிப்போம்! வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியற்றதாக்கி வாக்குப் பெட்டிகளுக்குள் போட்டு எமது எதிர்ப்பை காட்டுவோம். செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கையை அதிகரிகச் செய்வோம். எமது எதிர்ப்பைக் காட்டி மக்கள் சக்தியை கட்டி வளர்ப்பதற்கு முதாளித்துவ தேர்தல் ஜனநாயகத்தின் தோலை உரித்து அம்பலமாக்குவோம்.

### மலையக மக்களின்....
1ம் பக்க தொடர்ச்சி

பறித்ததும் தமது உயர் வர்க்க அதிகாரத்திற்காகவே. பின்பு வழங்கியமையும் அவ் வாக்குகளை தமதாக்கவே தான். அவ்வாறே சிறிலங்கா சுதந்திரக் கட்சி வழங்கியதாகக் கூறப்படும் சலுகைகளும் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவேயாகும்.

ஆனால் மலையக மக்களின் வாக்குப் பலம் உரியவாறு பயன்படுத்தப்படவில்லை என்பது தான் விசனத்திற்குரியதாகும். அடிப்படையில் வாக்குப் பலத்தால் இன்றைய அமைப்பில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்து விட முடியாது என்பது உண்மை. ஆனால் போராட்டக் கோரிக்கைகளுடன் இணைத்து உரியநிலைநின்று பயன் படுத்தினால் சில வரையறுக்கப்பட்ட பிரச்சினைகளுக்கான உரிமைகளையாவது பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும்.

நிலம் வீடு தொழில் சம்பளம் மொழி கல்வி சுகாதாரம் பண்பாட்டுத் தேவைகள் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கான பிரச்சினைகளை மலையக மக்கள் எதிர்நோக்கி நிற்கின்றனர். இவற்றுக்கான உரிமைகளை ரணிலோ அன்றி மகிந்தவோ பெற்றுக் கொடுப்பார்களா? என்பதையிட்டு அரசியல் நிலைநின்று குறிப்பாக இளந்தலைமுறையினர் சிந்திப்பது இவ் வேளை அவசியமானதாகும். சாய்ந்தா சாயற பக்கம் செல்லுகின்ற நிலையை மாற்றி இத் தேர்தலில் இரண்டு பேரினவாத முதலாளித்துவ வேட்பாளர்களான ரணிலையும் மகிந்தாவையும் மட்டுமன்றி முழு ஜனாதிபதித் தேர்தலையும் நிராகரித்து மலையக மக்கள் தமது எதிர்ப்பைக்காட்ட வேண்டும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.